JANUARY 02, 2018
TUESDAY
VOL: 003/161
RS. 10.00
LATE CITY ★

Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

## ஐ.தே.க, சு.க கூடுகின்றன

ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் இவ்வாரத்துக்குள் தனித்தனியாகக் கூடி, பல்வேறான விடயங்கள் தொடர்பில் விரிவாக ஆராயவுள்ளனவெனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தேசிய அரசாங்கத்தை உருவாக்குவதற்காக, இவ்விரு கட்சிகளும் இணைந்து செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நீடிப்புக் காலம், கடந்த டிசெம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் நிறைவடைந்தது.

இந்நிலையிலேயே, இவ்விரு கட்சிகளும் தனித்தனியாகக் கூடவுள்ளனவென, அந்தத் தகவல் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## யுத்தக் குற்றச்சாட்டுகள்; மார்ச்சில் இறுதி முடிவு



யுத்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பிலான ஜெனீவா யோசனை குறித்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் இளவரசர் ஷெயிட் அல் ஹுசைன், தன்னுடைய இறுதித் தீர்மானத்தை, மார்ச் மாதம் 21ஆம் திகதியன்று அறிவிக்கவுள்ளார் என்று, தகவல்கள் கசிந்துள்ளன.

தொடர்ச்சி P2

## மொட்டு வேட்பாளர் மரணம்

■ பாலித்த ஆரியவங்ச

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில், தாமரை மொட்டுச் சின்னத்தில், எல்ல பிரதேச சபைக்குப் போட்டியிட்ட, கும்பல்வெல ஹெட்டிபொலவை வசிப்பிடமாகக் கொண்ட 36 வயதான எம். எம். சஞ்ஜீவ, ஞாயிற்றுக்கிழமை திடீரென மரணமடைந்துள்ளார்.

தொடர்ச்சி P2

## ‘முஸ்லிம் காங்கிரஸ் கபட நாடகம் ஆடியுள்ளது’

■ பேரின்பராஜா சபேஷ்



“நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில், ஏறாவூரிலே மரச்சின்னத்தில் இம்முறை போட்டியிடாது, ஸ்ரீ முஸ்லிம் காங்கிரஸ் கபட நாடகமாடியுள்ளது” என, முன்னாள் அமைச்சரும் ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் தவிசாளருமான பஷீர் சேகு தாவூத் தெரிவித்தார்.

இந்த விவகாரம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

”ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைத் திருப்திப்படுத்த வேண்டும் என்பதற்காகவும், முன்னாள் முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் மற்றும் அலிஸாஹிர் மௌலானாவுக்குமிடையே முரண்பாடு என்பதையும் அடிப்படையாக வைத்துதான் முஸ்லிம் காங்கிரஸ் இம்முறை போட்டியிடுகின்றது.

தொடர்ச்சி P2

## 3ஆம் திகதி முக்கிய அறிவிப்பு



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நாளை 3ஆம் திகதி புதன்கிழமையன்று முக்கிய அறிவிப்பொன்றை விடுக்கவுள்ளார்.

மத்திய வங்கி பிணை முறி விநியோகம் தொடர்பில் விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

### புதனுக்குள் மைத்திரி

# வாளை எடுப்பார்



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தன்னுடைய வாளை, இன்று செவ்வாயக்கிழமை அல்லது நாளை புதன்கிழமையன்று எடுப்பாரென, நம்பத் தகுந்த வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

“ஊழல், மோசடிகள் இல்லாத தூய்மையான அரசியலை உருவாக்க வேண்டுமென்பதே எனது இலக்காகும். இதற்கான நடவடிக்கையின்போது, தனது வாளுக்கு சிக்கப் போவது யார் எனத் தெரியாது” என்று, டிசெம்பர் மாதம் 28ஆம் திகதியன்று, ஜனாதிபதி மைத்திரிபால தெரிவித்திருந்தார்.

தொடர்ச்சி P2

**தன்னுடைய நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்துவார்**

**தனது தலைமைத்துவ அதிகாரத்தை பயன்படுத்துவார்**



குப்பை மலையில் தீ...

கொலன்னாவை, மீதொட்டுமுல்ல குப்பை மலையின் ஒருபகுதி, நேற்று (02) தீப்பற்றிக்கொண்டது. குப்பைமலை சரிவு ஏற்பட்ட இடத்துக்கு அண்மையிலேயே தீ பரவியுள்ளது. இதனையடுத்து, விரைந்து செயற்பட்ட தீயணைப்புப் பிரிவினர், தீயைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் முயற்சிகளில் ஈடுபட்டனர்.

## ‘செய்தியை உரத்துக் கூற மக்கள் தயாராக வேண்டும்’

■ வடிவேல் சக்திவேல்



“தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே, தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்ற செய்தியைக் கடந்த காலங்களில் நடைபெற்ற பல தேர்தல்களில், உரத்துக் கூறியுள்ளீர்கள். இத்தேர்தலிலும் அச்செய்தியை எடுத்துக் கூற, தமிழ் மக்கள் தயாராக வேண்டும்” என மட்டக்களப்பு மாவட்டம், எருவில் வட்டாரம் சார்பாகப் போட்டியிடும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் சி.காண்டீபன் தெரிவித்தார்.

எருவில் பகுதியில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



### ஊடக வழிகாட்டு நெறி யோசனையில்

## பிரதமர் இன்று கைச்சாத்து

ஊடக வழிகாட்டு நெறி யோசனையை, நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து, அதனை நிறைவேற்றிக்கொள்வதற்கான யோசனையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இன்று 2ஆம் திகதியன்று கைச்சாத்திடுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## வலம்புரியுடன் நால்வர் கைது



டைட்டேரியன் வகையைச் சேர்ந்த வலம்புரிச் சங்கை, 40 மில்லியன் ரூபாய்க்கு விற்பனை செய்வதற்கு முயற்சித்த நால்வரை கைதுசெய்துள்ளதாக, வத்தளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

தமக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, மாபோலை பகுதியில் வைத்து ஞாயிற்றுக்கிழமை (31) இரவு 8.40க்கு, இந்த நால்வரையும் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

## உள்ளே

வவுனியா முடங்கியது P4
வற்றாப்பளை-புதுக்குடியிருப்பு வீதிக்கு விமோசனம் P4
பொலித்தீன், பிளாஸ்டிக் எரிப்பதற்கும் தடை P10

## கொங்கிறீட்டில் சிறுவன்; 2 பேருக்கு கைவிலங்கு



ஹாட்வெயார் ஒன்றில் கொங்கிறீட் வேலைகளைச் செய்துகொண்டிருந்த 10 வயதான சிறுவனொருவன் மீட்கப்பட்டுள்ளார். இதேவேளை, அச்சிறுவனை வேலைக்கமர்த்திய குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம், பண்டாரகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பண்டாரகம - பிலியந்தலை வீதியில் உள்ள ஹார்ட்வெயார் ஒன்றில், கடந்த 31ஆம் திகதியன்று இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2

## ரூ.650 மோசடி; 5 பேர் கைது



பெற்றோரிடம் தலா 650 ரூபாயைப் பெற்று மோசடி செய்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில், பெண்ணொருவர் உட்பட ஐந்து பேர், இருவேறு பிரதேசங்களில் கைதுசெய்யப்பட்டுள்ளனரென, பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2





காலி மக்குலுவ ஜும்மா பள்ளிவாயிலிலுள்ள, நீர்த்தடாகத்தில், நீராடிக்கொண்டிருந்த, வெலிமடையைச் சேர்ந்த 17 வயதான சிறுவர்கள் இருவர், நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின், ஹம்பாந்தோட்ட மாவட்ட காரியாலத்தின், ஒலிபெருக்கிகளைத் தங்காலை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இந்தக் காரியாலயம், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் திறக்கப்படவிருந்தது.





## ஐ.தே.க, சு.க கூடுகின்றன

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்குப் பின்னர், தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிப்பதா அல்லது இல்லையா என்பது தொடர்பில், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டத்தில் முடிவெடுக்கப்படுமென அறியமுடிகிறது.

இந்த ஒப்பந்தமானது, செப்டெம்பர் மாதத்துடன் நிறைவடைந்தது. எனினும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கோரிக்கைக்கு அமைவாக, அவ்வொப்பந்தத்தின் காலம், டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி வரையிலும் நீடிக்கப்பட்டது.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் காலவதியானாலும், எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்குப் பின்னரே, தேசிய அரசாங்கத்தில் தொடர்ந்து அங்கம் வகிப்பதா அல்லது இல்லையா என்பது தொடர்பில் சுதந்திரக் கட்சி தீர்மானிக்குமென அறியமுடிகின்றது.

## யுத்தக் குற்றச்சாட்டுகள்: மார்ச்சில் இறுதி முடிவு

மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் அல் ஹுசைன், தன்னுடைய பதவியிலிருந்து 2018ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் விலகவுள்ளார். இந்நிலையிலேயே, இலங்கை தொடர்பிலான அறிவிப்பை, மார்ச் மாதத்தில் அவர் விடுக்கவுள்ளாரென அறியமுடிகிறது.

ஜெனீவா யோசனைகள் தொடர்பில், எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவேண்டிய செயற்பாடுகள் என்ன என்பது தொடர்பில், பரிந்துரைகளை விடுப்பாரென எதிர்பார்க்கப்படுகிறது.

யுத்தக்குற்றப் பொறிமுறைகளை, இலங்கை இதுவரையிலும் செயற்படுத்தாமல் இருப்பதாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பிலும், மனித உரிமைகள் ஆணையாளர், தன்னுடைய மார்ச் மாத அறிவிப்பில், விசேட கவனம் செலுத்துவாரென எதிர்பார்க்கப்படுகிறது

## மொட்டு வேட்பாளர் மரணம்

மாரடைப்புக் காரணமாகவே, அவர் உயிரிழந்துள்ளாரென, ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது என, எல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

வர்த்தகரும் விவசாயியுமான அவர், ஒரு பிள்ளையின் தந்தையாவார். திடீரென சுகயீனமடைந்த அவர், பதுளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னரே உயிரிழந்துள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## 'செய்தியை உரத்துக் கூற மக்கள் தயாராக வேண்டும்'

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

"உண்மையில் எமது, எருவில் கிராமம் மிகவும் பின்தங்கியதொரு கிராமமாகக் காணப்படுகின்றது. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஊடாக எமது கிராமத்தை, நாமே அபிவிருத்தி செய்வதற்கான வாய்ப்பு ஏற்படும். இதனால் எமது கிராமம், எதிர்காலத்தில் மிகவும் சிறப்பான வளர்ச்சிப் பாதைக்குச் செல்வதற்கு வாய்ப்பு ஏற்படும்.

"என்னைப் பொறுத்தளவில், பந்நெடுங்காலமாக, கிராமத்தின் அபிவிருத்திக்காக, சங்கங்கள், கழகங்கள் ஊடாக நான் செயற்பட்டு வந்துள்ளேன். கிராமத்தில் எங்கு என்னனென்ன தேவைகள் இருக்கின்றன என்பது பற்றி எனக்கு கண்கூடாகவுள்ளது. ஆகவே, இதனை நான் செவ்வனே மேற்கொள்வதற்கு, எனக்கு இத்தேர்தலூடாக மக்கள் அங்கிகாரம் வழங்குவார்கள்.

"எருவில் கிராமம் என்பது பந்நெடுங்காலமாக தமிழ்த் தேசியத்தின்பால் ஒருமித்து நிற்கின்ற கிராமமாகும். எமது கிராம மக்கள் இந்த விடயத்தில் சரியான தீர்மானத்தை எடுக்ககூடிய பக்குவம் அவர்களுக்குண்டு. கிராமத்தின்பால் யார் பற்றுக்கொண்டு செயற்படுவார்கள் என்பதை அவர்கள் நன்கு அறிந்து வைத்திருக்கின்றார்கள். அதனை இத்தேர்தலின் ஊடாக வெளிக்காட்டுவார்கள்.

"தற்போதைய காலகட்டத்தில் நாங்கள் எதிர்கொள்ளவிருக்கும் இத்தேர்தலானது அனைவரும் அனைத்து கட்சிகளும் கூறுவது போன்று வெறும் அபிவிருத்தியை மட்டும் மையமாகக் கொண்ட தேர்தல் என்பதை, நாங்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. மாறாக தமிழ்த் தேசியத்துடன் கூடிய அபிவிருத்தியை வென்றெடுப்பதற்கான தேர்தலாகதான் இத்தேர்தலை தமிழ் மக்களாகிய நாங்கள் நோக்க வேண்டும்" என்றார்.



## இராணுவ ஏற்பாட்டில் விசேட வழிபாடு

சண்முகம் தவசீலன்

படையினர் அபகரித்திருந்த, கேப்பாபுலவு மக்களுக்குச் சொந்தமான காணிகளிலிருந்து 133.4 ஏக்கர் காணியை, படைத்தரப்பினர், கடந்த 28ஆம் திகதி மக்கள் முன்னிலையில் மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளித்தனர்.

இதன்போது, கேப்பாபுலவு பகுதியில் 111.5 ஏக்கர் காணிகளும் சீனியாமோட்டை பகுதியில் மீதமான 21.84 ஏக்கர் காணிகளுமாக மொத்தமாக 133.34 ஏக்கர் காணிகள் கையளிக்கப்பட்டது.

இதனடிப்படையில், விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்கு மக்கள் நேற்றுச் சென்றனர். அங்குள்ள பிள்ளையார் ஆலயத்தில், பொங்கல் பொங்கி விசேட வழிபாடுகள் இடம்பெற்றன. இதற்கான சகல ஏற்பாடுகளையும் இராணுவத்தினர் மேற்கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



# வாளை எடுப்பார்

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில், அன்று நடைபெற்ற ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பான வேலைத்திட்டங்களை ஆரம்பித்துவைத்து உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், ஊழல், மோசடிகளுக்கு எதிராக தன்னுடைய நிறைவேற்று அதிகாரத்தையும் கட்சியின் ஒழுக்கத்தை மீறுவோருக்கு எதிராக, தன்னுடைய தலைமைத்துவ அதிகாரத்தை பயன்படுத்துவார் என்ற இரண்டு கருத்துப்படவே, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தன்னுடைய உரையில், நாசுக்காக் கூறியிருந்தாரென, கட்சி வட்டாரங்கள் தெரிவித்திருந்தன.

அப்படியாயின், தாமரை மொட்டைச் சின்னமாகக் கொண்ட, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில் இணையவுள்ள ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களுக்கு எதிராக, அவர் தன்னுடைய தலைமைத்துவ அதிகாரத்தை இன்று (02) முதல் பயன்படுத்துவார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பாளர்களை அறிமுகப்படுத்தும் மாநாடு, கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் இன்று (02) நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதில், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் இணைந்துகொண்டு, உறுப்புரிமையை பெற்றுக்கொள்ளவுள்ளனரென அறியமுடிகின்றது.

இதேவேளை, மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணைமுறி மோசடி தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை மற்றும் பரிந்துரைகள் தொடர்பிலான விசேட அறிவிப்பொன்றை, ஜனாதிபதி, நாளை (03) விடுக்கவுள்ளார்.

இதன்போது, தன்னுடைய நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தி, ஊழல், மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகளை எடுக்குமாறு, பணிப்புரை விடுப்பாரென, மற்றுமொரு தகவல் தெரிவிக்கிறது.

## 3ஆம் திகதி முக்கிய அறிவிப்பு

1,400 பக்கங்களைக் கொண்ட அவ்வறிக்கையை, ஆணைக்குழுவின் செயலாளர் உடுகம்சூரிய, கடந்த 30ஆம் திகதியன்று கையளித்தார்.

இந்நிலையில், அவ்வறிக்கையை அடிப்படையாக வைத்து, குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கையை எடுக்கவேண்டுமென, பலரும் வலியுறுத்தி வருகின்றனர்.

அத்துடன், அவ்வறிக்கையை, பொது நிறுவனங்கள் பற்றிய நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு (கோப்) கையளிக்குமாறு, அக்குழுவின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தி கோரியுள்ளார்.

இந்நிலையிலேயே, ஆணைக்குழுவின் அறிக்கை மற்றும் பரிந்துரைகள் தொடர்பிலான விசேட அறிவிப்பொன்றை, ஜனாதிபதி நாளையதினம் விடுக்கவுள்ளார்.

## வலம்புரியுடன் நால்வர் கைது

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள், மருதானை, வெல்லம்பிட்டிய மற்றும் கிராண்ட்பாஸ் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 31, 34, 36, 37 வயதானவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களை, வத்தளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவித்த வத்தளைப் பொலிஸார், இந்த விவகாரம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

## ரூ.650 மோசடி 5 பேர் கைது

அவிசாவளை, இரத்தினபுரி ஆகிய பிரதேசங்களிலேயே, இந்தச் சம்பவங்கள், ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளன.

கைதுசெய்யப்பட்ட ஐவரில், இருவரை, அவிசாவளை நீதவான் நீதிமன்றத்திலும் ஏனைய மூவரையும், இரத்தினபுரி நீதவான் நீதிமன்றத்திலும் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவென, அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அவிசாவளையில்

தெஹியோவிட்ட, பிரிவென மண்டபத்தில் ஆங்கில மொழிப்பரீட்சை நடத்தப்படவுள்ளதாகக் கூறி, அதற்கான நுழைவுக் கட்டணமாகத் தலா 650 ரூபாயை, சந்தேகநபர்கள் இருவரும், 84 பேரிடம் அறவிட்டுள்ளனர்.

எனினும், பரீட்சை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்ட கடந்த 31ஆம் திகதியன்று, அதற்கான ஏற்பாடுகள் எதுவுமே, அந்த மண்டபத்தில் இடம்பெறவில்லை. இதனால், ஆத்திரமடைந்த பெற்றோர்கள், ஏற்பாட்டாளர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

**"2018ஆம் ஆண்டு, புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்காக, எழுத்துமூல மற்றும் வாய்மூல பரீட்சைகள் நடத்தப்படவுள்ளதாகக் கூறி, சந்தேகநபர்கள் மூவர் பணம் அறவிட்டுள்ளனர்**

இந்த விவகாரம், அவிசாவளை பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டதை அடுத்தே, குருவிட்ட பகுதியைச் சேர்ந்த 43 மற்றும் 49 வயதான இருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

### இரத்தினபுரியில்

2018ஆம் ஆண்டு, புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்காக, எழுத்துமூல மற்றும் வாய்மூல பரீட்சைகள் நடத்தப்படவுள்ளதாகக் கூறி, சந்தேகநபர்கள் மூவர் பணம் அறவிட்டுள்ளனர்.

இந்தப் பரீட்சை, இரத்தினபுரி நகரத்திலுள்ள விகாரையொன்றில் கடந்த 31ஆம் திகதியன்று, காலை 8:30 முதல் 12:30 மணிவரையிலும் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பரீட்சைக் கட்டணமான 650 ரூபாயை, வங்கியில் வைப்பிலிட்டு, அதற்கான பிரதியை எடுத்துவருமாறும் ஏற்பாட்டாளர்கள், பெற்றோரை அறிவுறுத்தியுள்ளனர்.

பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படுமென்றும், அந்த சான்றிதழைப் பெற்ற மாணவர்களுக்கு, கல்வியமைச்சு நடத்தும் புலமைப்பரிசில் பரீட்சையின் போது, மேலதிகமாக 6 புள்ளிகள் வழங்கப்படுமென்றும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அதனடிப்டையில், தங்களுடைய பிள்ளைகளுடன், பெற்றோரும் படையெடுத்துள்ளனர். 4 மணித்தியாலப் பரீட்சைக்காக, மண்டபத்தில் அமர வைக்கப்பட்ட தங்களுடைய பிள்ளைகள், பரீட்சையை முடித்துக்கொண்டு 30 நிமிடங்களிலேயே மண்டபத்தை விட்டு வெளியேறியுள்ளனர்.

இதில், சந்தேகம் கொண்ட பெற்றோர்கள், குறுகிய நேரத்துக்குள் பரீட்சை நிறைவடைந்தமைக்கான காரணத்தை ஏற்பாட்டாளர்களிடம் கேட்டுள்ளனர். எனினும், அக்கேள்விக்கான உரிய பதிலெதுவும் ஏற்பாட்டாளர்களிடமிருந்து கிடைக்கவில்லை.

இதனையடுத்து, இவ்விவகாரம் தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. விரைந்து செயற்பட்ட பொலிஸார், பெண்ணொருவர் உட்பட மூவரைக் கைதுசெய்தனர். அத்துடன், அவர்கள் வருகைதந்ததாகக் கூறப்படும் வாகனத்தையும் கைப்பற்றினர்.

கைதுசெய்யப்பட்டவர்கள், நிவித்திகல ஓப்பநாயக்க பிரதேசத்தைச் சேர்ந்த 23, 28 மற்றும் 35 வயதுகளையுடையவர்கள் எனத் தெரிவித்த பொலிஸார், அவர்களை, இரத்தினபுரி நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

## பிரதமர் இன்று கைச்சாத்து

அரசியலமைப்பின் பிரகாரம், சாதாரண மற்றும் பக்கச்சார்ப்பற்ற தேர்தலை நடத்துவதற்காக, தேர்தல்கள் ஆணைக்குழுவால், இந்த வர்த்தமானி அறிவித்தல், 2017 டிசெம்பர் மாதம் 04ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது.

அலரிமாளிகையில் வைத்தே இன்றையதினம் கைச்சாத்திடப்படுமென பிரதமர் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. அமைச்சரவையால் அங்கிகரிக்கப்பட்ட இந்த ஊடக வழிகாட்டு நெறி யோசனைக்கு, நாடாளுமன்றத்தில் அனுமதி கிடைப்பதன் ஊடாக, அது சட்டரீதியானதாகும் என்பதுடன், இந்த ஊடக வழிகாட்டு நெறியைக் கடைப்பிடிக்கவேண்டியது ஊடகங்களின் கடப்பாடு மட்டுமன்றி,

**"அலரிமாளிகையில் வைத்தே இன்றையதினம் கைச்சாத்திடப்படுமென பிரதமர் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது**

பொறுப்பாகும் என்றும் பிரதமர் அலுவலகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனூடாக, எதிர்காலங்களில் நடைபெறும் சகல தேர்தல்களும் நீதியானது, நியாயமானதுமான முறையில் இடம் பெறுவதற்கான ஓர் அங்கமான ஊடகத்தைப் பயன்படுத்தும் போது, பக்கச்சார்பின்றி மற்றும் நியாயமானது என்பது உறுதிப்படுத்தப்படும். இது, நல்லாட்சியின் மற்றுமொரு வெற்றியாகுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொங்கிறீட்டில் சிறுவன்; 2 பேருக்கு கைவிலங்கு

அந்த ஹார்ட்வெயாரை, அன்றையதினம் பகல் 12:05க்கு திடீரென சுற்றிவளைத்த பொலிஸார், சிறுவனை மீட்டுள்ளனர். அத்துடன், பத்தேகொடவைச் சேர்ந்த 34 வயதான நபரையும் ஹார்ட்வெயாரின் உரிமையாளரான 55 வயதான நபரையும், கைதுசெய்துள்ளனர்.

பொலிஸாரின் அவசரத் தொலைபேசி இலக்கமான 119க்கு கிடைத்த, இரகசியத் தகவலையடுத்தே, இந்தச் சுற்றிவளைப்புத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டதென, பண்டாரகம பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, மீட்கப்பட்ட சிறுவன் தொடர்பில், ஹொரண நீதவானின் கவனத்துக்குக் கொண்டு செல்லவுள்ளதாகத் தெரிவித்த பண்டாரகம பொலிஸார், கைதுசெய்யப்பட்ட இருவரையும் ஹொரண நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

## 'முஸ்லிம் காங்கிரஸ் கபட நாடகம் ஆடியுள்ளது'

"அதனடிப்படையில், முன்னாள் முதலமைச்சரின் அணி யானைச் சின்னத்திலும், அலி ஸாஹிர் மௌலானாவின் அணி முஸ்லிம் காங்கிரஸ் சார்பான, ஹாபிஸ் நஸீர் அஹமட் அவர்களது மூத்த சகோதரரைத் தலைவராகவும் ரவூப் ஹக்கீமின் மைத்துனரைச் செயலாளராகவும் கொண்ட கட்சியின் தராசு சின்னத்திலும் போட்டியிடுகின்றன.

"இத்தேர்தலில் அலி ஸாஹிர் மௌலானாவின் அணி, யானைச் சின்னத்தில் சிக்கியுள்ளவர்களைவிட மிகவும் பாரதூரமான சதி வலைக்குள் அகப்பட்டுள்ளது.

"முன்னாள் முதலமைச்சருக்கும், அலி ஸாஹிர் மௌலானாவுக்குமிடையில் நீண்ட நாட்களாக முரண்பாடு காணப்பட்டுள்ளது. இந்நிலையில், இத்தேர்தலில் வேட்பாளர்களை நியமிக்கும் விடயத்திலும் இழுபறி ஏற்பட்டிருந்தது. இதையடுத்து, அலி ஸாஹிர் மௌலானா தனக்குச் சார்பானவர்களை சுயேச்சைக்குழுவில் போட்டியிட வைக்கும் நோக்கத்துடன், அப்போது நடைபெற்ற பேச்சுவார்த்தையிலிருந்து வெளியேறியிருந்தார்.

**"முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பை வழிநடாத்தும் அதிகாரம் ஹாபிஸ் நஸீர் அஹமட் அவர்களுக்கே உண்டு**

"அவ்வேளை அக்கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம், மௌலானாவை அழைத்து, சுயேச்சைக்குழு இன்றி முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிடுமாறுகோரி, அக்கட்சியை வழங்கியுள்ளார். முஸ்லிம் கூட்டமைப்பின் அடிப்படை பற்றி அலி ஸாஹிர் மௌலானாவுக்குத் தெரியாது.

"ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், தனது வருடாந்த கூட்டத்தில் 2,000 அங்கத்தவர்கள் ஒன்று கூட்டி, தலைமைப் பதவி உள்ளிட்ட பதவிநிலை உறுப்பினர்களை பொதுவாக தெரிவு செய்வதுண்டு.

"ஆனால், முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பில் மொத்தமாக 25 பேர் மாத்திரமே அங்கத்தவர்களாக உள்ளனர். அதிகமாக உறுப்பினர்களை இணைத்தால் தலைமைப் பதவிக்கு ஆபத்து வந்துவிடும் என்பதால், முன்னாள் முதலமைச்சர் நஸீர் ஹாபிஸினுடைய குடும்ப உறவினர்கள் மற்றும் அவரது கம்பனிகளில் வேலை செய்பவர்களை இணைத்து கட்சி நிர்வாகிகளைத் தெரிவுசெய்து, கட்சியை அருடைய கட்டுப்பாட்டில் வைத்துள்ளார்.

"இந்தக் கட்சியில் உள்ள 25 பேரும் நினைத்தால், வருடாந்த மாநாட்டைக் கூட்டி அதன் தற்போதைய செயலாளரைப் பதவி நீக்கம் செய்யமுடியும். அதையடுத்து, முன்னாள் முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட், அவர்களுடைய குடும்ப உறவினரை செயலாளராக நியமித்து, முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பிலிருந்து ஏறாவூர் நகர சபைக்குத் தெரிவுசெய்யப்படும் உறுப்பினர்களுக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கலாம்.

"அத்துடன், இரண்டு வாரங்களுக்குள் அந்த உறுப்பினர்களை நீக்கிவிட்டு அவர் விரும்பியவர்களை நியமிக்கும் பாரிய ஆபத்துக்குள், நாடாளுமன்ற உறுப்பினர் அலி ஸாஹிர் மௌலானாவின் அணி சிக்கியிருக்கின்றது.

"அலி ஸாஹிர் மௌலானா அணி, இம்முறை சுயேச்சைக் குழுவாகப் போட்டியிட்டிருந்தால், நாங்கள் இந்தத் தேர்தலில் வேறு அணியாகப் போட்டியிட்டிருக்க மாட்டோம். அவர்களுக்கு ஆதரவு வழங்கியிருப்போம். எனவே, மௌலானா அவர்கள் இப்போது அகப்பட்டிருப்பது ஹாபிஸ் நஸீர் அஹமட்டின் கால்களின் பாதங்களில் என்பதை உணர்ந்துகொள்ளவேண்டும்.

"அந்த அடிப்படையில் நோக்கினால், மௌலானாவின் அணியில் யார் உறுப்பனராகத் தெரிவுசெய்யப்பட்டாலும் அவர்களில் ஹாபிஸ் நஸீர் அஹமட் விரும்பியவர்கள் மாத்திரமே சபையில் பிரதிநிதித்துவம் செய்யமுடியும். முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பை வழிநாடத்தும் அதிகாரம் ஹாபிஸ் நஸீர் அஹமட் அவர்களுக்கே உண்டு.

"கிழக்கு மாகாணத்தின் தேசிய அரசியலின் முத்தாகக் கருதப்படுகின்ற ஏறாவூர் மண்ணையும் அரசியல் கௌரவத்தையும் ஒரு டம்மியிடம் கையளிக்க முடியாது. முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், ஏராவூர் மண்ணுக்கு ஆடிய கபட நாடகத்தின் பின்னால் போகாது, உடனடியாக வெளியேறுமாறு அலி ஸாஹிர் மௌலானாவைக் கேட்டுக்கொள்கின்றேன்" என்றார்.



2018ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட வரி தொடர்பான திட்டம், ஏப்ரல் மாதத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் என்று, நிதியமைச்சின் அரச நிதிக் கொள்கை தொடர்பான பணிப்பாளர் நாயகம் ஏ.கே.செனெவிரத்ன தெரிவித்துள்ளார்.

உக்காத வகைகளைச் சேர்ந்த பொலிதீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களைப் பயன்படுத்துவோரைக் கைது செய்வதற்கான சுற்றிவளைப்புகள், நேற்று முதல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.





“

ஹம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு, கப்பல்கள் எதுவும் வரவில்லை. மத்தள விமான நிலையத்துக்கு விமானங்கள் வரவில்லை. எம்மிடம் கையளிக்கப்பட்ட போது ஒரு சதம் கூட இருக்கவில்லை. அச்சமின்றி நாம் சவாலை ஏற்றுக்கொண்டோம். ஆகையால் தான், இன்று பொருளாதாரம் ஸ்திரத்தன்மையில் உள்ளது.



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

## விசேட ரயில் சேவைகள் 7 வரை இடம்பெறும்

பாடசாலை விடுமுறைகள், இன்று (02) முடிவுக்கு வந்த போதிலும், புத்தாண்டை முன்னிட்டு, தமது சொந்த இடங்களுக்குச் சென்ற பொதுமக்கள் மற்றும் பிரதான நகரங்களுக்குத் திரும்பும் மக்களின் வசதி கருதி, விசேட ரயில் சேவைகள், எதிர்வரும் 7ஆம் திகதி வரை இடம்பெறுமென, ரயில்வே திணைக்களத்தின் மேலதிக பொது முகாமையாளர் விஜய சமரசிங்ஹ தெரிவித்தார்.

இதற்கு மேலதிகமாக, பதுளை, பண்டாரவளை ஆகிய பிரதேசங்களுக்குச் செல்வோரின் வசதி கருதி, தற்போது நடைமுறைப்படுத்தப்படும் விசேட ரயில் சேவையும், எதிர்வரும் 7ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, இலங்கை போக்குவரத்துச் சபையும், சொந்த இடங்களுக்குச் செல்லும் பொதுமக்கள் மீண்டும் கொழும்பு போன்ற நகரங்களுக்குத் திரும்புவதற்காக விசேட பஸ் சேவைகளை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வாய்க்காலில் விழுந்து குழந்தை பலி

சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி - இரத்தினபுரம் பகுதியைச் சேர்ந்த ஒன்றரை வயதான ராஜேந்திரகுமார் யுகினேஸ் என்ற ஆண் குழந்தை, நேற்றுக்காலை, வாய்க்காலில் விழுந்து உயிரிழந்துள்ளது.

குறித்த குழந்தை, வீட்டின் முன்பாக உள்ள வாய்க்காலின் ஓரத்தில் விளையாடிக்கொண்டிருந்த போதே, தவறி விழுந்து உயிரிழந்துள்ளதாக, ஆரம்பக் கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

## 6 இளைஞர்கள் கைது

எம்.றொசாந்த், டி.விஜிதா

யாழ்ப்பாணம் - அரியாலை தென்கிழக்கு-மணியந்தோட்டம் கிராம அலுவலரின் வீட்டுக்கு கற்கள் வீசி அடாவடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் 6 இளைஞர்கள், நேற்று (01) கைது செய்யப்பட்டனர் என, யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

அரியாலை தென்கிழக்கு ஜே 89 கிராம அலுவலரின் வீட்டுக்கு நேற்று முன்தினம் (31) இரவு கல் வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டது. அது தொடர்பில் கிராம அலுவலரால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. அவரது வீட்டுக்கு சேதம் ஏதும் ஏற்படவில்லை. கிராம அலுவலரால் முறைப்பாட்டின் அடிப்படையில் 6 இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் விசாரணைகள் இடம்பெறுகின்றன என்று, பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.


தமிழ்Mirror

HAPPY BIRTHDAY



12 வயதிற்குட்பட்ட உங்கள் பிள்ளைகளின் பிறந்த நாள் வாழ்த்துகளை தமிழ்மிரர் பத்திரிகையில் இலவசமாக பிரசுரிக்கலாம்.

உங்கள் பிள்ளைகளின் புகைப்படம், விவரங்கள், தகவல் தருபவரின் விவரங்களுடன் கீழ் காணும் அலுவலகத்திற்கு வருகைதரவும் அல்லது மின்னஞ்சல் மூலமாக தொடர்புகொள்ளவும்.

Wijeya Newspapers Ltd
36, Hyde Park Corner, Colombo-02

மேலதிக விவரங்களுக்கு
0773421476 / 0771 426439
E-mail: tamilmirroradvt@wijeya.lk


# ‘வேடிக்கை பார்க்கிறது’

சுப்பிரமணியம் பாஸ்கரன்



“எங்கள் உறவுகளை காணாமல் ஆக்கிவிட்டு, எங்களை வீதியில் இருந்து துன்பங்களை அனுபவிக்க விட்டு, இந்த அரசாங்கம் வேடிக்கை பார்க்கின்றது” என, 316ஆவது நாளாகவும் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தெரிவித்துள்ளனர்.

இறுதி யுத்தத்தின் பின்னரும் அதற்கு முன்னைய காலப்பகுதிகளிலும் கைது செய்யப்பட்டும் படையினரிடம் சரணடைந்தும் உள்ள தங்களது உறவுகள் தொடர்பில், எட்டு ஆண்டுகளுக்கும் மேலாக எந்தவித பதில்களும் இன்றி தங்கள் உறவுகளை மீட்டுத்தரக் கோரி போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக, முன்னெடுத்து வரும் தொடர் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று (01) 316ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது. இதன்போதே, அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

“தங்களுக்குப் பல்வேறு தரப்புகள் பல்வேறு வாக்குறுதிகளை வழங்குகின்றபோதும், யாரும் அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றியதாக இல்லை.

“எங்களுடன் வீதியிலே தங்கள் உறவுகளுக்காக, போராடிய பலர் நோய் வாய்ப்பட்டு, இறந்திருக்கின்றார்கள். இன்றும் பலர் நோய் வாய்ப்பட்டு இருக்கின்றார்கள். மலர்ந்திருக்கின்ற புத்தாண்டைப் படையினர் உட்பட பலரும் மகிழ்ச்சியாகக் கொண்டாடுகின்றார்கள். ஆனால், நாங்கள் வீதியிலிருந்து கண்ணீர் வடிக்கின்றோம்.

“நல்லாட்சி அரசாங்கத்தை நாங்கள் நம்பி இருந்தோம். பத்து மாதங்களுக்கும் மேலாக அரசாங்கம் சாதகமான பதில் எதையும் தரவில்லை. நாங்களும் வீதியில் போராடிக் கொண்டிருக்கின்றோம்.

“இதேபோல முல்லைத்தீவு, வவுனியா ஆகிய ஏனைய மாவட்டங்களிலும் ஏனைய இடங்களிலும் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். எங்களது போராட்டத்துக்கு அரசாங்கம் நல்ல தீர்வைத் தரவேண்டும்” என்றனர்.

## ‘சூத்திரதாரியாக இருக்கவில்லை’

வா.கிருஸ்ணா



”தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன செய்தது என்று சிலர் கேட்கின்றனர். நாங்கள் யாரையும் கடத்தவும் இல்லை, கப்பம்பெறவும் இல்லை, இளைஞர்கள் சிறையில் அடைபடுவதற்கு சூத்திரதாரியாக இருக்கவும் இல்லை” என, மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

“தமிழர்களின் நலன்களில், உரிமைகளில் எப்போதும் அக்கறைகொண்ட கட்சியாகவே கூட்டமைப்புச் செயற்படுகின்றது” என்றும் அவர் தெரிவித்தார்.

வேட்பாளர் வி.பாலராஜாவின் தேர்தல் பிரசார அலுவலகத்தை, இருதயபுரத்தில் நேற்றுத் திங்கட்கிழமை, திறந்து வைத்து உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

“மட்டக்களப்பு மாவட்டத்தின் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கைப்பற்றும். தமிழர்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்ளும், நூற்றுக்கு நூறு சதவீத உரிமை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே இருக்கின்றது.

“கூட்டமைப்பின் ஊடாக, அதிகளவான இளைஞர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தை, மக்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். கூட்டமைப்பானது ஊழல்,மோசடிகள் இல்லாத கட்சியென்பதை மக்கள் அறிந்துள்ளனர். யாராவது மோசடி செய்வார்களாயின், அவர்களை, மக்கள் கைகழுவிவிடும் போக்கையும், நாங்கள் பார்த்துள்ளோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து தூய்மையான அரசியல் செயற்பாடுகளை மேற்கொள்ளும்போதே, மக்கள், அவர்களை ஏற்றுக்கொள்ளும் நிலைப்பாடு காணப்படுகின்றது.

“கூட்டமைப்பு, கொள்கையுடன் பயணிக்கின்றது. அது யாருக்கும் சோரம் போகாத கட்சியாகவே இருந்து வருகின்றது. அவ்வாறு சோரம்போன பலர், தமிழ் மக்களால் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்” என்று அவர் தெரிவித்தார்.

## ‘30 ஆயிரம் பேர் உள்ளீர்க்கப்படுவர்’

பைஷல் இஸ்மாயில்

இம்முறை கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த 30,000 மாணவர்களை, பல்கலைக்கழகங்களில் இணைத்துக் கொள்ளவுள்ளதாக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்கான விண்ணங்கள் அடங்கிய கையேட்டை, அடுத்த வார இறுதியில் வெளியிடவுள்ளதாகவும், ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அந்தக் கையேடு வெளியானதன் பின்னர் ஒரு மாதத்துக்குள், இணையத்தளம் ஊடாக மாத்திரம், பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பிக்குமாறு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கேட்டுக்கொண்டுள்ளது.




அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பு மற்றும் தூய முஸ்லிம் காங்கிரஸ், சிவில் அமைப்புகள் இணைந்து உருவாக்கியுள்ள ஐக்கிய மக்கள் கூட்டமைப்பின் கீழ் , அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களுடனான கலந்துரையாடல், அம்பாறை, மொண்டி ஹொட்டலில் நேற்று (01) நடைபெற்றது.

# ‘எது வேண்டும்?’

### மக்களே தீர்மானிக்க வேண்டும் என்கிறார் ஜமீல்

பி.முக்தார்

“நல்லாட்சி அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் ஏற்படுத்திய ஜனநாயகம், ஊடக சுதந்திரம், நல்லிணக்கம், அபிவிருத்தி என்பனவற்றைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல இடமளிப்பதா அல்லது கடந்த ராஜபக்ஷ ஆட்சியில் தலைவிரித்து ஆடிய ஜனநாயக விரோத செயற்பாடுகள் நாட்டில் மீண்டும் தலைதூக்க இடமளிப்பதா என்பதை நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மக்கள் தீர்மானிக்க வேண்டும்” என, மேல் மாகாண சபை உறுப்பினர் இப்திகார் ஜமீல் தெரிவித்தார்.

பேருவளை பிரதேச சபை தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து, மங்கொனை முங்ஹேனை, பயாகளை ஹல்கந்தவிலை ஆகிய பகுதிகளில் நேற்று முன்தினம் (31) நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டங்களில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

“ஆளும் கட்சிக்கு வாக்களித்தால், ஜனநாயக நல்லிணக்கத்தைத் தொடர்ந்து கட்டிக்காக்க முடியும். அதேவேளை ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சிக்கு வாக்களித்தால் மீண்டும் ஜனநாயக விரோதச் செயற்பாடுகள் தலைவிரித்தாடும் அவல நிலை நாட்டில் உருவாகும். எனவே, இவை இரண்டிலும் எது எமக்குத் தேவை என்பதைத் தீர்மானிக்கக் கிடைத்துள்ள சந்தர்ப்பமே, இந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலாகும்.

“ராஜபக்ஷ குடும்ப ஆட்சிக்கு சாவு மணி அடித்து நாட்டு மக்கள் நல்லாட்சியை உருவாக்கினர். அந்த நல்லாட்சி மூலம் மக்கள் எதிர்பார்த்த ஜனநாயகம், நல்லிணக்கம், ஊடக சுதந்திரம், அபிவிருத்தியை ஏற்படுத்தியுள்ளோம். கடந்த அரசைப் போல் விளம்பரங்கள் இன்றி மிக அமைதியாக அபிவிருத்திப் பணிகளைச் செய்து வருகிறோம்.



“கடந்த ஆட்சியில் இனங்களுக்கிடையே நல்லிணக்கம் தூரமாகி இருந்தது. ஜனநாயக உரிமைகள் மீறப்பட்டு, அடாவடித்தனம் தலைவிரித்தாடியது. நல்லாட்சி அரசாங்கமானது, கடந்த 3 வருட காலத்தில் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாத்து, இனங்களுக்கிடையே நல்லிணக்கச் செயற்பாடுகளைச் செவ்வனே முன்னெடுத்து அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்தியுள்ளது.

“குடும்ப ஆட்சி மூலம் முழு நாடுமே நாசமாகியது இனவாதிகளுக்கு உட்சாகமூட்டி சிறுபான்மையினருக்கு தொந்தரவுகள் செய்யப்பட்டன. ஜனநாயகச் செயற்பாடுகள் நலிந்து காணப்பட்டன. கடத்தல், கொலை, ஊழல் மோசடிகள், பயமுறுத்தல்கள் போன்ற செயற்பாடுகள் அன்றைய ஆட்சியில் மலிந்து காணப்பட்டன.

“ஊடகங்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டும் ஊடகவியலாளர்கள் பலர் பயமுறுத்தப்பட்டும் தாக்கி அச்சுறுத்தப்பட்டும், கடத்தப்பட்டும் உள்ளனர். எவரும் இதைப்பற்றிப் பேச முடியாது வாயடைத்து வாழ்ந்தனர். இந்த நிலைமைக்கு மக்கள் முற்றுப்புள்ளி வைத்து நல்லாட்சியை உருவாக்கினர்.

“நல்லாட்சி அரசாங்கமும் நகரங்களில் கிராமங்களில் முன்னெடுத்துள்ள அபிவிருத்திப் பணிகளைச் சிறப்பாக முன்னெடுத்துச் செல்ல சந்தர்ப்பம் வழங்குவதா அல்லது அவற்றை நிறுத்தி அபிவிருத்தியின்றி கஷ்டத்துடன் வாழ்வதா? என்பதைத் தீர்மானிக்கும் ஒரு தேர்தலாக இந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தல் அமைந்துள்ளது” என்றார்.






வரணி – இயற்றாலை பகுதியில் நேற்று முன்தினம் (31) இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்று, கட்டுப்பாட்டை இழந்து, சலூன் ஒன்றுக்குள் புகுந்து விபத்துக்குள்ளானது. (செல்வநாயகம் கபிலன்)

மாங்குளம், பனிக்கன்குளம் ஆகிய இடங்களுக்கு இடைப்பட்ட ஏ 9 வீதியில், நேற்று முன்தினம் (31) மாலை காட்டு யானை ஒன்று, கார் ஒன்றை மோதித் தள்ளிச் சேதமாக்கியுள்ளது. (சண்முகம் தவசீலன்)

பஸ் நிலைய விவகாரம்:

# வவுனியா முடங்கியது

- பஸ்கள் ஓடவில்லை
- கடைகளுக்கும் பூட்டு
- தனியார் பஸ்களில் இலவச சேவை
- இன்று தொடர்ந்தால் மாணவர்களுக்கு இலவச சேவை

■ அ.கரன், எஸ். நிதர்ஷன், சுப்பிரமணியம் பாஸ்கரன் டிலிஜிதா

வவுனியாவில் 195 மில்லியன் ரூபாய் பெறுமதியில் அமைக்கப்பட்ட புதிய பஸ் நிலையத்தில் இருந்து தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்களை, சேவைகளை முன்னெடுக்குமாறு, வட மாகாண முதலமைச்சர் உத்திரவிட்டமையைக் கண்டித்து, வட மாகாண இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்கள், நேற்று (01) பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

புதிய பஸ் நிலையமானது கடந்த ஒரு வருடகாலமாக செயற்படாமல் உள்ள நிலையில், டிசெம்பர் 31ஆம் திகதி நள்ளிரவு 12 மணியில் இருந்து பழைய பஸ் நிலையத்தை மூடி, புதிய பஸ் நிலையத்துக்கு அனைத்து பஸ் சேவைகளும் செல்ல வேண்டும் என முதலமைச்சர் உத்தரவிட்டிருந்தார்.

இதையடுத்து, நள்ளிரவு 12 மணிக்கு வவுனியா நகரசபை செயலாளர் மற்றும் பொலிஸார் இணைந்து பழைய பஸ் நிலையத்தைப் பரல்களைக் கொண்டு பஸ்கள் உள் செல்ல முடியாதவாறு மூடியிருந்தனர்.

இந்நிலையில், தாம் நீண்ட காலமாகப் பயன்படுத்திய பழைய பஸ் நிலையத்தை



மூடியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, வட மாகாணம் பூராகவும் இலங்கை போக்குவரத்து சபையின் ஊழியர்கள் பணிபகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இதேவேளை, வவுனியா பழைய பஸ் நிலையம் மூடப்பட்டமையைக் கண்டித்து, அதனை சூழ இருந்த வர்த்தகர்கள் கடைகளை மூடியும் கறுப்புக்கொடிகளை கட்டியும், தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

எனினும், இன்றைய தினம் (02) பாடசாலை நாள் என்பதால், தையலகங்கள் நடத்தும் வர்த்தகர்கள் மாணவர்களின் நலன்கருதி கடைகளை திறந்திருந்ததுடன், கடைகளை மூடுமாறு தெரிவித்த வர்த்தகர்களுடன் முரண்பாட்டிலும் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில், தனியார் பஸ் உரிமையாளர்கள், பயணிகளின் நலன் கருதி, பழைய பஸ் நிலையத்தில் இருந்து புதிய பஸ் நிலையம் வரை இலவச பஸ் சேவையை முன்னெடுத்துள்ளதுடன், வட மாகாணத்துக்கான அனைத்து சேவைகளையும் அதிகரித்துள்ளனர்.

இதேவேளை, அறிவித்தல்கள் பொதுமக்களுக்குப் போதுமானதாகக் கிடைக்காமையால், பயணத்தை மேற்கொள்ள வந்த பயணிகள் புதிய பஸ் நிலையத்தில் இருந்து அனைத்து தனியார் சேவைகளும் ஈடுபட்டு வருவதால் சிரமத்தை எதிர்கொண்டிருந்தனர்.

இந்நிலையில் இன்றும் (02) இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடும் பட்சத்தில், பருவச்சீட்டுகளைப் பெற்றுள்ள மாணவர்கள், தனியார் பஸ்களில் இலவசமாக பயணிக்க முடியும் என, வவுனியா மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் எஸ். ரி. இராஜேஸ்வரன் தெரிவித்துள்ளார்.





## ‘தனித்துவமான பாதையையே கோருகிறோம்’

■ சுப்பிரமணியம் பாஸ்கரன், டிலிஜிதா

“ஒன்றிணைந்த தொழிற்சங்க பிரச்சினையை, முதலமைச்சர் தீர்த்து வைத்திருக்க முடியும். புதிய பஸ் நிலையத்துக்குச் சென்று வரத்தயார். ஆனால், எமக்கென தனித்துவமான பாதையைத் தர வேண்டும் என்றே வலியுறுத்துகின்றோம்” என, வடமாகாண ஒன்றிணைந்த தொழிற்சங்கத்தினர் தெரிவித்தனர்.

அவர்கள் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

“கனடாவில் இருந்து யாரும் வந்தால், கை கொடுத்துக் கதைக்கின்றார். இந்தக் கதிரையை வாங்கிக்கொடுத்த நாங்கள் கதைக்கச் சென்றால், கதைக்க முடியாது வெளியில் போ என்கின்றார்.

“நீதியான முடிவைத் தரச் சொல்லிக் கேட்டோம். ஆனால், அவர் அதற்கு ஒத்துவரவில்லை. ஒரு பக்கச் சார்பாகக் கதைத்துக் கொண்டிருக்கின்றார்.

“முதலமைச்சருக்கு எதிராகச் செயற்படுவதாக புத்திஜீவிகள் சொல்லியிருக்கின்றார்கள். கடைசி வரை அவ்வாறு முதலமைச்சருக்கு எதிராகச் செயற்படவில்லை.

தவறுகளைச் சரி செய்ய வேண்டும். தவறுகளைச் சரி செய்திருந்தால் நியாயப்படுத்தல் வந்திருக்க முடியாது. எமது கோரிக்கைக்கு செவிமடுத்து சாதகமான பதிலைத் தர வேண்டும். கதைத்து முடிவு எடுக்க வேண்டும். அரசியல் அதிகாரங்களைப் பாவித்து, நான் சொல்வதைச் செய், பஸ் நிலையத்தை உடைப்பேன் என்கின்றார்.

“முதலமைச்சரின் செயலால், ஒட்டுமொத்த பொதுமக்களும் பாதிக்கப்படுகின்றார்கள். பாடசாலை ஆரம்பிக்கப்படவுள்ளது. பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட போகின்றது. மாணவர்கள் அல்லல்படப் போகின்றார்கள்.

எம்மைப் பிழையான கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டாம். இலங்கை போக்குவரத்துச் சேவை மக்களுக்கென சிறந்த சேவையாற்றி வந்தோம். இது ஒரு சின்னப் பிரச்சினை. முதலமைச்சர் நினைத்திருந்தால் உடனடியாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டிருக்க முடியும்.

“வடமாகாணத்தின் அதிகாரம் மிக்க அமைச்சராக உள்ள முதலமைச்சர் மத்திய அரசாங்கத்துடன் கதைத்து ஒரு முடிவைக் சொல்லியிருக்கலாம். தான்தோன்றித்தனமாக பஸ் நிலையத்தைக் கட்டி விட்டு, சிறுபிள்ளைக்கு சொல்வது போன்று எமக்குச் சொல்வது முற்றிலும் தவறான விடயம்.

“இலங்கைப் போக்குவரத்துச் சபை சாரதிகள் மற்றும் ஊழியர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. இதனால், பொது மக்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு மன்னிப்பும் கோரியுள்ளனர். தமது கோரிக்கைகளுக்கு உரிய பதில் கிடைக்காவிடின் தொடர்ந்தும் தமது பணிப்புறக்கணிப்பு தொடரும்” எனத் தெரிவித்துள்ளனர்.

## காரைநகர் சாலை பஸ்கள் ஓடின

■ எஸ். நிதர்ஷன்

வவுனியா பஸ் நிலைய விவகாரத்தில் முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, வட பிராந்திய போக்குவரத்து சபையின் ஒன்றிணைந்த தொழிற்சங்கம் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்ற நிலையில், காரைநகர் சாலை போக்குவரத்து சபை பஸ்கள் மாத்திரம் சேவையில் நேற்று (01) ஈடுபட்டன.

யாழ்ப்பாணம் - காரைநகர் சிவன் கோவில் தேர்த்திருவிழா நேற்று (01) இடம்பெற்றதால், பக்தர்களின் நலன் கருதி காரைநகர் சாலை போக்குவரத்து சபை பஸ்கள் மாத்திரம் சேவையில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

“

கிளிநொச்சி – அக்கராயனில், நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்தை இயங்க வைப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பான முன்மொழிவுகளை மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.



–கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர்– நவரத்தினம் சுதாகரன்

## ‘தொடர் போராட்டம் முன்னெடுக்கப்படும்’

■ நடராசா கிருஸ்ணன்

அத்துமீறிய நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த வேண்டும். இல்லையேல், இவ்வாண்டில் இருந்து அகிம்சை வழியில் தொடர் போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாக, முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் சங்கங்களின் சமாஜத்தின் தலைவர் ஜெயா தெரிவித்தார்.

“முல்லைத்தீவு மாவட்டத்தில், வெளி மாவட்ட மீனவர்களின் அத்துமீறிய படகுத் தொழில் முயற்சிகள் கடந்த 2012ஆம் ஆண்டளவில் 32ஆகக் காணப்பட்ட நிலையில், அது நடப்பாண்டில் 377ஆக அதிகரித்துள்ளதால், முல்லைத்தீவு கடலையே நம்பி வாழும் சுமார் 05க்கும் மேற்பட்ட மீனவக் குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு மீனவர்கள் நீர்க்கதி யாக்கப்பட்ட நிலையில் உள்ளன.

“இதனால், வெளிமாவட்ட மீனவர்களின் புதிய வருகையை கட்டுப்படுதுவதுடன், தற்போது தொழிலை மேற்கொண்டுள்ள மீன்பிடிப் படகுத் தொழிலுக்கும் தடை விதிக்க வேண்டும் என்று, சம்பந்தப்பட்டோருக்கு கோரிக்கை அடங்கிய மகஜரை அனுப்பி வைத்துள்ள போதும், இது தொடர்பில் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாதிருப்பதால், முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் நம்பிக்கை இழந்து வருகின்றனர்” எனவும் தெரிவித்தார்.

## 11ஆயிரம் ஏக்கரில் செய்கை

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

முல்லைத்தீவு - வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் உள்ள 12 நீர்ப்பாசனக் குளங்களின் கீழும், 11ஆயிரத்து 283 ஏக்கர் நிலப்பிரப்பில், காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கமைய, வவுனிக்குளத்தின் கீழ் 6,060 ஏக்கரும் தென்னியன்குளத்தின் கீழ் 850 ஏக்கரும் ஐயன்கன்குளத்தின் கீழ் 952 ஏக்கரும் அம்பலப்பெருமாள் குளத்தின் கீழ் 623 ஏக்கரும் கல்விளாக்குளத்தின் கீழ் 400 ஏக்கரும் மருதன்குளத்தின் கீழ் 450 ஏக்கரும் பழைய முறிகண்டிக்குளத்தின் கீழ் 356 ஏக்கரும் கோட்டைகட்டியகுளத்தின் கீழ் 405 ஏக்கரும் கொல்லவிளான்குளத்தின் கீழ் 262 ஏக்கரும் மல்லாவிக்குளத்தின் கீழ் 325 ஏக்கரும் தேறாங்கண்டல் குளத்தின் கீழ் 300 ஏக்கரும் பனங்காமம் குளத்தின் கீழ் 300 ஏக்கருமாக மொத்தம் 11,283 ஏக்கர் நிலப்பரப்பில், பயிர்செய்கை மேற்கொள்ப்பட்டுள்ளதாக, நீர்ப்பாசனத் திணைக்கள தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஏற்றுநீர்ப்பாசன திட்டங்கள் செயலிழப்பு

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

முல்லைத்தீவு - வவுனிக்குளத்தின் கீழ் உள்ள 12 கிராமங்களில், பல மில்லின் ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்ட ஏற்றுநீர்ப்பாசனத் திட்டங்கள் செயலிழந்த நிலையில் காணப்படுகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பாரிய நீர்ப்பாசனக்குளங்களில் ஒன்றான வவுனிக்குளத்தின் கீழான குடியேற்றத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது, ஏற்றுநீர்ப்பாசனத்திட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன.

யுத்தம் நிறைவுக்கு வந்து மக்கள் மீள்குடியேறியதையடுத்து, செயலிழந்த ஏற்றுநீர்ப்பாசனத் திட்டங்கள் மீள்புனரமைப்புச் செய்யப்பட்டு, விவசாயிகளிடம் கையளிக்கப்பட்ட நிலையில், அவை கைவிடப்பட்டுள்ளன.

கழிவுப்பொருட்களை இனி

## அனுமதியின்றிக் கொண்டு செல்ல முடியாது

■ எஸ்.குகன்

“நல்லூர் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கழிவுப்பொருட்களை அனுமதியின்றி கொண்டு செல்லல், கொட்டுதல் ஆகியன பொதுச் சுகாதாரத்தைக் கருத்தில் கொண்டு தடைசெய்யப்பட்டுள்ளன” என, நல்லூர் பிரதேசசபை செயலாளர் சு.சுதர்ஜன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில், அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

“இதனைமீறிச் செயற்படுவோர் மீது பிரதேசசபை சட்டம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புச்சட்டம் போன்றவற்றின் பிரகாரம் சட்டநடிவடிக்கை எடுக்கப்படும். அரச திணைக்களங்கள், பாடசாலைகள், விடுதிகள், வியாபார நிலையங்கள் மற்றும் வீடுகளில் அகற்ற முடியாதுள்ள கழிவுகளை, தங்கள் பகுதிக்குரிய உபஅலுவலகங்களில் கட்டணம் செலுத்தி கழிவகற்றல் சேவையைப் பெற்றுக் கொள்ள முடியும்.

“மேலும், கழிவுப்பொருட்களில் பிளாஸ்ரிக், கண்ணாடி, உக்காத பொருட்கள் போன்றவற்றை வேறுபடுத்தி சபையின் உதவியுடனும் உக்கும் கழிவுகளை தாங்களாகவே அகற்றிக் கொள்ளுதல் வேண்டும்.

“அத்துடன், அபிவிருத்தி செய்யப்படாத காணிகளில் உள்ள பற்றைகள் துப்புரவு செய்யப்பட வேண்டும். தவறின் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், உணவு கையாளும் நிலையப் பணியாளர்கள் மருத்துவப்பரிசோதனை மேற்கொண்டு அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.

“மேலும், பொதுமக்கள் தமது கால்நடைகளை கட்டி வைத்து வளர்க்குமாறு கேட்டுகொள்ளப்படுகின்றீர்கள்” எனத் தெரிவித்தார்.

## ‘சிவராம் கொலையுடன் தொடர்பில்லை’

■ எம்.றொசாந்த்

“ஊடகவியலாளர் சிவராம் கொலைக்கும் எமது அமைப்புக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. மீண்டும் மீண்டும் தமது அமைப்பை அந்த கொலை வழக்குடன் சிலர் தொடர்புபடுத்த முயன்று வருகின்றனர்” என, நாடாளுமன்ற உறுப்பினரும் புளொட் அமைப்பின் தலைவருமான த. சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

யாழில். நேற்று (01) இடம்பெற்ற உடகவியலாளர் சந்திப்பிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் ,

“ஊடகவியலாளர் சிவராம் கொலை வழக்குடன் புளொட் அமைப்புக்கு எந்த தொடர்பும் இல்லை. அந்தக் கொலை குற்றச்சாட்டு தொடர்பில், எமது அமைப்பின் மூத்த உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டு, அவர் மீது வழக்கு தொடரப்பட்டது. அவர் தற்போது வழக்கு விசாரணைகளில் இருந்து நிரபராதி என தீர்ப்பளிக்கப்பட்டு, முற்று முழுதாக விடுவிக்கப்பட்டுள்ளார்.

“இந்நிலையில், எமது அமைப்பின் மீது குற்றம் சாட்டப்பட்டு வருவதாவது, புளொட் அமைப்பின் மீது அவதூறு ஏற்படுத்தும் விதமாகவே இந்தக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன” எனத் தெரிவித்தார்.



வற்றாப்பளை – புதுக்குடியிருப்பு

## வீதிக்கு விமோசனம்

■ சண்முகம் தவசீலன், சுப்பிரமணியம் பாஸ்கரன்

கேப்பாபுலவு இராணுவ முகாம் அமைத்து தடைசெய்யப்பட்ட வற்றாப்பளை- புதுக்குடியிருப்பு வீதி, நேற்று (01) அதிகாலை 5 மணி முதல் மக்கள் பாவனைக்குத் திறந்துவிடப்பட்டுள்ளது

மிக நீண்ட காலமாக மக்கள் விடுத்த கோரிக்கைக்கு அமையவே, இவ்வீதி நேற்று திறந்துவிடப்பட்டுள்ளது.

வற்றாப்பளை - புதுக்குடியிருப்பு வீதியானது, யுத்தம் முடிந்து மக்கள் மீள்குடியேறியபோது, கேப்பாபுலவு கிராமம் இராணுவத்தால் சுபீகரிக்கப்பட்டிருந்தது. அத்துடன், இந்த வீதியும் சுமார் 1.5 கிலோமீற்றர் வரையான வீதியும் மறிக்கப்பட்டது. இதற்கு மாற்றீடாக, சுமார் 4 கிலோமீற்றர் காட்டு வழியாக புதிதாகப் பாதை அமைக்கப்பட்டது.

இதனால் மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகம்கொடுத்து வந்தனர். இதையடுத்து, இந்தப் பாதையை திறந்துவிடுமாறு கோரிய நிலையில், கேப்பாபுலவு மக்கள் தமது நிலம் வேண்டி போராடி 307ஆவது நாளான நேற்று (01) அவர்களது காணிகளுக்குச் செல்ல இராணுவம் அனுமதித்ததோடு, வீதியும் மக்கள் பாவனைக்காகத் திறந்துவிடப்பட்டுள்ளது.

இருப்பினும், கேப்பாபுலவில் மீதமுள்ள 100 குடும்பங்களுக்கான 181 ஏக்கர் காணி விடுவிக்குமாறு மக்கள் தொடர்ந்து போராடிவருகின்றமை குறிப்பிடத்தக்கது

தேர்தல் பிரசாரங்களில்

## ‘எங்களது பிரச்சினையைப் பயன்படுத்த வேண்டாம்’

■ எஸ்.என்.நிபோஜன், நடராசா கிருஸ்ணகுமார்

“காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு எவ்வித தீர்வையும் பெற்றுத்தராதவர்கள், நடைபெறவுள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தலில், இந்த விடயத்தை பிராசாரத்துக்குப் பயன்படுத்துவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்” என, கிளிநொச்சி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில், வடக்கு - கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தினதும் கிளிநொச்சி சங்கத்தினதும் தலைவியுமான யோகராசா கனகரஞ்சனி, நேற்று (01) ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போது, தொடர்ந்து கூறியதாவது,

“யுத்தம் முடிவுக்கு வந்து எட்டு வருடங்களைக் கடந்த நிலையிலும் எங்களின் காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களுக்கு எவ்வித தீர்வும் கிடைக்கவில்லை. நாங்கள் நம்பிய எங்களது பிரதிநிதிகளாலும் எங்களுக்கு ஏமாற்றம். இந்தப் புதிய வருடத்திலாவது, எங்களது விடயத்தில் அரசியல் தரப்பினர்கள், அக்கறை செலுத்த வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு, நாட்டின் தலைவர் மற்றும் பிரதமர் ஆகியோர் உரிய பதிலை வழங்க வேண்டும். அதற்கு தமிழ் தலைமைகள் அழுத்தம் கொடுக்க வேண்டும்” என்றார்.

மேலும், “வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுத்தர முடியாதவர்கள் எங்களின் பிரச்சினையை தேர்தல் காலங்களில் பிரசாரத்துக்காகப் பயன்படுத்தக் கூடாது. அதனை காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களான நாங்கள் விரும்பவும் இல்லை, அதை ஏற்றுக்கொள்ளமாட்டோம்” எனவும் தெரிவித்தார்.



இரத்தினபுரி கெடலியன்பல்லவிலுள்ள, மாணிக்கக்கல் அகழும் இடத்திலிருந்து கைக்குண்டொன்றை, இரத்தினபுரி பொலிஸார் ஞாயிற்றுக்கிழமை மீட்டுள்ளனர். பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலைத் தொடர்ந்தே, கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது.

புதுவருட பிறப்பையொட்டி, இரத்தினபுரி சிவன் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் நேற்று(01) இடம்பெற்றன. இதில் இரத்தினபுரி மாநகர சபை வேட்பாளர் வீ.நாகதுரை மற்றும் ஆலய நிர்வாக சபையினர் உட்பட பெருந்திரளான பக்த அடியார்கள் கலந்துகொண்டனர்.





“ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் இருந்த ஊழல்வாதிகளே, மொட்டில் இணைந்து, அங்கு பிரச்சினையை கிளப்பிக்கொண்டுள்ளனர். எனவே, ஸ்ரீலங்கா சுந்திரக்கட்சி, எவ்வித பிரச்சினைகளும் இன்றி, இனி தேர்தலை எதிர்கொள்ளும்



அமைச்சர் சரத் அமுனுகம

### சபைகளுக்கான தலைவர்களை

# ‘கட்சியே தீர்மானிக்கும்’

■ எஸ்.கணேசன், ஆ.ரமேஷ்

“மக்களிடம் வாக்குக் கேட்டுச் செல்பவர்கள், சபைக்குத் தலைவராக, தன்னைத்தான் தேர்ந்தெடுப்பார்கள் என்றெல்லாம் கூறி மக்களிடம் வாக்குக் கேட்க வேண்டாம். முதலில் சபைகளை வெற்றிகொள்வோம்” என்று, கூறியுள்ள கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன், “சபைகளின் பதவிகளுக்கு யாரைத் தேர்ந்தெடுப்பது என்பது தொடர்பில், கட்சிகளின் தலைவர்களே தீர்மானிப்பர்” என்றும் அறிவுறுத்தியுள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில், நுவரெலியா மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிடும் தமிழ் முற்போக்குக் கூட்டணி, தனது வேட்பாளர்களை அறிமுகப்படுத்தும் முதலாவது பிரசாரக் கூட்டத்தை, ஹட்டனில் ஞாயிற்றுக்கிழமை நடத்தியது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, கல்வி இராஜாங்க அமைச்சர் இவ்வாறு கூறினார். இங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில்,

“எமது மலையகச் சமூகம் எதிர்காலத்தில் அபிவிருத்தியும் சுபீட்சமும் அடைய வேண்டுமென்றால், முதலில், ஐக்கிய தேசியக் கட்சியை பலப்படுத்த வேண்டும். எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில், நுவரெலியா மாவட்டத்தில் 12 சபைகளில் பெருவாரியாக ஐ.தே. கவை வெற்றிபெறச் செய்தால், அது தமிழ் முற்போக்குக் கூட்டணிக்குக் கிடைக்கும் மாபெரும் வெற்றியாகும்.

“இந்த நாட்டில், இரண்டு பலம் பொருந்திய கட்சிகள் நல்லாட்சி அரசாங்கத்தை அமைத்துச் செயற்பட்டு வருகின்றன. இந்நிலையில் நாம், நாட்டின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்துள்ளோம்.

“மலையக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய சங்கம், ஜனநாயக மக்கள் முன்னணி என்ற மூன்று கட்சிகளையும் உள்ளடக்கியதே, தமிழ் முற்போக்குக் கூட்டணி. கூட்டணியில் நாங்கள் ஒற்றுமையாகவும் கூட்டாகவும் இணைந்து செயற்பட்டு வருகிறோம்.

“இதனடிப்படையில், நடைபெறும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மலையக மக்கள் முன்னணியின் வேட்பாளர்கள், தொழிலாளர் தேசிய சங்க வேட்பாளர்கள் என இரண்டு பிரதான கட்சிகளின் வேட்பாளர்கள், அவ்வப்பகுதிகளில் போட்டியிடுகின்றனர்.

“இதில் ஒரு விடயத்தை நன்றாகத் தெரிந்துகொள்ள வேண்டும். மலையக மக்கள் முன்னணியின் வேட்பாளர்கள் போட்டியிடும் பகுதியில், தொழிலாளர் தேசிய சங்கத்தைச் சேர்ந்தவர்களும், அவர்களுக்கு ஆதரவளிக்க வேண்டும்.

“அதேபோன்று, தொழிலாளர் தேசிய சங்க உறுப்பினர்கள் போட்டியிடும் பகுதிகளில் மலையக மக்கள் முன்னணியின் அங்கத்தவர்கள் ஆதரவளிக்க வேண்டும். வேறுபாடுகளைக் களைந்து ஒற்றுமையாக வாக்களிக்க வேண்டும் என்பதை நன்றாகப் புரிந்துக்கொள்ள வேண்டும்.

“ஹட்டன் நகர சபை, ஐ.தே.கவின் கட்டுப்பாட்டுக்குள் வரவேண்டும். அதேபோன்று, பொஹவந்தலாவை நகரமும் நோர்வூட் நகரமும், அக்கரப்பத்தனை நகரமும் அபிவிருத்தி அடைய வேண்டும் என்றால், அவ்வப் பிரதேசத்தின் சபைகள், ஐ.தே.கவின் வசம் வரவேண்டும்.

“கண்டி, மாத்தளை, நுவரெலியா மாவட்டங்களில், தோட்ட அபிவிருத்திகள் மட்டுமின்றி பாடசாலை கல்வி அபிவிருத்திகளும் பிரதமரின் முயற்சியாலே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு ஹட்டனும் அபிவிருத்திக் காண வேண்டுமெனில், ஐ.தே.கவின் கரங்களை பலப்படுத்துங்கள்” என, அவர் மேலும் கூறினார்.





## வருட ஒன்றுகூடல்

நுவரெலியா லயன்ஸ் கழகம், ரொட்டறி கழகம் இணைந்து ஏற்பாடு செய்த வருட இறுதி ஒன்று கூடல், நுவரெலியா கொல்ப் விருந்தகத்தில், ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்வில், பிரதம அதிதியாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்துகொண்டார். அவருடன் கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணனும் அதிதியாகக் கலந்துகொண்டார்.

இதன்போது, ரொட்டறி கழகத் தலைவர் சதீஸ், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்ததுடன், லயன்ஸ் கழக தலைவர் ஆர்.குணசேகரன் நினைவு பரிசு ஒன்றை வழங்கி வைத்தார். (டி.ஷங்கீதன்)

## வீதியைப் புனரமைத்து தருமாறு கோரிக்கை

■ வாஹிட் குத்தூஸ்

பதுளை- விஹாரகொட சந்தி வீதியானது, நீண்ட காலமாக குண்டும் குழியுமாகக் காணப்படுவதால், அவ்வீதியால் பயணிக்கும் பயணிகள் பாரிய அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த வீதிக்கு அருகில், இரு விகாரைகள், முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவின் உருவச்சிலை வைக்கப்பட்டுள்ள சதுக்கம், மணிக்கூட்டுக் கோபுரம் உள்ளிட்டவை அமைந்துள்ளன.

விகாரைக்கு வரும் பக்தர்கள், பாடசாலை மாணவர்கள், பணிக்குச் செல்பவர்களென பலதரப்பட்டவர்கள் தினமும் இவ்வீதியை பயன்படுத்தி வருகின்றனர்.

வீதியானது குன்றும் குழியுமாகக் காணப்படுவதாகவும் மழை காலத்தில் குழிகளுக்குள் நீர் நிரம்பிக் காணப்படுவதால் போக்குவரத்துச் செய்வதில் பாரிய இடர்களை எதிர்கொண்டுள்ளதாகவும் பாதசாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## இருவேறு விபத்துகளில் மூவர் பலி

■ மொஹொமட் ஆஸிக்

பேராதனை, மடவளை ஆகிய பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இருவேறு விபத்துகளில், மூவர் உயிரிழந்துள்ளனரென, பொலிஸார் தெரிவித்தனர்.

மடவளையிலிருந்து அமுனுகம நோக்கிச்சென்ற முச்சக்கரவண்டியும் மோட்டார் சைக்கிளும் மோதிக்கொண்டதில், மோட்டார் சைக்கிளில் பயணித்த 17 வயது இளைஞன், தூக்கி வீசப்பட்டு, உயிரிழந்துள்ளாரென, மடவளை பொலிஸார் தெரிவித்தனர்.

அமுனுகமயைச் சேர்ந்த இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

முச்சக்கர வண்டியின் சாரதி, அமுனுகம சந்தியில் வைத்து முச்சக்கர வண்டியைத் திருப்ப முனைந்த போது, பின்னால் மிக வேகமாக வந்த மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டியுடன் மோதியுள்ளது.

இதன்போது, மோட்டார் சைக்கிள் தூக்கி வீசப்பட்டு, மதிலொன்றில் மோதியதில், மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்த இளைஞன் காயமடைந்துள்ளார்.

விபத்தில் காயமடைந்தவரை, வத்தேகம வைத்தியசாலையில் அனுமதித்த போதிலும், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளாரென, வைத்தியசாலை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, கண்டியிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயிலில் மோதுண்டு, இருவர் பலியாகியுள்ளனரென, பேராதனை பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி ரயில், பேராதனை, எலுகொட சந்தியை கடக்கும்போது, மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே, ரயிலில் மோதுண்டு பலியாகியுள்ளனர்.





கந்தளாய் பகுதியில், அனுமதிப்பத்திரமின்றி முதிரை மரக்குற்றிகள் மூன்றை, முச்சக்கர வண்டியில் கொண்டு சென்ற 43 வயதுடைய சாரதியொருவர், நேற்று முன்தினம் (31) இரவு கைது செய்யப்பட்டாரென, பொலிஸார் தெரிவித்தனர். (எப்.முபாரக்)

உப்புவெளி பகுதியில் 2 இலட்சத்து 40,000 ரூபாயை மோசடி செய்த 45 வயதுடைய நபரொருவரை, இருவரின் கையொப்பத்துடன் சரீரப்பிணையில் செல்லுமாறு, திருகோணமலை நீதவான் எம்.எச்.எம்.ஹம்ஸா உத்தரவிட்டார். (எப்.முபாரக்)



“கட்சி ரீதியாக பிரிந்து வாக்களித்தால் எமது வாக்குகள் சிதறடிக்கப்பட்டு, ஆசனங்களை இழக்க நேரிடும். ஆகவே, மட்டக்களப்பு மாநக சபைப் பிரிவிலுள்ள முஸ்லிம் வாக்காளர்கள் ஒன்றுபட்டு, ஒரே கட்சிக்கு வாக்களித்தால் மூன்று முஸ்லிம் உறுப்பினர்களைப் பெற முடியும்.



–அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தவிசாளர்– பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி

கல்முனை மாநகர சபையை

# ‘ஊழலற்ற சபையாக மாற்ற வேண்டும்’



■ ஏ.எல்.எம்.ஷினாஸ்

கல்முனை மாநகர சபையை, ஊழலற்ற சபையாக மாற்ற வேண்டுமென, நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணி சார்பாக, கல்முனை மாநகர சபைக்குப் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து நடைபெற்ற பிரசாரக் கூட்டம், மருதமுனை இமாம் கஸ்ஸாலி வீதியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் உரையாற்றிய விஜித ஹேரத் எம்.பி மேலும் தெரிவித்ததாவது,

“நாட்டில் ஊழலுக்கு எதிராக குரல் கொடுக்கின்ற ஒரேயொரு கட்சி, மக்கள் விடுதலை முன்னணியாகும்.

“கல்முனை மாநகர சபை, தற்போது ஊழல் நிறைந்த இடமாகக் காணப்படுகின்றது. இதனால்தான் இங்குள்ள குப்பைகளைக் கூட சரியாக அள்ளமுடியாமலும் தெருவிளக்குகளைப் போட முடியாமலும் உள்ளன.

“பிணை முறி மோசடி செய்யப்பட்டுள்ள 500 மில்லியன் ரூபாய் பணத்தைப் பெற்றால், கல்முனை மாநகர சபை எல்லைக்குள் உள்ள அனைத்து வீதிகளையும் காபட் வீதியாக அபிவிருத்தி செய்ய முடியும்.

“முஸ்லிம் தலைவர்கள், முஸ்லிம்களுக்காகக் குரல் கொடுப்பதில்லை. பேரீச்சம் பழத்துக்கு வரி அறவிட்ட போது, நாம்தான் முதலில் அதற்கெதிராகக் குரல் கொடுத்தோம். நாம் கலாசார அமைச்சராக இருக்கும் போதுதான், முஸ்லிம்கள் பர்தா அணிய அனுமதி வழங்கினோம்.

“ஆகவே, 2020ஆம் ஆண்டு இன, மத, மொழி கடந்த ஊழலற்ற மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையிலான ஆட்சியை அமைக்க எல்லோரும் ஒன்றுபட வேண்டும்” என்றார்.




மூதூர் நீதிமன்றத்தின் நீதிபதியாக, 3 வருடங்கள் சேவையாற்றி, பொதுமக்களுக்கு நீதிமன்றத்தின் மீதான நம்பிக்கையை வலுப்படுத்திய மாவட்ட நீதிபதியும் நீதவானுமாகிய ஐ.என். ரிஸ்வான், நேற்று (01) முதல், கல்முனை நீதிமன்ற நீதவானாக இடமாற்றம் பெற்றுள்ளார். இந்த இடமாற்றத்தையொட்டி, மூதூர் நீதிமன்ற உத்தியோகத்தர்களால் அவர் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார். (படப்பிடிப்பு: தீஷான் அஹமட்)

## ‘புத்தகங்களை வழங்கவும்’

■ எம்.எஸ்.எம். ஹனீபா

கிழக்கு மாகாணப் பாடசாலை மாணவர்களுக்கு இன்னும் வழங்கப்படாது எஞ்சியிருக்கு 2018ஆம் ஆண்டுக்கான இலவசப் பாடப் புத்தகங்களை வழங்குவதற்கு, அவசர நடவடிக்கைகளை அதிபர்கள் மேற்கொள்ள வேண்டுமென, பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

2017ஆம் ஆண்டு மூன்றாம் தவணை விடுமுறைக்கு முன்னர், 2018ஆம் ஆண்டுக்கான பாடப்புத்தகங்கள் மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்ட போதிலும், கிழக்கு மாகாணத்திலுள்ள பிரதேச பாடசாலைகளில் அப்பணி முழுமையாக நிறைவு செய்யப்படவில்லை என பெற்றோர்கள் குற்றஞ்சுமத்துகின்றனர்.

முக்கிய பாடங்களுக்கான பாடப்புத்தகங்கள்கூட இன்னும் வழங்கப்படாதுள்ளதாகவும் பெற்றோர்கள் குறிப்பிடுகின்றனர்.

2018 முதலாந்தவணை கல்வி நடவடிக்கைகளுக்காக, நாடளாவிய ரீதியில் பாடசாலைகள், இன்று (02) மீளத் திறக்கப்படவுள்ளன.

## பெண் வேட்பாளர்கள் 136 பேர் போட்டி

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்

20 வட்டாரங்களைக் கொண்ட மட்டக்களப்பு மாநகர சபை தேர்தலில் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக்குழுக்களில் இருந்த 136 பெண் வேட்பாளர்கள் போட்டியிடுகின்றர்.

இலங்கை தமிழரசுக் கட்சியில் இருந்து 8 பேரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸிலிருந்து 7 பேரும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியிலிருந்து 7 பேரும், ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து 6 பேரும், மக்கள் விடுதலை முன்னணியிலிருந்து 8 பேரும், தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியிலிருந்து 8 பேரும், தமிழர் சமூக ஜனநாயக கட்சியிலிருந்து 12 பேரும், தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து 12 பேரும், ஜனநாயக தேசிய இயக்கத்திலிருந்து 8 பேரும், நல்லாட்சிக்கான தேசிய முன்னணியிலிருந்து 10 பேரும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து 10 பேரும், சுயேட்சைக்குழு 1லிருந்து 10பேரும், சுயேட்சைக்குழு 2லிருந்து 7 பேரும், சுயேட்சைக்குழு 3லிருந்து 7 பேரும், சுயேட்சைக்குழு 4லிருந்து 6 பேரும், சுயேட்சைக்குழு 5லிருந்து 10 பேரும் போட்டியிடுகின்றனர்.

## மீறினால் சட்ட நடவடிக்கை

■ துஷாரா

மட்டக்களப்பு, ஏறாவூர் நகர சபைக்குட்பட்ட வீதிகளில் மேற்கொள்ளப்படுகின்ற வீதி திருத்த வேலைகள், வீதிகளைச் செப்பனிடும் பணிகள் போன்றவற்றை, நகர சபையின் அனுமதியின்றி மேற்கொள்ளக்கூடாது என்று, ஏறாவூர் நகர சபையின் செயலாளரும் விசேட ஆணையாளருமாகிய பிர்னாஸ் இஸ்மாயில் தெரிவித்தார்.

ஏறாவூர் நகர சபைக்குட்பட்ட பிரதேசங்களில் மேற்கொள்ளப்படுகின்ற எந்தவொரு வீதி வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதாக இருந்தாலும் முதலில் நகர சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளவேண்டும். அவ்வாறு அனுமதியைப் பெற்ற பின்னர்தான் வீதி வேலைகளுக்கான பணிகளை முன்னெடுக்கவேண்டும். இதனை மீறிச் செயற்படுகின்றவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார். பொதுமக்கள் அறிந்து கொள்வதற்காக, இது தொடர்பான அறிவித்தல்களை, பொது இடங்களிலும் ஏறாவூர் அனைத்து பள்ளிவாசல்களிலும் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால

## ‘மூவின மக்களையும் அரவணைத்து நல்லாட்சியை வழி நடத்துகின்றார்’

■ பி.எம்.எம்.ஏ.காதர்



“ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மூவின மக்களையும் அரவணைத்து, நல்லாட்சியை வழி நடத்துகின்றார். இதனால் இன்று மூவின மக்களும் நிம்மதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்கின்றனர்” என, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் கல்முனைத் தொகுதி இணை அமைப்பாளரும் கல்முனை மாநகர சபையில் பெரியநீலாவணை 2ஆம் வட்டாரத்தில் கைச் சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளருமான இஸட்.ஏ.எச்.றஹ்மான் தெரிவித்தார்.

பெரியநீலாவணையில் நேற்று முன்தினம் (31) நடைபெற்ற கூட்டத்தில், தனது ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றி போதே, வேட்பாளர் இஸட்.ஏ.எச். றஹ்மான் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது,

“ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெறவிருக்கின்ற இந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தல் மிக முக்கிமான தேர்தலாகும்.

“இந்தத் தேர்தல் கட்சிகளுக்கு மட்டுமல்ல வேட்பாளர்களுக்கும் மிக முக்கியமான தேர்தலுமாகும். ஆட்சி அதிகாரத்தில் இருக்கின்ற எமது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் போட்டியிடுகின்றவர்களை வெற்றி பெறச் செய்வதன் மூலம் அந்தந்தப் பிரதேசம் மழுமையான அபிவிருத்தியை அடையும் என்பது உறுதியானதாகும்” என்றார்.

## மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்தல் முறைப்பாடுகள்

■ வா.கிருஸ்ணா

மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரையில் தேர்தல் முறைப்பாடுகள், 7 பதிவுசெய்யப்பட்டுள்ளனவென, மட்டக்களப்பு மாவட்டச் செயலாளரும் மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரியுமான எம்.உதயகுமார் தெரிவித்தார்.

வாழைச்சேனையில் இருந்து 2 முரண்பாடுகளும், காத்தான்குடியில் இருந்து ஒரு முறைப்பாடும், ஏறாவூர் நகரசபைப் பகுதியில் இருந்து மூன்று முறைப்பாடுகளும் களுவாஞ்சிகுடிப் பகுதியில் இருந்து ஒரு முறைப்பாடும் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

ஏழு முறைப்பாடுகளில் ஒன்றுக்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய ஆறு முறைப்பாடுகளுக்குமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

## ‘இலச்சினைகள் முக்கியமல்ல; இலட்சியமே முக்கியமாகும்’

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்



“இலச்சினைகள் முக்கியமல்ல; இலட்சியமே முக்கியமாகும்” என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

மண்முனைப் பற்று பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள காங்கேயனோடை பிரதேசத்தில் நேற்று முன்தினம் (31) மாலை நடைபெற்ற வேட்பாளர் சந்திப்பில் உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் மண்முனைப்பற்று பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் ஏ.மதீன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தொடர்ந்துரையாற்றிய அவர்,

“ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், சில இடங்களில் தனித்து மரச்சின்னத்திலும் சில இடங்களில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து யானைச் சின்னத்திலும் போட்டியிடுகின்றது.

“அதேபோன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டக்களப்பு மாநகர சபை மற்றும் ஓட்டமாவடி பிரதேச சபை, வாகரை பிரதேச சபை போன்ற இடங்களில் சுயேட்சையாகப் போட்டியிடுகின்றது.

“ஏறாவூரில் எமது அணிக்குள் இரண்டு அணிகள் வெவ்வேறு சின்னங்களில் போட்டியிடுகின்றன. காத்தான்குடியில் முஸ்லிம் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து, தராசு சின்னத்தில் போட்டியிடுகின்றது” என்றார்.

## ‘போதை கலந்த அரசியலால் மனித சமூகம் சீரழியும் அபாயம்’

■ ஏ.எச்.ஏ. ஹூஸைன்



“தமது சுயலாப அரசியல் நோக்கங்களுக்காக போதைப்பொருள் விற்பனையின் பின்னணியில் ஒரு சில ஈனத்தமான அரசியல்வாதிகள் இருந்து வருவது, மனித சமூகம் சீரழியும் அபாயம் நெருங்குகிறது என்பதை குறிப்புணர்த்துகின்றது” என, கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஷிப்லி பாறூக் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் குறிப்பாக முஸ்லிம் பிரதேசங்களில் அதிகரித்து வரும் போதைப்பொருள் சார்ந்த குற்றச் செயல்கள் பற்றி சமூகம் விழிப்பூட்டப்பட வேண்டும் என்று, நேற்று (01) அவர் ஊடகங்கள் வாயிலாக வேண்டுகோள் விடுத்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

“போதைப்பொருள் பாவனையை, விற்பனையை ஒழிக்கப்போவதாகக் கூறிக் கொண்டு, ஒரு சில அரசியல்வாதிகள், போதைப்பொருள் பாவனையுள்ள பிரதேசங்களில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

“இருந்தபோதும் இவ்வாறான பிரதேசங்களில் போதை மாத்திரை வியாபாரம் குறைந்ததாகவும் இல்லை. வியாபாரத்தில் கைது செய்யப்பட்டு சிறைச்சாலைகளுக்கு சென்றுவந்தவர்கள் திருந்தியதாகவும் இல்லை. அவர்களுக்கெதிராக அப்பிரதேசங்களிலுள்ளவர்கள் ஊரின் நன்மைகருதி எதுவிதமான தீர்க்கமான முடிவுகளை எடுத்ததாகவும் இதுவரை தெரியவில்லை.

“இவை அனைத்தையும் செய்பவர்கள் பிள்ளையையும் கிள்ளிவிட்டு, தொட்டிலையும் ஆட்டிவிடும் சில அரசியல்வாதிகள், அவர்களின் அற்பசொற்ப அரசியல் வாழ்க்கைக்கு, இளைஞர் சமுதாயம் பலியாகின்றது.

“சில அரசியல்வாதிகளும் அரசியல் அதிகாரம் கொண்ட நபர்களும் தங்களது அதிகாரத்தை ஒரு சமூகம் அழியும் செயற்பாட்டுக்கும் தங்களது அரசியல் இலாபங்களுக்காகவும் மாத்திரம் பயன்படுத்திக்கொண்டு, மனித சமூகத்தைச் சீரழிக்க போதை மாத்திரை வியாபாரிகளுடன் கைகோர்த்து நிற்கின்றனர்.

“இவ்வாறான செயற்பாடுகளை இன்னும் நமது பிரதேசங்களில் இருந்து நீக்காவிட்டால் அப்பிரதேசங்களிலுள்ள எதிர்கால அப்பாவி சமூகம்தான் என்பதை நினைவிலிருத்திக் கொள்ள வேண்டும். எனவே, போதைப் பொருளுக்கெதிராக அனைவரும் அணிதிரள வேண்டும்” என்றார்.



## ‘இனங்களுக்கு இடையிலான தொடர்பு மீளக் கட்டியெழுப்பப்படும்’

■ பைஷல் இஸ்மாயில்

“அம்பாறை மாவட்டத்தில் தமிழ் - சிங்கள மக்களுக்கிடையில் மிக அந்நியோன்யமான உறவுகள் நிலவி வந்திருக்கின்றன. ஆயினும், கடந்த மூன்று தசாப்த கால யுத்தம்தான் எம்மை பிரித்து விட்டது. ஆனால், அம்பாறை மாவட்டத்தில் இரு இனங்களுக்கும் இடையிலான தொடர்பை மீளக் கட்டி எழுப்புகின்ற உறவுப் பாலமாக நான் எனது இராஜாங்க அமைச்சர் பதவியைப் பயன்படுத்துவேன்” என்று, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சரும், அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஸ்ரீயாணி விஜேவிக்கிரம தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் அண்மையில் இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்ட இவர், காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் பிரதித் தவிசாளர் வீரகத்தி கிருஷ்ணமூர்த்தி தலைமையிலான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி செயற்பாட்டாளர்களை, அவரது அம்பாறை இல்லத்தில் நேற்று (01) சந்தித்துப் பேசியபோதே, இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“அம்பாறை மாவட்ட தமிழர்களுக்குப் பரந்துபட்டளவில் சேவையாற்றக் கூடிய மகத்தான வாய்ப்பு இப்போதுதான் முதன்முதலாக எனக்குக் கிடைத்துள்ளது.

“கடந்த காலங்களில் அம்பாறை மாவட்டத்தில் மூத்த அமைச்சர்கள் பலர் இருந்துள்ளபோது, அக்காலப் பகுதியில் எனக்கு எவ்விதமான அமைச்சுப் பதவிகளும் இருக்கவில்லை. அதனால் அம்பாறை மாவட்ட தமிழ் மக்களுக்கு பரந்து பட்டளவில் சேவை செய்கின்ற வாய்ப்புகளும் எனக்குக் கிடைத்து இருக்கவில்லை.

“ஆனால், இப்போதுதான் எனக்கு ஓர் அமைச்சுப் பதவி கிடைத்துள்ளது. இதன்மூலம் அம்பாறை மாவட்ட தமிழ் மக்களுக்கு என்னால் முடிந்தளவு சேவைகளை வழங்கவேண்டும் என்ற சிந்தனையில் இருக்கின்றேன்.

“அம்பாறை மாவட்டத்தில் தமிழ் - சிங்கள மக்களுக்கு இடையில் நின்று நிலைத்து நீடித்து வந்திருக்கின்ற மிக நெருக்கமான உறவின் அடையாளமாக காரைதீவு மண் விளங்குகின்றது.

“சிங்கள மக்களால், பத்தினி தெய்வம் என்று வழிபடப்படுகின்ற கண்ணகி அம்மன், காரைதீவு மண்ணின் காவல் தெய்வமாக அருள் பாலித்து வருகின்றார். அவருடைய அருளாசிகளுக்காக இறைஞ்சுகின்றேன்” என்றார்.

திடீர் சோதனை நடவடிக்கை

## உணவு விடுதிக்கு சீல்; வர்த்தகர்களுக்கு எச்சரிக்கை

■ வா.கிருஸ்ணா

மட்டக்களப்பு, மண்முனைப்பற்று பிரதேச செயலகப்பிரிவில் சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில், நேற்று முன்தினம் (31) மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையின்போது, உணவு விடுதியொன்றுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளதுடன், பல வர்த்தகர்களுக்கும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

புதுவருடத்தில் மண்முனைப்பற்று நகருக்கு வரும் மக்கள் சிறந்த சுத்தமான உணவுகளைப்பெறுவதற்கும் தரமான பொருட்களைக் கொள்வனவு செய்யும் வகையிலும், மண்முனைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் கே.ரமேஸ் தலைமையிலான



குழுவினர், இந்தச் சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

ஆரையம்பதி தொடக்கம் புதுக்குடியிருப்பு வரையிலான உணவு விடுதிகள், பொதுச் சந்தைகள், உணவு விற்பனை நிலையங்கள் இதன்போது சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போது, தாழங்குடா பகுதியிலுள்ள உணவகமென்று, சுகாதாரத்துக்கு கேடு விளைவிக்கக்கூடிய வகையில் இருந்ததன் காரணமாக, குறித்த உணவகம், வைத்திய அதிகாரிகளானால் சீல் வைக்கப்பட்டது.

அத்துடன், அங்கிருந்த பெருமளவு பாவனைக்குதவாத பொருட்களும் மீட்கப்பட்டதுடன், குறித்த உணவகத்தின் உரிமையாளருக்கு எதிராக மட்டக்களப்பு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாக, மண்முனைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.



தம்புள்ளை மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள மக்கள் விடுதலை முன்னணியின் அலுவலகத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த விளம்பர பலகையைச் சேதப்படுத்தியமை தொடர்பில் தம்புள்ளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாப்பாவல பகுதியில் அலங்காரப் பொருட்களை களஞ்சியப்படுத்தி வைத்திருந்த வீடொன்றில், நேற்று முன்தினம் இரவு (31) ஏற்பட்ட தீ விபத்தால் பாரிய சேதம் ஏற்பட்டிருப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.



**“ ஏற்றுமதிப் பொருட்களுக்கு அமெரிக்காவால் வழங்கப்பட்டு வந்த ஜி.எஸ்.பி வரிச் சலுகை காலாவதியாகியுள்ள போதிலும், அது இலங்கையின் பொருளாதாரத்தை பாதிக்கப்போவதில்லை**



அமைச்சர் சரத் அமுனுகம

## விபத்தில் இருவர் பலி

காலி அக்குலஸ்ஸ வீதியின் பிலான உடுகடே சந்திப் பகுதியில் நேற்று (01) காலை இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் ஒன்று விபத்துக்குள்ளானதில் இந்த அசம்பாவிதம் நேர்ந்துள்ளது.

இசை நிகழ்ச்சியொன்றை பார்வையிட்டு நேற்று (01) காலை வீடு திருப்பிய, இமதுவ பிரதேசத்தைச் சேர்ந்த 22 மற்றும் 23 வயதுகளையுடைய இரண்டு இளைஞர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

விபத்தில் காயமடைந்த மற்றைய நபர் காலி கராப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை காலி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## அலைபேசியை திருடியவர் கைது

அலைபேசியை திருடிய குற்றச்சாட்டில், வென்னப்புவை பகுதியில் (18) வயதுடைய இளைஞர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரான குறித்த இளைஞன், பன்னல பிரதேசத்தைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

தொழிற்சாலை ஒன்றின் ஓய்வு அறையில் அலைபேசி மின்னேற்றுவதற்காகப் பொருத்தப்பட்டிருந்த போதே, அதனை குறித்த இளைஞன் திருடியுள்ளதாக தெரியவந்துள்ளது.

சந்தேக நபர், அந்த தொழிற்சாலைக்கு வேலைக்குச் சேர்ந்த முதல் நாளே இவ்வாறு அலைபேசியை திருடியிருப்பதாக, பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர், அலைபேசியை போலவத்தைப் பிரதேசத்தில் விற்பனை செய்வதற்காகச் சென்றிய போதே, கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை, வென்னப்புவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ‘மொட்டு மலராது’

■ முக்தார் மொஹமட்

ஐக்கிய தேசியக் கட்சியை பிளவுபடுத்தி, கட்சி ஆதரவாளர்களுக்கு மத்தியில் கருத்து முரண்பாட்டை ஏற்படுத்தி, பேருவளையில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு மீண்டும் ஆதரவை பெற்றுக் கொடுக்க சிலர் எத்தனிக்கின்றனர் என, சுகாதார, போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

பேருவளையில் நேற்று முன்தினம் (31) நடைபெற்ற கூட்டமொன்றில் பங்கேற்று உரையாற்றிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது,

‘கடந்த இரு வருடங்களில் பேருவளை தொகுதியில் பாரிய அபிவிருத்திப் பணிகள் நல்லாட்சி அரசு மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ‘குறிப்பாக பாடசாலைகள் வீதிகள், கடற்றொழில்துறை, விளையாட்டரங்கு என்பன அபிவிருத்தி செய்யப்பட்டன.

“பேருவளை நகர சபைக்கு சுயேட்சைக்



குழு ஒன்று இம்முறை தேர்தலில் களமிறங்கியுள்ளது. இவர்களால் மக்களுக்கு என்ன சேவைகளைச் செய்ய முடியும்? இவர்களின் பின்னால் யார் செய்யப்படுகின்றனர்? இவர்கள் வெற்றியடையப் போவதில்லை. பொதுஜன பெரமுன கட்சியின் முகவர்களே இவர்கள். மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்களே சுயேட்சைக் குழுவில் போட்டியிடுகின்றனர். இவர்களுக்கு பெப்ரவரி 10ம் திகதி நல்ல பாடம் புகட்ட நாம் கை கோர்த்துச் செயல்படுவோம்” என்றார்.

### கடையாமோட்டை முஸ்லிம் மத்திய கல்லூரி

## உயர்தரத்தில் சிறந்த பெறுபேறு

■ முஹம்மது முஸப்பிர்

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையின் பெறுபேற்றின் பிரகாரம் புத்தளம் கல்வி வலயத்துக்குட்பட்ட கடையாமோட்டை முஸ்லிம் மத்திய கல்லூரி மாணவர்கள் இம்முறை சிறந்த பெறுபேற்றைப் பெற்றுள்ளனர்.

வர்த்தகப் பிரிவில் நான்கு மாணவர்கள் மூன்று பாடங்களிலும் ஏ சித்திகளைப் பெற்று சாதனை படைத்துள்ளனர். எஸ். ரதீஸ், கே. எச். நிவேதர்ணி, எம். ஆர். எப். ரஹ்மா, எம். டி. எம். ரஸ்லான் ஆகிய மாணவர்களே இவ்வாறு மூன்று பாடங்களிலும் ஏ சித்திகளைப் பெற்றவர்களாவர்.

மேலும் ஐந்து மாணவர்கள் இரண்டு ஏ சித்திகளையும், ஒரு பீ சித்தியையும் பெற்றுள்ளதுடன், ஐந்து மாணவர்கள் ஓர் ஏ சித்தியோடு இரண்டு பீ சித்திகளையும், ஒரு மாணவர் ஒரு ஏ, ஒரு பீ, ஒரு சீ சித்திகளையும் பெற்றுக் கொண்டு கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளதாக கல்லூரி அதிபர் எம். எஸ். எம். சஹீர் தெரிவித்தார்.

இதேவேளை இக்கல்லூரியில் கலைப் பிரிவில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுள் மூன்று மாணவர்கள் இரண்டு ஏ மற்றும் ஒரு பீ சித்திகளையும், மேலும் மூன்று மாணவர்கள் ஓர் ஏ இரண்டு பீ சித்திகளையும் பெற்றுக் கொண்டு இம்முறை இக்கல்லூரியிலிருந்து 21 பேர் வர்த்தக மற்றும் கலைப் பிரிவுகளில் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகும் வாய்ப்பைப் பெற்றுள்ளதாகவும் அதிபர் சஹீர் மேலும் தெரிவித்தார்.

## இலவச கண் சத்திர சிகிச்சை

■ எம்.யூ.எம். சனூன்

கண்களில் வெள்ளை படர்தல் நோயினை கண்டறியும் வகையில், இலவச வைத்திய பரிசோதனை முகாம் புத்தளம் குவைத் வைத்திய சாலையில் நேற்று முன்தினம் (31) நடைபெற்றது.

துருக்கி நாட்டின் ஐ.எச்.எச். நிறுவனம் இலவச கண் சத்திர சிகிச்சையை மேற்கொள்வதற்கு முன்வந்துள்ளது. துருக்கி நாட்டின் ஐ.எச்.எச். நிறுவன அதிகாரிகள் குறித்த இலவச வைத்திய பரிசோதனை முகாமில் கலந்து கொண்டு பணிகளை ஆரம்பித்து வைத்தனர்.

கண்களில் வெள்ளை படர்தல் நோயுள்ளவர்கள் 108 பேர் இதன்போது



இனங்காணப்பட்டுள்ளனர். இவர்களுக்கு விரைவில் கண் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படும் என புத்தளம் குவைத் வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## ‘சுயேட்சை குழுவின் வெற்றி உறுதி’

■ முக்தார் மொஹமட்



நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சுயேட்சைக் குழுவின் வெற்றி, சாதாரண வெற்றியன்றி வரலாறு காணாத வெற்றியாக அமைய வேண்டும். அதற்காக அணிதிரளுமாறு பேருவளை மக்களுக்கு அழைப்பு விடுப்பதாக, பேருவளை நகர சபை முன்னாள் தலைவர் அல்ஹாஜ் மர்ஜான் பளீல் தெரிவித்தார்.

பேருவளை நகர சபை தேர்தலில் சுயேட்சைக் குழுவாகப் போட்டியிடும் வேற்பாளர்களை ஆதரித்து பேருவளையில் நேற்று முன்தினம் இரவு (31) இடம்பெற்ற தேர்தல் கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தாவது,

“எனது தந்தை மர்ஹூம் எம்.எஸ்.எம் பளீல் ஹாஜியார், மக்கள் பேராதரவுடன் சுயேட்சைக் குழுவில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர். அதே போன்று இம்முறை தேர்தலில் 9 வட்டாரங்களிலும் வெற்றி வாகை சூடி நகர சபை நிர்வாகத்தை கையேற்று மக்களுக்கு அளப்பெரிய சேவைகளை செய்து கொடுப்போம்.

“பேருவளை நகர சபை நிர்வாகத்தை சுயேட்சைக் குழு கைப்பற்றிய பின் அபிவிருத்தி செயற்றிட்டங்களை எவ்வாறு முன்னெடுப்பது, மக்க ள் பிரச்சினைகளுக்கு எப்படித் தீர்வு பெற்றுக் கொடுப்பது என்பது பற்றி யாரும் எமக்குச் சொல்லித்தர வேண்டியதில்லை. அரசாங்கத்தின் நிதியுதவி கிடைக்கா விட்டாலும் மாற்று வழிகளை அதாவது வெளிநாட்டு தனவந்தர்களின், உள்ளூர் தனந்தர்களின் பங்களிப்போடும், நகர சபைக்கு கிடைக்கும் வரிப்பணத்தின் மூலமும் அபிவிருத்தி பணிகளை முன்னெடுக்க முடியும். இதை இம்முறை தேர்தலில் வெற்றி பெற்ற பின் செய்து காட்டுவோம்” என்றார்.



## 88,916 பேருக்கு புனர்வாழ்வு

போதைப்பொருள் தொடர்பான குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய 88,916 பேர் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமூக சீர்திருத்தங்கள் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2017ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள்ளேயே, 88,916 பேர் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

சமூக திருத்தங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் நீதிமன்றங்கள் ஊடாக இவர்கள் புனர்வாழ்வுக்காக அனுப்பப்பட்டுள்ளனர் என, சிறைச்சாலைகள் அமைச்சின் கீழ் இயங்கும் சமூக சீர்திருத்தங்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாடுபூராகவும் உள்ள நீதவான் நீதிமன்றங்கள் மட்டும் சுற்றுலா நீதிமன்றங்கள் 125 இன் ஊடாக போதைப் பொருள் தொடர்பான குற்றச்சாட்டுக்கு உள்ளானவர்களுக்கு புனர்வாழ்வளிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வேட்பாளரது விளம்பர பலகை சேதம்

சிலாபம் பகுதியில் வேட்பாளர் ஒருவரின் விளம்பரப் பலகையை தீயிட்டு சேதப்படுத்திய சம்பவம் தொடர்பில், விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக சிலாபம் பொலிஸார் தெரிவித்தனர்.

சிலாபம் பிரதேச சபைக்காக, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி சார்பில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவரின் வீட்டு முற்றத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த விளம்பரப் பலகையே இவ்வாறு சேதப்படுத்தப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று (01) அதிகாலை 12.10 மணியளவில்

ශ්‍රී ලංකා නිදහස් පක්ෂය
ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி
SRI LANKA FREEDOM PARTY

இடம்பெற்றுள்ளது. இனந்தெரியாத இருவர் குறித்த இடத்துக்கு வருகைதந்து இவ்வாறு விளம்பரப் பலகைக்கு தீயிட்டு சேதப்படுத்தித் தப்பிச் சென்றுள்ளனர் என, பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் சிலாபம் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கமைய, சிலாபம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வனவிலங்குகளை பாதுகாக்க காவலரண்

காடுகளை பாதுகாக்கும் வகையில் இராணுவ முகாம்களை அமைக்க உள்ளதாக வனவிலங்கு பாதுகாப்பு அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே, அவர் இதனை தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன், மேற்கொண்ட கலந்துரையாடலையடுத்து இந்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாக, அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வரும் காடழிப்பு நடவடிக்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையிலும், வனவிலங்குகளை பாதுகாக்கும் நோக்கிலும் இவ்வாறானதொரு செயற்பாட்டை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளதாக, அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா தெரிவித்துள்ளார்.

அத்துடன் தேசிய வனவிலங்கு பாதுகாப்புச் சரணாலயங்களை பாதுகாக்கும் நோக்கில் ஒவ்வொரு கிலோ மீற்றருக்கு ஒரு காவலரண் என்ற அடிப்படையில் பாதுகாப்பு




வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்

விலங்குகளை வேட்டையாடி வருவதன் காரணமான கடந்த 2010ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பெரிய தந்தங்களையுடைய சுமார் 20 கொம்பன் யானைகள் பலியாகியுள்ளனவென, மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

**“ ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன், மேற்கொண்ட கலந்துரையாடலையடுத்து இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது**

## சிறுவனை வேலைக்கமர்த்திய இருவர் கைது

பண்டாரகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, பண்டாரகம பிலியந்தலை வீதியில் ஹார்ட்வெயார் ஒன்றில் 10 வயது சிறுவனை வேலைக்கமர்த்திய இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த இருவரும் நேற்று முன்தினம் (31) பிற்பகல் கைது செய்யப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

119 என்ற அலைபேசி இலக்கத்திற்கு கிடைத்த முறைபாட்டுக்கமைய இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளர்.

பத்தேகொட பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய நபர் ஒருவரும், ஹார்ட்வெயார் நிறுவனத்தின் உரிமையாளரான 55 வயதுடைய நபருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை ஹொரனை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## வாசகர் உரிமை

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு, இப்பத்திரிகை ஒத்துழைப்பு வழங்குகிறது.

வாசகர்களின் உரிமைகளுக்கு நாம் மதிப்பளிப்பதோடு, இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத் துறையினருக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றவும் எம்மை அர்ப்பணித்துள்ளோம். அதனால், எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சினைகள் இருப்பின், அதுபற்றி எம்மோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். உங்கள் மனக்குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனஞ்செலுத்தி, அவற்றை நிறைவுசெய்ய முயல்வோம்.

அதன் மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால், இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யலாம்.

ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

மேலதிக விவரங்களுக்கு

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு.
இல.96, கிருல வீதி, கொழும்பு-05
தொலைபேசி: 011-5353635
தொ.நகல்: 011-5335500
மின்னஞ்சல்: srockwood@pccsl.lk
இணையத்தளம்: www.pccsl.lk

## துப்பாக்கியுடன் ஒருவர் கைது

திஸ்ஸமஹாராம, வீரவில கரபாதிய பகுதியில் சட்டவிரோதமான முறையில் துப்பாக்கியை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில், ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.



குறித்த பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே, சந்தேக நபரை நேற்று (01) கைது செய்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து 20 கஞ்சா செடிகளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேக நபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதுடன், மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

## புகைப்படக் கருவி வழங்கல்

ஹாசிம்உமர் அறக்கட்டளையின் சுயதொழில் ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ், ஊடகவியலாளர் ருசைக் பாரூக்கிற்கு, சிரேஷ்ட பத்திரிகையாளர் ஏ.பி. மதன், இலக்கிய புரவலர் ஹாசிம்உமர், கலைஞர் கலைச்செல்வன் ஆகியோர் புகைப்படக் கருவியொன்றை நேற்று (01) வழங்கி வைத்தனர். இதன்போது எடுக்கப்பட்ட படத்தை இங்கு காணலாம்.




## சீட்டிழுப்பு முடிவுகள்

| | | | | |
|---|---|---|---|---|
| மெகா பவர் | சீட்டிழுப்பு இல: 171 | டிசெம்பர் - 27 | போனஸ் இல. 10 G | 21-27 - 56- 70 |
| கொவிசெத | சீட்டிழுப்பு இல: 1632 | டிசெம்பர் - 30 | | J- 14-20- 22- 59 |
| ஜாதிக சம்பத | சீட்டிழுப்பு இல: 801 | டிசெம்பர் - 30 | போனஸ் இல. 03 | O 02- 03- 02- 07- 08 |
| மஹாஜன சம்பத | சீட்டிழுப்பு இல: 3567 | டிசெம்பர் -31 | | A 05- 09- 07 - 03- 07-07 |
| சுப்பிரிவாசனா சம்பத | சீட்டிழுப்பு இல: 1287 | டிசெம்பர் - 30 | போனஸ் இல - 22 | 14- 30 - 38 - 45 |
| சம்பத் ரேகா | சீட்டிழுப்பு இல: 798 | டிசெம்பர் - 31 | போனஸ் இல. 42/68 | T/44 18- 24- 39- 61 |
| வாசனா சம்பத | சீட்டிழுப்பு இல: 1472 | டிசெம்பர் - 28 | போனஸ் இல. 30/EGW | 04-20- 23- 34 |
| நீரோகா | சீட்டிழுப்பு இல: 339 | டிசெம்பர் - 31 | 13- 39- 40- 50 | விருச்சிகம் |
| தெலக்ஷபதி | சீட்டிழுப்பு இல: 84 | டிசெம்பர் - 29 | | M-63- 64- 69 |



“அடிக்கடி தவறு செய்பவன் அப்பாவி. ஒரே தவறை திரும்பத் திரும்பச் செய்பவன் மூடன். ஒரு தவறும் செய்யாதவன் மரக்கட்டை. தன்னை அறியாமல் தவறு செய்து பின் திருத்திக் கொள்பவன் மனிதன்”
– ஜோர்ஜ் பேர்னாட்ஷா

“அரசனின் அருகில் இருந்து சேவை செய்பவன், நல்ல குடும்பத்தில் பிறக்காதவனாகவோ, மூடனாகவோ, கருணை இல்லாதவனாகவோ இருந்தாலும் அவனை எல்லோரும் மதிக்கிறார்கள்”
– கொன்பியூஸிஸ்





# பாதுகாப்புத் தரப்பினரின் அத்தியாவசியப் பார்வை...

நாட்டினுடைய பாதுகாப்பென்பது மிக முக்கியமானது. அந்தப் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டிய பாரிய பொறுப்பு, முப்படை மற்றும் பொலிஸ் திணைக்களத்தைச் சாரும். நாட்டின் சட்டம், ஒழுங்கு நடவடிக்கைகளை இலங்கை பொலிஸ் திணைக்களமே மேற்கொண்டு வருகிறது. தவிர்க்க முடியாத பிரச்சினைகளைக் கட்டுப்படுத்துவதற்காக மாத்திரம் இராணுவத்தினரின் உதவி நாடப்படும்.

ஆனால், இந்நிலை தற்போது மாறி வருவதை அவதானிக்க முடிகிறது. தேர்தல் காலங்களிலும் ஏனைய சில நிகழ்வுக் காலங்களிலும் பாதுகாப்புத் தரப்பினரின் அவதானிப்புகள் அதிகரிக்கப்படுவதைக் காணக்கூடியதாகவுள்ளது. இத்தகைய கண்காணிப்புகள், பெரும்பாலும் தமிழர் பிரதேசங்களிலேயே ஏற்படுத்தப்படுகின்றன. ஒரே நாடு, ஒருமித்த மக்கள் என்று மார்தட்டிப் பிரசாரப்படுத்தும் நல்லாட்சி அரசாங்கமும் இத்தகைய செயலைக் கண்டும் காணாமலும்தான் இருக்கிறது. இந்நிலையில், பெப்ரவரி 10ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் விவரங்களைப் படைத்தரப்பினர் சேகரித்து வருவதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன. இந்தச் செயலை நியாயப்படுத்தும் விதமாக, இலங்கை இராணுவத்தின் தளபதி, கருத்து வெளியிட்டிருக்கிறார். “வடக்கு மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவே, வட மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடும் வேட்பாளர்களின் விவரங்கள் திரட்டப்படுகின்றன” என, இராணுவத் தளபதி லெப்டினென்ட் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் பாதுகாப்பைப் பற்றிக் கவலைப்படவேண்டிய இராணுவத் தளபதி, வடக்கில் பாதுகாப்பைப் பற்றி மாத்திரம் எதற்காகக் கவலைப்படுகிறார் என்ற கேள்வி எழுகிறது. ஏற்கெனவே, வடக்கில் இராணுவத்தினர் ஆக்கிரமித்த பொதுமக்கள் காணிகள் பற்றிய பிரச்சினை தொடர்கதையாகிக் கொண்டிருக்கிறது. அதுமாத்திரமன்றி, யாழ்ப்பாணம் நாகவிகாரை விகாராதிபதியின் பூதவுடலை பொதுமக்கள் வாழும் பிரதேசத்தில் எரிப்பதில் முன்னின்று பாடுபட்டவர்களும் இராணுவத்தினர்தான் என்ற குற்றச்சாட்டும் இருக்கிறது. இத்தகைய சந்தர்ப்பத்தில், வேட்பாளர்கள் பற்றிய தகவல் திரட்டென்பது மேலும் அச்சத்தையே ஏற்படுத்தியிருக்கிறது.

சமூகத்தின் முக்கிய பொறுப்பைப் பெறுவதற்காகப் போட்டியிடும் பிரமுகர்களுக்கான பாதுகாப்புத் தேவைப்படும் பட்சத்தில், பின்னர் தேடித் திரிவதிலும் பார்க்க, இப்பொழுதே தகவல்களைத் திரட்டுவது உகந்ததென்பதாலேயே வேட்பாளர்கள் பற்றிய தகவல்கள் திரட்டப்படுகின்றன என்றும் இராணுவத் தளபதி கூறியிருக்கிறார். தளபதியின் கூற்று நியாயமானதுதான். ஆனால், வடக்கில் மாத்திரம் எதற்காகத் தகவல்கள் திரட்டப்படுகின்றன என்பதே இங்குள்ள கேள்வி.

அதுமாத்திரமன்றி, இராணுவத்தினரின் கெடுபிடிகளிலிருந்து முற்றாக வெளிவராத வடக்கில், இராணுவத்தினர் நன்மை செய்வதாகக் கூறினாலும், அதை நம்பும் மனோநிலையில் மக்கள் இல்லை என்பதே யதார்த்தம். ஆகையால், மக்கள் மனதை வெல்லும் விதத்தில் இராணுவத்தின் செயற்பாடுகளைத் திட்டமிடுவதைவிடுத்து, அநாவசிய விடயங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பதே, அத்தியாவசியத் தேவையாக இருக்கும் என்பதை உணர்வது கட்டாயமாகிறது.

தமிழ்Mirror www.tamilmirror.lk
NO 8. HUNUPITIYA CROSS ROAD,
COLOMBO 2. P.O. BOX 1136
EDITORIAL:
TEL: 011 2 479 372-6,
011 2 479 479 (EX.375)
FAX: 011 2 304 114
MARKETING MANAGER
(DIR.) 011 2 479 822,
077 3421 476
CIRCULATION MANAGER
(DIR.) 2 479 611, 077 3 219 766,
071 4 543 756
SUBSCRIPTION MANAGER
(DIR.) 2 479 626, 2 479 628,
077 3 502 183
E-MAIL: tamilmirror@wijeya.lk









## வாழ்வியல் தரிசனம்

சந்தோசத்தை அடைவதற்கான வழிகளில், தங்களுக்கு மட்டும் அனுகூலமான வழியை மட்டும் கருத்தில் கொள்ளாமல், எல்லோருக்குமான நல்ல காரியங்களை முடிந்தவரை செய்ய முற்படுவதே நீடித்த சந்தோசமாகும்.

உங்களைப் பிறர் கௌரவப்படுத்தும் போது, அதை மன மகிழ்வுடன் ஏற்றுக்கொள்ளும் நீங்கள், எத்தனை நபர்களை அன்புடன் கௌரவப்படுத்திய வண்ணம் இருக்கின்றீர்கள். அல்லது ஏதாவது குறிப்பிட்ட உதவிகளைத் தன்னலமற்ற நிலையில் செய்துள்ளீர்களா என உங்களை நீங்களே கேட்பீர்களாக.

நன்றிமறப்பது மனச்சாட்சியை நெஞ்சத்தின் பதிவிலிருந்து அறுப்பதுபோலாகும். பிறர் செய்யும் நற்காரியங்களின் திறமைகளைக் கண்டுகொள்ளாதவர்கள் சமூகத்திலிருந்து பயன் பெறவேண்டும் என எண்ணுவது வெட்கப்பட வேண்டியதாகும்.

தங்களது காரியங்கள் இனிதே நிறைவேற்றப்பட்டதுமே அந்தப் பணிக்காக உதவி நல்கியவர்களை நினைவு கூருவதற்கு பலர் மறந்தும் போகின்றார்கள். உடன் செய்ய வேண்டிய நல்ல கருமங்களை, குறிப்பு எடுத்து உடன் நிறைவேற்றுக. மாந்தரை மதிப்பதுவே மானிடரின் பெரும் கடன்.

– பருத்தியூர் பால. வயிரவநாதன்

# இன்னல்களை மட்டுமே இதயங்களில் நிரப்பிய இடப்பெயர்வுகள்

**காரை துர்க்கா**

இலங்கையில் ஏற்பட்ட இனமுறுகலுக்குப் பின்னர், தமிழர் வாழ்வில் இருந்து, பிரிக்க முடியாத ஒரு விடயமாக இடப்பெயர்வுகள் உள்ளன.

ஈழத்தமிழர் வாழ்வில், ‘ஊர்’ என்பது பெரும் முக்கியத்துவம் வாய்ந்த, அந்தஸ்து உயர்ந்த சொல் ஆகும். உன்னதமான வாழ்வுக்கு, தூய்மையான அன்பு அடிப்படை எனலாம். அந்தவகையில், பண்பாட்டுடனும் அன்புடனும் அரவணைக்கும் உயரிய ஓர் அடையாளக் குறியீடு ஊர் ஆகும்.

“அவர் எங்கள் ஊர்க்காரர்” என்று கூறுவதிலும் “ஊரில் உறவுகள் சுகமாக உள்ளனரா” என நலம் விசாரிப்பதிலும் “ஊருக்கு எப்போது பயணம்” எனக் கேட்பதிலும் தனிச் சுகம் இயல்பாக ஊற்றெடுக்கும்.

இவ்வாறாக உறவாடுவதில் ஒருவித அந்நியோன்ய உணர்வு, பற்று, பிடிப்பு எனப் பல விடயங்கள் ஒன்றுடன் ஒன்றாகப் பிணைந்திருக்கும். ஒருவரது ஊரைக் கொண்டு, அவருக்கு முத்திரை குத்துவதிலும் அந்தஸ்தை மதிப்பீடு செய்வதிலும் ஊர் கணிசமான பங்கை வகிக்கின்றது.

இவ்வாறான அபிமானம் பெற்றதும், அடையாளம் உடையதுமான பெயர் பெற்ற ஊர்கள், இப்போது உருக்குலைந்து, தன்னிலை அழிந்து, கீர்த்தி அருகி இருப்பது அனைவருக்கும், உயிர் எடுக்கும் துயர் பகிர்ந்த செய்தி ஆகும்.

ஆம்! இவ்வாறாக, ஊரோடும் உறவோடும் உடலும் உயிரும் போல, கலந்த உயிரோட்டமான தமிழ் மக்களின் வாழ்வியலை, இடப்பெயர்வு இல்லாமல் ஆக்கி விட்டது.

சுனாமி, வெள்ளப்பெருக்கு போன்ற இயற்கை அனர்த்தங்களும் ஆயுதப் போர் எனும் செயற்கையாக மனிதனால் ஆக்கப்பட்ட அழிவுகளும் ஒவ்வோர் ஊரினதும் கலைப்பண்புகள் பண்பாட்டு, வாழ்வியல் கோலங்கள் ஆகியவற்றைக் கலங்கடித்து கவலைக்கிடமாக மாற்றிவிட்டுள்ளன.

இடப்பெயர்வு, ஒரு பகுதி மக்களை உள்நாட்டில் அகதியாக்கியும் பிறிதொரு தொகை மக்களை வெளிநாட்டுக்குக்கு அனுப்பி அகதியாக்கியும் ஒட்டு மொத்தத்தில் ஓர் அவல வாழ்வுக்குள் மக்களைத் தள்ளி விட்டுள்ளது.

உலக சுகாதார நிறுவனத்தின் வரைவிலக்கணத்தின் பிரகாரம், ஒரு மனிதனின் ஆரோக்கியம் என்பது உடல், உள்ளம், குடும்பம், சமூகம், ஆன்மீகம் ஆகிய தளங்களில் உள்ள உச்ச அல்லது திருப்தியான நிலையைக் குறிக்கும். இடப்பெயர்வுகள் மேற்குறிப்பிட்ட ஐந்து தளங்களையும் ஆட்டிப் படைத்து விடுவன ஆகும்.

உதாரணமாக, ஒருவர் தனது சொந்த ஊரில் விவசாயம் மேற்கொண்டு, உடல் மற்றும் உள ஆரோக்கியத்துடனும் குடும்ப அங்கத்தவர்களுடனும் சமூகத்துடனும் ஆன்மீக வழியிலும் இரண்டறக் கலந்து, ஓர் அர்த்தம் பொதிந்த வாழ்வை வாழ்வார்கள்; வாழ்ந்தார்கள். ஆனால், இடப்பெயர்வுகள் அவரிலிருந்து இவற்றை இடம்பெயரச் செய்து விட்டன.

பொதுவாக ஒருவர், தனது தாய் மண்ணில் சொந்த இருப்பிடத்தில் காணி பூமியுடனும் தன் சுற்றுச்சூழலுடனும் கொண்ட உறவு உயர்வானது; உன்னதமானது; உவகையானது. அப்படிப்பட்ட உறவை அறுத்தெறிந்து, அந்நியமானதும் அறிமுகமற்ற அல்லது விருப்பமற்றதுமான சூழலில் வாழ நிர்ப்பந்திப்பது பல விதமான மனவடுக்களை ஏற்படுத்தவல்லது. இது ஒரு விதத்தில் மனித உரிமைமீறலாகும்.

ஊரில் கூட்டுக்குடும்பமாக, ஒரு கூட்டுப்பறவைகளாகச் சிறப்பாக வாழ்ந்தவர்களின் வாழ்வை இடப்பெயர்வு இழக்க வைத்து விட்டது எனலாம்.

பொதுமையாக ஒரு சொல்லில், ஈழத்தமிழர் எனக் குறிப்பிட்டாலும், ஒவ்வோர் ஊருக்கும் ஒவ்வொரு தனித்தன்மை உண்டு. அவ்வாறான தனித்தன்மைகளையும் இடப்பெயர்வு துடைத்தழித்து விட்டது.

இலங்கைக்கு பிரித்தானியரிடமிருந்து சுதந்திரம் கிடைத்து, பத்து வருடங்களில் (1958) தமிழர்களுக்கு இடப்பெயர்வு தென்னிலங்கையில் அறிமுகம் செய்யப்பட்டது. எழுபது வருட சுதந்திர வாழ்வில் அறுபது வருடங்களாக சொந்தத் தாய் நாட்டில் அகதி வாழ்வுடன் வலிதற்றவர்களாக ஏதிலிகளாக தமிழ் மக்கள் உள்ளனர்.

தற்போது பல கிராமங்கள் மீள் குடியேற்றத்துக்கு என அனுமதிக்கப்பட்டாலும் அந்தக் கிராமங்கள் புதுப்பொலிவுடன் முன்னைய நிலைமைகளுக்கு மீளத் திரும்பாத நிலைவரமே இன்னமும் காணப்படுகின்றது.

நீண்ட கால இடப்பெயர்வினால் பிற இடத்து வாழ்க்கை கணிசமான மக்களுக்கு இயல்பாக்கப்பட்டு விட்டது. மேலும், தற்போது சராசரியாக முப்பது வயதில் வாழும் சந்ததியினருக்குத் தமது, சொந்த ஊர் மண்ணின் வாசமே தெரியாதவர்களாகவே வாழ்கின்றனர்.

நல்லாட்சி அரசாங்கம் அரியணையில் அமர்ந்து, மூன்று வருடங்கள் பூர்த்தி ஆகியுள்ளன. ஆனால், முழுமையான மீள் குடியேற்றம் என்பது பூரணப்படுத்தப்படாமல் உள்ளது.

யாழ்ப்பாணத்தில் வலிவடக்கு, திருகோணமலையில் சம்பூர், முல்லைத்தீவில் கோப்பாபுலவு எனத் தமிழர் பிரதேசங்களாகிய எட்டு மாவட்டங்களிலும், இலக்கை எட்ட முடியாத நிலையில் மீள்குடியேற்றம் அன்னநடை பயில்கின்றது.

தலையிடியும் காய்ச்சலும் தனக்குத்தனக்கு வந்தாலே அதன் வேதனை புரியும். அதேபோல இடப்பெயர்வில் இடிபட்டவர்களுக்கே அதன் வலி புரியும்.

அண்மையில், வவுனியாவிலிருந்து கொழும்பு நோக்கிப் புகையிரதத்தில் செல்கையில், அனுராதபுரத்தில் சகோதர இனத்தவர் ஒருவர் ஏறி (இணைந்து) கொண்டார். சில நிமிடங்களின் பின்னர், ஒரு புன்முறுவலுடன் எமது உரையாடல் ஆரம்பித்தது.

ஒரு சில சுய விவரங்களைப் பகிர்ந்து கொண்ட பின், மெல்ல அரசியலுக்குள் அவர் அடியெடுத்து வைத்தார். “தற்போது புலிகள் இல்லை; சண்டைகள் இல்லை; பொருட்கள் தட்டுப்பாடு இல்லை; கைதுகள் இல்லை என்றவாறு ‘இல்லாமை’ என்பது இல்லை” எனத் தொடர்ந்தார்.

மறுபுறம், “சமாதானம் மலர்ந்துள்ளது. மீள்குடியேற்றம் நடக்கின்றது. நல்லாட்சி நிலவுகின்றது” எனப் பொழிந்து தள்ளினார்.

“தற்போதும் தமிழ் மக்கள் மீளக் குடியேறாமல் அகதிவாழ்வு வாழ்கின்றனர்” என்றேன் நான் அமைதியாக.

அவருக்கு எனது பதில் தூக்கி வாரிப் போட்டது. “ஏன்? ஆயுதச் சண்டைகள் முடிந்தால், மக்களை அவர்களது இடங்களுக்கு செல்ல அனுமதிக்க வேண்டுமே? ஏன் அவ்வாறு நடைபெறவில்லை” எனக் கேள்வி எழுப்பினார்.

> **உண்மைகள் உலகத்துக்கு உரத்துக் கூறப்பட்டிருப்பின் உண்மையான நல்லிணக்கம் அனைவர் மனங்களிலும் இயல்பாகத் தோன்றும். நம்நாட்டில் நல்லிணக்கம், இனவாதம் மற்றும் மதவாதம் என்ற முகமூடிக்குள் ஒழிந்து கொண்டு சீவியம் செய்கின்றது**

“நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு கேந்திர முக்கியத்துவமான இடங்கள் என அடையாளமிடப்பட்ட இடங்களை சிறி லங்கா படையினர் தொடர்ந்தும் தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர்” என்றேன்.

அவர் திகைப்படைந்தார்.

உரையாடல் தொடர்ந்தது. “எவ்வளவு காலம், மக்கள் தமது இடங்களை இழந்து வேறு இடங்களில் இருக்கின்றனர்” எனக் கேட்டார்.

“சுமார் முப்பது வருடங்களுக்கு மேல்” என்றேன்.

அப்போது அவரது கண்களில் சோகம் படர்ந்தது. அவருக்குத் தமிழ் மக்கள் மீது அன்பு பிறந்தது. இனம் புரியாத துன்பத்துக்கு ஆளானவர் போல ஆட்பட்டார்.

இதுவே உண்மையான களநிலவரம்.

கணிசமான சிங்கள மக்களுக்குத் தமிழ் மக்களது அவலங்கள் புரிய வைக்கப்படவில்லை; புரிய வைக்கப்படப் போவதும் இல்லை.

இங்கு எமது தமிழ் அரசியல்வாதிகளின் பேச்சின் வீச்சு, அவர்களது மூச்சைத் தொடவில்லையே என்ற ஏக்கமும் கவலையும் எனக்கு ஏற்பட்டது.

ஒரு குடும்பம் தூர இடத்துக்குப் பயணம் மேற்கொண்டு விட்டு, மீளத் தமது வீட்டுக்கு வந்து, பக்கத்து வீட்டில் கொடுத்த படலைத் திறப்பை வாங்கித் திறந்து கொண்டு உள்ளேநுழைவது போலவே, மீள்குடியேற்றம் குறித்த அவரது அறிவும் விளக்கமும் காணப்பட்டன.

மீள் குடியேற்றத்துக்காகத் தனது (முற்றிலும் உடைந்த, உடைக்கப்பட்ட) முற்றிலும் பற்றைகள் சூழ்ந்த தனது வீட்டை (கோவிலை) பார்க்க வரும் அப்பாவித் தமிழனின் ஏக்கமும் சோகமும் கலந்த நிலையை எவ்வாறு அவருக்கு விளக்குவது, எவ்வாறு புரியவைப்பது?

அவரதுநிலை, ஒருபக்கம் அப்பாவித்தனமாகத் தெரிந்தாலும் மறுபக்கம் எமது கையறுநிலை உணர்வும் மனதைத் தொட்டு விட்டுச் சென்றது.

அகிலத்தில் அனைத்து அம்சங்களையும் கையில் காணக்கூடிய வசதிகள் கூடிய இந்த உலகில் வாழ்கின்றோம். ஆனால், மிகச் சிறிய நாட்டில் பக்கத்து (அயல்) மாவட்டத்தில் நடக்கும் விடயத்தைத் தெரியாத பாமரனாகவே அவரைக் கண்டேன்.

ஏன் இவ்வாறு எனச் சற்று யோசிப்பின், உண்மைகள் உலகத்துக்கு உரத்துக் கூறப்பட்டிருக்கவில்லை. கூறப்பட்டிருப்பின் உண்மையான நல்லிணக்கம் அனைவர் மனங்களிலும் இயல்பாகத் தோன்றும். நம்நாட்டில் நல்லிணக்கம், இனவாதம் மற்றும் மதவாதம் என்ற முகமூடிக்குள் ஒழிந்து கொண்டு சீவியம் செய்கின்றது.

அடுத்து, ஒரு தொகைத் தமிழ் மக்கள் உள்நாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்களால் புலம்பெயர்ந்து வெளிநாடு சென்றனர். சராசரியாக பத்து இலட்சத்துக்கு மேற்பட்டோர் அவ்வாறாக இங்கிருந்து வெளியேறி விட்டனர். அவர்கள் பொருளாதார ரீதியாக வளமாக வாழ்ந்தாலும், தாயகத்தில் உள்ள மக்களது விடிவு இன்னமும் இருளில் இருப்பதையிட்டு மனக்குமுறல்கள் மனச்சோகங்களுடனேயே வாழ்கின்றனர்.

தாய் நா(வீ)ட்டில் தம் மக்களுக்கு எதிராக நடக்கும் ஒவ்வோர் அலைகளும் புலம்பெயர்ந்தோர் தேசங்களிலும் அதிர்வுகளை ஏற்படுத்துகின்றன.

இவ்வாறாக போர் ஓய்ந்தாலும் தமிழர் விழிகளில் ஈரம் காயவில்லை. இன்னல்களை மட்டுமே, தமிழர் இதயங்களில் நிரப்பிய இடப்பெயர்வு மகிழ்ச்சியை அவர்கள் மனங்களிலிருந்து நிரந்தரமாக அகழ்ந்து விட்டது.

## கடிதங்கள்

### மருக்காரம்பளையில் களஞ்சியப்படுத்தப்பட்ட நீர்க்குளாய்களால் கிராமமக்கள் அவதி

மருக்காரம்பளை கிராமத்தில் கவனிப்பாரற்றுக் காணப்படும் நீர்க் குழாய்களால் கிராம மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியாவில் மாமடு குளத்தில் இருந்து உருவாகிச் செல்லும் பறங்கியாற்றை மறித்து, பேராறு எனும் நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டு, அங்கிருந்து வவுனியா நகருக்கு நீர்வசதிகள் மேற்கொள்ளும் செயற்பாடு முன்னெடுக்கப்படுகிறது.

இந்நிலையில், நீர்த்தாங்கிகளுக்கு நீரை கொண்டு செல்வதற்காக பெருந்தொகை கறுப்பு நிறக் குழாய்கள் சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு, இந்திய நிறுவனத்தின் ஒப்பந்தத்தில் நிலத்தில் புதைக்கப்பட்டன.

இத்திட்டத்தை ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவில் செயற்படுத்தியிருந்த நிலையில், குறித்த கறுப்பு நிற குழாய்கள் தரமற்றவை எனத் தெரிவிக்கப்பட்டதையடுத்து, மண்ணில் புதைக்கப்பட்ட குழாய்கள் மீளஅகழப்பட்டு, நீல நிறக் குழாய்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இதன் காரணமாக, மருக்காரம்பளை கிராமத்தில் தனியார் ஒருவரின் காணியில், கடந்த நான்கு வருடங்களுக்கும் மேலாக, கறுப்பு நிறக் குழாய்கள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன.

குறித்த காணி, பற்றைக் காடாக மாற்றமடைந்து, பலவித சமூகசீர்கேடுகள் இடம்பெறும் இடமாக மாறிவருகின்றது. அத்துடன், விசஜந்துகளின் பெருக்கமும் அண்மைக்காலமாக இப்பகுதியில் அதிகரித்துக் காணப்படுகின்றன. இவை மாத்திரமின்றி, இரவு நேரங்களில் இனந்தெரியாதோர் இப்பிரதேசத்தில் உலாவித்திரிவதனால் அச்சமான நிலையும் காணப்படுகின்றது.

எனவே, குறித்த நீர்க் குழாய்களை எமது கிராமத்தில் இருந்து வெளியேற்றி எமது கிராம மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு அதிகாரிகள் ஆவன செய்து தருமாறு, மருக்காரம்பளை கிராம மக்கள் கேட்டுக்கொள்கின்றார்கள்.

– க. அகரன்



“இரண்டு நண்பர்களிடையே மத்தியஸ்தம் செய்யாதீர்கள். செய்தால் ஒரு நண்பனை இழப்பீர்கள். இரண்டு அந்நியர்களிடையே மத்தியஸ்தம் செய்யுங்கள். செய்தால் ஒரு நண்பன் கிடைப்பான்”
– நெயில் ஹெய்மன்

“ஒரு பணக்காரன் சொல்வதை பத்து ஏழைகள் சேர்ந்து மாற்றி விடலாம்; இது ஜனநாயகத்தின் பலம். ஓர் அறிவாளி சொல்வதைப் பத்து முட்டாள்கள் சேர்ந்து மாற்றிவிடலாம்; இது ஜனநாயகத்தின் பலவீனம்”
– ஆபிரஹாம் லிங்கன்







ரவூப் ஹக்கீம்



ரிஷாட் பதியுதீன்



எச்.எம்.எம். ஹரீஸ்



அலிசாஹிர் மௌலானா



ஹாபிஸ் நசீர் அஹமட்



பஷீர் சேகுதாவூத்



கே.எம். ஜவாத்

# முஸ்லிம் காங்கிரஸும் ஊன்றுகோலும்

**முகம்மது தம்பி மரைக்கார்**

‘திருவிழா என்று’ உவமிக்குமளவுக்கு தேர்தல் காலம் இன்னும் களைகட்டவில்லை. அதற்கு இன்னும் கொஞ்சம் நாளெடுக்கும். தேர்தல் தினம் அறிவிக்கப்பட்ட தினத்துக்கும், தேர்தல் நாளுக்குமிடையில் 50 நாட்கள் இடைவெளி இருந்தமைதான் இதற்குக் காரணமாகும்.

இன்னும் இரண்டு வாரங்கள் கழியும் போதுதான், தேர்தல் காலம் களைகட்டத் தொடங்கும்.

ஆனாலும், திருவிழா அளவுக்கு தேர்தல் காலம் களைகட்டும் என்பதற்கு, நடக்கும் நிகழ்வுகள் கட்டியம் கூறுகின்றன.

வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்ட தினத்திலிருந்து நடந்தவற்றை எல்லாம் வைத்தும் பார்க்கும்போது, தேர்தல் காலம் களைகட்டுவதற்கான சாத்தியங்கள் அதிகமாகவே தெரிகின்றன.

குறிப்பாக, கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் அரசியல் களம், களைகட்டுவதற்கான அறிகுறிகள் இப்போதே தெரியத் தொடங்கி விட்டன.

93 உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்புமனுக்களைத் தாக்கல் செய்யும் இறுதித் தினமன்று, முஸ்லிம் காங்கிரஸின் தளம் என்று அறியப்படும் அம்பாறை மாவட்டத்தில், முஸ்லிம் காங்கிரஸின் அக்கரைப்பற்று அமைப்பாளரும், அந்தக் கட்சியின் உயர்பீட உறுப்பினருமான ஹனீபா மௌலவியும் முஸ்லிம் காங்கிரஸின் அக்கரைப்பற்று பிரதேச மத்திய குழு உறுப்பினர்கள் சிலரும், அந்தக் கட்சியிலிருந்து விலகி, அமைச்சர் ரிஷாட் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸில் இணைந்து கொண்டார்கள்.

அந்த நிகழ்வு நடந்து நான்கு நாட்களுக்குள், கிழக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினரும், முஸ்லிம் காங்கிரஸின் பிரதிப் பொருளாளரும், உயர்பீட உறுப்பினருமான கல்முனையைச் சேர்ந்த கே.எம். ஜவாத், அகில இலங்கை மக்கள் காங்கிரஸில் இணைந்து கொண்டதாக அறிவித்தார்.

எப்படிப் பார்த்தாலும், தேர்தல் காலமொன்றில் மேற்படி நபர்கள் மு.காவிலிருந்து விலகியமையானது, அந்தக் கட்சிக்கு இழப்புத்தான் என்பதை மறுக்க முடியாது. அதிலும், கிழக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் ஜவாத்தின் விலகலானது மு.காவுக்கு ஜீரணிக்க முடியாததாகவே இருக்கும்.

முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப்பின் ஊரான கல்முனைதான், ஜவாத்துக்கும் சொந்த ஊராகும். முஸ்லிம் காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில், தனது இள வயதிலிருந்தே அஷ்ரப்புடன் நெருக்கமாக இருந்து, கட்சி வளர்ச்சிக்காக ஜவாத் உழைத்தார். முஸ்லிம் காங்கிரஸின் மறைந்த தலைவர் அஷ்ரப்பின் அன்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமானவர்களில் ஒருவராக ஜவாத்தும் இருந்தார்.

நேராகவும், வெளிப்படையாகவும் விமர்சனங்களை முன்வைக்கும் ஒருவராக ஜவாத் அறியப்படுகின்றார். முஸ்லிம் காங்கிரஸின் தற்போதைய தலைவர் ரவூப் ஹக்கீமையும் பல தடவை நேருக்கு நேராக ஜவாத் விமர்சித்திருந்தார். அதனால், மு.கா தலைவருக்கும் ஜவாத்துக்கும் இடையில் எப்போதும் நெருக்கமானதோர் உறவு இருந்ததில்லை.

ஆனாலும், முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவர்களில் ஒருவரும், கல்முனையைச் சேர்ந்தவருமான பிரதியமைச்சர் எச்.எம்.எம். ஹரீஸ், அவரின் பிரதேசத்தில் தனிக்காட்டு ராஜாவாக மாறிவிடக் கூடாது என்பதற்காக, மு.கா தலைவருக்கு, ஜவாத் தேவையாகவும் இருந்தார் என்கிற பேச்சும் உள்ளது.

கல்முனையைச் சேர்ந்த ஜவாத்தும் ஹரீஸும் முஸ்லிம் காங்கிரஸுக்குள் முக்கியஸ்தர்களாக இருந்தபோதும், அரசியலில் அவர்கள் இருவரும் கீரியும் பாம்புமாகவே இருந்து வருகின்றனர். “கல்முனையில் பிரதியமைச்சர் ஹரீஸை, மு.கா தலைவர் முன்னிலைப்படுத்துவதோடு, என்னை திட்டமிட்டு ஓரம் கட்டுகிறார்” என்று, மிக நீண்ட காலமாகவே ஜவாத் குற்றம் சாட்டி வந்தார்.

இந்தநிலையில், முஸ்லிம் காங்கிரஸிலிருந்து அந்தக் கட்சியின் செயலாளர் நாயகமாக இருந்த எம்.ரி. ஹசன் அலி வெளியேறியபோது, ஜவாத்தும் இணைந்து வெளியேறுவார் என்கிற எதிர்பார்ப்பு கட்சிக்குள்ளும் வெளியிலும் இருந்தது.

முஸ்லிம் காங்கிரஸின் செயலாளராக ஹசன் அலிதான் இருக்க வேண்டும் என்பதில் ஜவாத் உறுதியாக இருந்தார். ஹசன் அலி வெளியேறிய பிறகும் முஸ்லிம் காங்கிரஸுக்குள் ஜவாத் தொடர்ந்து இருந்தமையைப் பலரும் ஆச்சரியமாகவே பார்த்தனர்.

எவ்வாறாயினும், 2015ஆம் ஆண்டு முஸ்லிம் காங்கிரஸின் யாப்பில் பாரிய மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர், கட்சிக்குள் ஜவாத் பிடிப்பற்ற ஒருவராகவே இருந்து வந்தார். முஸ்லிம் காங்கிரஸிலிருந்து எந்தக் கணத்திலும் ஜவாத் விலகலாம் என்கிற சந்தேகம் பலருக்கும் இருந்தது. அது இப்போது நடந்திருக்கிறது.

முஸ்லிம் காங்கிரஸிலிருந்து விலகி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸில் இணைந்து கொண்ட ஜவாத், கல்முனை மாநகரசபைக்கான தேர்தலில் தனது ஆட்கள் பலரை அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் வேட்பாளராகவும் நிறுத்தியிருக்கின்றார். மேலும், அந்தத் தேர்தலுக்குரிய விகிதாசார வேட்பாளர் பட்டியலில் தனது பெயரையும் இணைத்துக் கொண்டு, தேர்தல் வேலைகளில் ஜவாத் களமிறங்கியிருக்கின்றார்.

முஸ்லிம் காங்கிரஸிலிருந்து ஜவாத் விலகியதோடு மட்டும் நின்று விடாமல், கல்முனை மாநகரசபைக்கான தேர்தல் களத்தில், அதுவும் முஸ்லிம் காங்கிரஸின் எதிராளிக் கட்சியின் சார்பில் ஒரு வேட்பாளராகக் களமிறங்கியிருப்பது மு.காவுக்கு அதிர்ச்சியாகவே இருக்கும்.

அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும், கரையோரப் பிரதேசங்களின் உத்தியோகபூர்வமற்ற தலைநகராக கல்முனை உள்ளது. மேலும், முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் அஷ்ரபின் சொந்த ஊர் கல்முனை என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதனால், கல்முனை மாநகரசபைத் தேர்தலில் வெற்றி பெறுவதென்பதை, தனக்கான பெருமையாக முஸ்லிம் காங்கிரஸ் கருதுகிறது. கடந்த காலங்களில் கல்முனை மாநகர சபையை முஸ்லிம் காங்கிரஸ்தான் கைப்பற்றியும் வந்துள்ளது. ஆனால், இம்முறை கல்முனை மாநகர சபைக்கான தேர்தல், முஸ்லிம் காங்கிரஸுக்கு சவாலையும் பதற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளமையை அவதானிக்க முடிகிறது.

கல்முனை மாநகர சபைக்கான தேர்தலில், முஸ்லிம் காங்கிரஸுக்குப் பாரிய வெற்றியையும், பெருமளவான உறுப்பினர்களையும் பெற்றுக் கொடுப்பதில் சாய்ந்தமருது பாரிய பங்களிப்பைச் செய்து வந்தது.

ஆனால், இப்போது அவ்வாறானதொரு நிலைவரம் அங்கு இல்லை. தங்களுக்கு உள்ளூராட்சி சபையொன்று கிடைக்கும் வரை, எந்தவோர் அரசியல் கட்சிக்கும் ஆதரவளிப்பதில்லை எனச் சாய்ந்தமருது மக்கள் சார்பாக, அந்த ஊர்ப் பெரிய பள்ளிவாசல் தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளது.

இதையடுத்து கல்முனை மாநகர சபைக்கான தேர்தலில், சுயேட்சைக் குழுவொன்றை சாய்ந்தமருது பள்ளிவாசல் நிருவாகத்தினர் களமிறக்கியுள்ளனர். இந்த நிலைவரமானது, முஸ்லிம் அரசியல் கட்சிகளுக்கு பேரிடியாகவும் அமைந்துள்ளது.

இவ்வாறானதொரு நிலையில், கல்முனையில் மக்கள் செல்வாக்குள்ள ஜவாத், முஸ்லிம் காங்கிரஸிலிருந்து விலகி, அந்தக் கட்சியின் மிகப்பெரும் பகைமைக் கட்சியான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில், கல்முனை மாநகர சபைக்கான தேர்தலில் களமிறங்கியிருப்பது, முஸ்லிம் காங்கிரஸுக்கு அடியாக அமைந்து விட்டதாகவே, அரசியலரங்கில் பேசப்படுகிறது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட பிறகு, அரசியலரங்கில் ஏற்பட்டுள்ள இவ்வாறான மாற்றங்கள், முஸ்லிம் காங்கிரஸுக்கு சாதகமற்ற காரணிகளாகவே அமைந்துள்ளன. இதன் காரணமாக, முஸ்லிம் காங்கிரஸின் கோட்டை என அறியப்படுகின்ற அம்பாறை மாவட்டத்துக்குள், எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலை அந்தக் கட்சி பாரிய சவால்களுடனேயே எதிர்கொள்ள வேண்டி வரும்.

அம்பாறை மாவட்டத் தேர்தல் களத்தில் புறச் சவால்களையே முஸ்லிம் காங்கிரஸ் அதிகம் சந்திக்க வேண்டியுள்ளது. ஆனால், கிழக்கின் மற்றொரு மாவட்டமான மட்டக்களப்பில் புறத்திலும், அகத்திலும் சவால்களைச் சந்திக்க வேண்டியதோர் இக்கட்டான நிலைக்குள் முஸ்லிம் காங்கிரஸ் தள்ளப்பட்டுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் அலிசாஹிர் மௌலானா, மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூரைச் சேர்ந்தவர். அதே ஊரில்தான் கிழக்கு மாகாணசபையின் முன்னாள் முதலமைச்சரும், முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவர்களில் ஒருவருமான ஹாபிஸ் நசீர் அஹமட்டும் இருக்கின்றார்.

இருவரும் ஒரே கட்சிக்காரர்கள் என்றாலும், அரசியலில் பகையாளிகள். இதனால், அலிசாஹிர் மௌலானாவும் ஹாபிஸ் நசீரும் இணைந்து, அங்குள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களில் வேட்பாளர்களை நிறுத்த முடியாத நிலைவரம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக, உள்ளூராட்சி சபையொன்றுக்கான தேர்தலில், முஸ்லிம் காங்கிரஸின் வேட்பாளர்களை இரண்டு கட்சிகள் சார்பில் நிறுத்த வேண்டிய இக்கட்டான நிலைக்குள் மு.கா தலைவர் சிக்கியுள்ளார்.

உதாரணமாக, ஏறாவூர் நகரசபைக்கான தேர்தலில், ஹாபிஸ் நசீர் அஹமட், தனது அணியைச் சேர்ந்த முஸ்லிம் காங்கிரஸ்காரர்களை ஐக்கிய தேசியக் கட்சியின் யானைச் சின்னத்தில் வேட்பாளர்களாக நிறுத்தியுள்ளார்.

இந்த நிலையில், அதே சபைக்கான தேர்தலில் அலிசாஹிர் மௌலானா, தனது அணியைச் சேர்ந்த முஸ்லிம் காங்கிரஸ்காரர்களை முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பின் தராசு சின்னத்தில் வேட்பாளர்களாகக் களமிறக்கியுள்ளார்.

அதாவது, இரண்டு நபர்களுக்குள்ள பிரச்சினை காரணமாக, ஓர் உள்ளூராட்சி சபைக்கான தேர்தலில், தனது கட்சிக்காரர்களை இரு வேறு சின்னங்களில் களமிறக்க வேண்டிய நிலைவரம் முஸ்லிம் காங்கிரஸுக்கு ஏற்படுள்ளது. கலப்புத் தேர்தல் முறையில், மு.காவுக்கு இது நட்டமாகவே அமையும்.

அலிசாஹிர் மௌலானா தனது அணியினரை வேட்பாளர்களாகக் களமிறக்கியுள்ள முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பு எனும் கட்சியானது, முஸ்லிம் காங்கிரஸின் ‘மாற்றுக் குழந்தை’ என்று சொல்லப்படுகிறது.

இந்தக் கட்சியின் தலைவர், செயலாளராக முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகளின் உறவினர்களே உள்ளனர். ஹாபிஸ் நசீருடன் அரசியலில் ஒத்துப் போக முடியாது என்று கூறி, அலிசாஹிர் மௌலானா தனது அணியினரை வேட்பாளர்களாகக் களமிறக்கியுள்ள முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பு என்கிற கட்சியின் தலைவரே ஹாபிஸ் நசீருடைய சகோதரர் என்பது, இங்கு முரண்நகையான செய்தியாகும்.

இன்னொருபுறம், முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் தவிசாளரும், ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் தற்போதைய தவிசாளருமான பஷீர் சேகுதாவூத்தும் மட்டக்களப்பு மாவட்டத் தேர்தல் களத்தில் இறங்கியுள்ளார்.

ஹாபிஸ் நசீர், அலிசாஹிர் மௌலானா ஆகியோரைப் போலவே, பஷீர் சேகுதாவூத்தும் ஏறாவூரைச் சேர்ந்தவர். இவரும் தனது கட்சியின் வண்ணத்துப் பூச்சிச் சின்னத்தில், மட்டக்களப்பு மாவட்டத்தின் சில சபைகளுக்கான தேர்தல்களில் வேட்பாளர்களைக் களமிறக்கியுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பஷீர் சேகுதாவூத், தவிர்க்க முடியாத ஓர் அரசியல் ஆளுமையாவார். முஸ்லிம் காங்கிரஸில் அவர் இருந்தபோது, அந்தக் கட்சியின் மூளையாகச் செயற்பட்டவர். அவ்வாறான ஒருவர் தனது கட்சியில் வேட்பாளர்களைக் களமிறக்கி, மு.காவோடு நேரடியாகப் போட்டியிடத் தயாராக நிற்பது, முஸ்லிம் காங்கிரஸுக்கு அச்சுறுத்தலாகவே அமையும் எனக் கூறப்படுகிறது.

தேர்தலொன்று வரும் போது, கட்சியொன்றின் உள்முரண்பாடுகள் அநேகமாகத் தீர்த்து வைக்கப்படுவதுண்டு. ஒரே கட்சிக்குள்ளிருக்கும் முக்கியஸ்தர்களிடையே உள்ள மனக் கசப்புகள் முடிவுக்குக் கொண்வரப்படுவதை நாம் கண்டிருக்கின்றோம். தேர்தலை வெற்றி கொள்வதற்கு, ஒரு கட்சி எடுக்கும் முதல் முயற்சி அதுவாகவே இருக்கும்.

ஆனால், மட்டக்களப்பு மாவட்டத் தேர்தலில், முஸ்லிம் காங்கிரஸ் இரண்டாகப் பிளவுபட்டுக் களமிறங்கியுள்ளமையானது, அந்தக் கட்சியின் பலவீனத்தையே அம்பலப்படுத்தியுள்ளது. அலிசாஹிர் மௌலானாவுக்கும் ஹாபிஸ் நசீருக்கும் இடையிலான பிரச்சினையைத் தீர்த்து வைக்க முடியாத நிலையில் மு.கா தலைமைத்துவம் இருக்கின்றது என்கிற செய்தியும் இங்கு வெளிப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண முஸ்லிம் அரசியலில், முஸ்லிம் காங்கிரஸுக்குப் பிரதான பாத்திரமுள்ளது. ஆனால், அந்தக் கட்சியின் அகத்திலும் புறத்திலும் ஏற்பட்டுள்ள பிளவுகள் காரணமாக, எதிர்வரும் தேர்தலை மு.காங்கிரஸ் மகிழ்ச்சியுடன் எதிர்கொள்ள முடியாததொரு நிலைவரம் உருவாகியுள்ளதை மறைக்க முடியாது.

இந்த பலவீனங்களிலிருந்து எழுந்து நின்று, எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலைச் சந்திப்பதற்கு, மு.காவுக்கு ஓர் ஊன்றுகோல் அவசரத் தேவையாக உள்ளது. அதை எங்கிருந்து, எப்படிப் பெறுவதென்பதை அந்தக் கட்சியின் தலைவர்தான் கண்டறிய வேண்டும்.

ஊன்றுகோலைத் தேடியெடுப்பதென்பது, கனிந்து தொங்கும் ஒரு பழத்தை, மரத்திலிருந்து பறித்தெடுப்பது போல், அத்தனை எளிதான காரியமாக அது இருக்கப் போவதில்லை.

> **“இரண்டு நபர்களுக்குள்ள பிரச்சினை காரணமாக, ஓர் உள்ளூராட்சி சபைக்கான தேர்தலில், தனது கட்சிக்காரர்களை இரு வேறு சின்னங்களில் களமிறக்க வேண்டிய நிலைவரம் முஸ்லிம் காங்கிரஸுக்கு ஏற்பட்டுள்ளது**



தானும் தனது சகோதரர் யோஷித ராஜபக்ஷவும், கடந்த 2017ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியும் டிசெம்பர் 31ஆம் திகதியும், பொலிஸ் நிதிக் குற்றப்புலனாய்வுப் பிரிவுக்குச் சமூகமளித்ததாக, நாமல் ராஜபக்ஷ எம்.பி தெரிவித்துள்ளார்.

காலி – அக்குரஸ்ஸ வீதியின் ஹபராதுவ பகுதியில், நேற்று (01) இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில், இமதும பிரதேசத்தைச் சேர்ந்த 22 மற்றும் 23 வயதுடைய இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.



“

**நாட்டு மக்கள், பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கி உள்ளனர். இவ்வாறாக, நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடிக்கான பொறுப்பை, ஐக்கிய தேசியக் கட்சியே ஏற்கவேண்டும்.**



– அமைச்சர் –
தயாசிறி ஜயசேகர

### தேசிய அரசாங்கத்திலிருந்து விலகும் முடிவை

# தற்காலிகமாக கைவிட்டது சு.க

தேசிய அரசாங்கத்திலிருந்து (1) விலகுவது தொடர்பில், ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் அமைச்சர்கள் எடுத்திருந்த தீர்மானம், தற்காலிகமாகக் கைவிடப்பட்டு உள்ளதோடு, உள்ளூராட்சிமன்றத் தேர்தலின் பின்னரே, இது தொடர்பான தீர்மானத்துக்கு வரவுள்ளதாக, கட்சித் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, தேசிய அரசாங்கத்தை எதிர்வரும் 3 வருடங்களுக்கு தொடர்ந்து நடத்திச் செல்வது முக்கியமானது என, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் சிலர் தெரிவித்திருக்கும் நிலையில், அது தொடர்பான பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியானது, உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிடும் போது எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் அரசாங்கத்தின் எதிர்கால வேலைத்திட்டங்கள் தொடர்பிலும், கடந்த வாரங்களில் பல கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது, தேர்தலில் செல்வாக்கு செலுத்த, நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதிக்கு முடியும் எனவும் கலந்துரையாடப்பட்டதாக ஜனாதிபதிக்கு நெருக்கமான நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தேசிய அரசாங்கத்திலிருந்து விலகி, ஐக்கிய தேசியக் கட்சி, தனியான அரசாங்கத்தை அமைப்பது தொடர்பில், பின் வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர், பல சந்தர்ப்பங்களில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் தெளிவுபடுத்தியுள்ளனர்.

எனினும், உள்ளூராட்சிமன்றத் தேர்தல் நிறைவடையும் வரை, அரசாங்கம் கவிழ்க்கப்பட மாட்டாதென்றும் அரசாங்கத்தைக் கவிழ்ப்பது தொடர்பில் பேசக்கூடாது என்று பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் பிரதமர் தெரிவித்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

அவ்வாறு ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் அரசாங்கம் கவிழ்க்கப்பட்டால், ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கான வாய்ப்பு உள்ளதாகவும் அதற்கு, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் ஒத்துழைப்பை வழங்குவதாக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பின்வரிசை உறுப்பினர்களிடம் தெரிவித்ததாகவும் கூறப்படுகின்றது.

தேசிய அரசாங்கத்தின் ஒப்பந்தம் தொடர்பில், விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகரவிடம் வினவியபோது, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, தேசிய அரசாங்கத்திலிருந்து விலகுவது குறித்து இதுவரை தீர்மானிக்கவில்லையெனக் குறிப்பிட்டார்.

அதேபோல், சுதந்திரக் கட்சி, தேசிய அரசாங்கத்திலிருந்து விலகுவது தொடர்பில், மத்திய குழுவே தீர்மானிக்க வேண்டும் எனவும், இதுவரை அவ்வாறான முடிவுகள் எடுக்கப்படவில்லை என்றும், உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்குப் பிறகு, பெரும்பாலும் இது நடக்கலாம் எனவும், பிரதி அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கையில் 25,000 வெளிநாட்டு ஊழியர்கள்



இலங்கையில் தற்போது, 25,000 வரையான வெளிநாட்டு ஊழியர்கள் தங்கியுள்ளதாக, குடிவரவு-குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவர்களில் பெரும்பாலானவர்கள், சீனா மற்றும் இந்தியாவைச் சேர்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர் என, குடிவரவு-குடிகல்வு கட்டுப்பாட்டாளர் நிஹால் ரணசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்த நாடுகளின் நிதியுதவியில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களில் பணியாற்றவே, அவர்கள் இலங்கையில் தங்கியுள்ளனரெனவும் அவர் கூறியுள்ளார்.

இதற்கு மேலதிகமாக, முதலீட்டுச் சபையினால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களில் பணியாற்றவும் வெளிநாட்டு ஊழியர்கள் இலங்கைக்கு வந்துள்ளதாக, குடிவரவு-குடியகல்வுத் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன், அவர்களில் சிலர் இலங்கைப் பிரஜைகளைத் திருமணம் முடித்துள்ளதாகவும், அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

## டெங்கு குடம்பியின் அடர்த்தியில் வளர்ச்சி

புதிய ஆய்வறிக்கையின் படி, நாட்டின் சில பிரதேசங்களில், டெங்கு குடம்பிகளின் அடர்த்தி வளர்ச்சியடைந்துள்ளதாக, சுகாதார உயிரியல் அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதனை கட்டுப்படுத்துவதற்கு, உடனடியாக நடவடிக்கை எடுக்காவிடத்து, ஜனவரி மாதமளவில் டெங்குவை ஒழிக்க முடியாது என, சங்கத்தின் தலைவர் நஜித் சுமனசேன தெரிவித்தார்.

## முதலாம் தவணை இன்று ஆரம்பம்

அரச மற்றும் அரச அனுமதிபெற்ற பாடசாலைகளின் 2018 கல்வி ஆண்டுக்கான முதலாம் தவணைக் கல்வி நடவடிக்கைகள், இன்று செவ்வாய்க்கிழமை (02) ஆரம்பமாகவுள்ளன.

கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சை வினாத்தாள்கள் திருத்தும் பணிகள், நாடளாவிய ரீதியில் 58 பாடசாலைகளில் முன்னெடுக்கப்படவுள்ளதால், அந்தப் பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் மாத்திரம், எதிர்வரும் 15ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என்று, கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

## ‘ஐ.தே.கவின் தலையெழுத்து தீர்மானிக்கப்படும்’

ஐக்கிய தேசிய கட்சியின் தலையெழுத்து பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி தீர்மானிக்கப்படுமென, தேசிய சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

தலங்கம பிரதேசத்தில், நேற்று (01) இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரையாற்றிய அவர், “பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள் மூலம் அரசாங்கத்தில் எவ்வித மாற்றமும் நிகழாது எனத் தெரிவித்தாலும், தேசிய ரீதியில் இந்தத் தேர்தல் மிகவும் முக்கியமானது” எனக் குறிப்பிட்டார்.

## தங்க நகைகளுடன் சீனப் பிரஜை கைது

65 இலட்ச ரூபாய் பெறுமதியான தங்க நகைகளை, சட்டவிரோதமாக ஹொங்கொங் நோக்கிச் கொண்டுசெல்ல முயற்சித்த சீனப் பிரஜை ஒருவர், நேற்று (1) காலை, கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து, சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளதாக, சுங்கத் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் சுனில் ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

குறித்த சந்தேகநபரின் பயணப் பையிலிருந்து, ஒரு கிலோகிராம் நிறையுடைய தங்க நகைகள் மீட்கப்பட்டுள்ளன.

30 வயதான சந்தேகநபர், ஹொங்கொங் நோக்கிச் செல்லவிருந்த ஸ்ரீ லங்கன் விமான நிறுவனத்தின் யூ.எல். 892 என்ற விமானத்தில் பயணிக்கவிருந்த நிலையிலேயே கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை, சுங்கப் பரிசோதனை நடவடிக்கைப் பிரதிப் பணிப்பாளர் சீ.பேரின்பநாயகம் முன்னெடுத்து வருவதுடன், மொழிப் பிரச்சினை காரணமாக, மொழிபெயர்ப்பாளர் ஒருவரின் உதவியும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையிலிருந்து கடல் வழியாகவும் விமானங்கள் மூலம் தொடர்ந்தும் தங்கம் கடத்தப்பட்டு வருவதாக தெரிவித்துள்ள சுங்க அதிகாரிகள், இவ்வாறான செயற்பாடுகள முற்றாக இல்லாமல் செய்வதற்கு முயற்சித்து வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

### ரூ. 2.14 மில்லியன் பெறுமதியான

## வல்லபட்டை சிக்கியது



சட்டவிரோதமாக ஒரு தொகை வல்லபட்டையை, மஸ்கட் நோக்கி கொண்டுசெல்ல முயற்சித்த 31 வயதான இலங்கைப் பிரஜை ஒருவர், கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்று (1) காலை கைதுசெய்யப்பட்டதாக, சுங்க திணைக்கள ஊடகப் பேச்சாளர் சுனில் ஜயரத்ன தெரிவித்தார்.

கொழும்பைச் சேர்ந்த சந்தேகநபர், நேற்றுக் காலை 6.40 மணியளவில், கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து மஸ்கட் நோக்கிப் பயணமாகவிருந்த ஓமான் விமான நிறுவனத்துக்குச் சொந்தமான டபிள்யூ.வை.342 என்ற விமானத்தில் பயணமாகவிருந்த நிலையிலேயே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் இருந்து 24 கிலோ 700 கிலோகிராமும் நிறையுடைய வல்லபட்டை கைப்பற்றப்பட்டதுடன், இதன்பெறுமதி 2.14 மில்லியன் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளதாக, சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

### பிணைமுறி விவகாரம்:

## ‘விசாரணை அறிக்கையை பகிரங்கப்படுத்தவும்’

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்பட்டுள்ள மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி தொடர்பான அறிக்கையை பகிரங்கப்படுத்துமாறு, மக்கள் விடுதலை முன்னணி கோரியுள்ளது.

குறித்த அறிக்கையை பகிரங்கப் படுத்துவது மட்டுமன்றி, அதில் இனங்காணப்பட்டுள்ள குற்றவாளிகளுக்கு எதிராக, சட்ட மா அதிபர் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும், இந்த அறிக்கையை மறைப்பதற்கு இடமளிக்கக் கூடாது என்றும், மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லயில் அமைந்துள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில், நேற்று (1) இடம்பெற்ற ஊடகச் சந்திப்பிலேயே, அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அநுர குமார, பிணைமுறி விவகாரத்துக்கு எதிராக, சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு, மக்கள்



அணிதிரள வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

குறித்த அறிக்கை தொடர்பிலும் ஏனைய விசாரணை அறிக்கைகள் தொடர்பிலும், தகவலறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்வதற்கு, ஜனாதிபதி செயலகத்துக்குச் செல்லவுள்ளதாக, அநுரகுமார திசாநாயக்க எம்.பி, இதன்போது மேலும் குறிப்பிட்டார்.

### ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில்

## சீனக் கொடி பறக்கிறது

ஹம்பாந்தோட்டையில் அமைந்துள்ள மாகம்புர துறைமுகத்தில், நேற்றுக் காலை, சீனாவின் தேசியக் கொடி ஏற்றப்பட்டிருந்தது.

குறித்த துறைமுகமானது, கடந்த டிசெம்பர் மாதம் 9ஆம் திகதியன்று, சைனா மார்சன்ட் போட் ஹோல்டிங்ஸ் நிறுவனத்திடம் கையளிக்கப்பட்டது. அதன் பின்னர் முதற் தடவையாக, நேற்றைய தினம், சீனாவின் தேசியக் கொடி ஏற்றப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் அங்கு எமது நாட்டின் தேசியக்கொடி மற்றும் துறைமுக அதிகாரசபையின் கொடி என்பனவே ஏற்றப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், இலங்கையின்



தேசியக் கொடியானது, ஏனைய கொடிகளை விட ஒன்றரை அடி உயரத்திலேயே ஏற்றப்பட்டிருந்தது.

எனினும், கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு, இலங்கை தேசியக் கொடியின் உயரம் குறைக்கப்பட்டு, ஏனைய கொடிகளின் உயரத்துக்கு சமனாக ஏற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### புதுவருட விபத்துகளால்

## 512 பேர் வைத்தியசாலையில்

புதுவருடப் பிறப்பை அண்மித்து இடம்பெற்ற விபத்துகளில் காயமடைந்த 512 பேர், கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டதாக, வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்களில் 194 பேர் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருவதாக, அவசர சிகிச்சைப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் டொக்டர் சமிந்தி சமரக்கோன் தெரிவித்தார்.

வீதி விபத்துகளால் 117



பேரும் வீடுகளில் இடம்பெற்ற விபத்துகளால் 68 பேரும், பட்டாசு விபத்தினால் 12 பேரும், கீழே விழுந்து காயமடைந்த நிலையில் 161 பேரும், வன்முறைகளால் 42 பேருமே, இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக, அவர் மேலும் தெரிவித்தார்.

### பொலித்தீன், பிளாஸ்டிக்

## எரிப்பதற்கும் தடை

பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களை எரிப்பதற்கு, மத்திய சுற்றாடல் அதிகாரசபை, தடை விதித்துள்ளது.

பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களை எரித்தல் மற்றும் வாகனங்களில் இருந்து வெளியேறும் புகை போன்றவற்றால், வளி மாசடைவு ஏற்படுவதோடு அவற்றால் புற்றுநோய், பக்கவாதம், நீல நிறம் கொண்ட சிசு பிறப்பு உள்ளிட்ட பல சுவாச நோய்கள் உண்டாகுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளதால், மேற்படி சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக, அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க, வீட்டுத் தோட்டத்தில் கூட இத்தகைய பொருட்களை எரிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளதோடு, அவ்வாறு எரிக்கப்பட்டமை தொடர்பில் கண்டறிந்தால், தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரகாரம் சிறைத்தண்டனை அல்லது 10 இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்படுமென, மத்திய சுற்றாடல் அதிகார சபை அறிவித்துள்ளது.

இதேவேளை, லன்ஞ்சீட் மற்றும் பொலித்தீன் என்பனவற்றுக்கு விதிக்கப்பட்டுள்ள தடை, நேற்று (01) முதல் அமுலுக்கு வரும் நிலையில், லன்ஞ்சீட், பொலித்தீன் மற்றும் அது சார்ந்த தயாரிப்புகளைப்



பயன்படுத்துவது தொடர்பான சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக, மத்திய சுற்றாடல் அதிகார சபை தெரிவித்துள்ளது.

லன்ஞ்சீட், பொலித்தீன் மீது கடந்த செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி தடை விதிக்கப்பட்டது. எனினும், நேற்று முன்தினம் (31) வரை, அதற்கு சலுகை காலம் வழங்கப்பட்டிருந்தது.

சலுகைக் காலம் நிறைவடைந்து, தடைக்கான காலம் பிறந்துள்ள நிலையில், சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றனவென்று, அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் லால் மர்வின் தர்மசிறி தெரிவித்தார்.

இந்தச் சுற்றிவளைப்புகள், பல கட்டங்களாக முன்னெடுக்கப்படும் எனத் தெரிவித்த அவர், முதற்கட்டமாக பொலித்தீன் உற்பத்தியாளர்களும், இரண்டாம் கட்டமாக பொலித்தீன் விநியோகஸ்தர்களும், மூன்றாம் கட்டமாக விற்பனையாளர்கள் மற்றும் உணவகங்களும் சுற்றிவளைக்கப்பட்டு சோதனையிடப்படுமெனக் குறிப்பிட்டார்.

தடைசெய்ய லன்ஞ்சீட் மற்றும் பொலித்தீன்களுக்குப் பதிலீடாக, மாற்றுப் பொருட்கள் சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளனவென, அவர் மேலும் குறிப்பிட்டார்.

### தபால்மூல வாக்களிப்புக்கு

## 5 இலட்சம் பேர் தகுதி

இம்முறை உள்ளூராட்சிமன்றத் தேர்தலின் போது, தபால் மூலம் தமது வாக்குகளைப் பயன்படுத்துவதற்கு, சுமார் 5 இலட்சம் பேர் தகுதி பெற்றுள்ளனர் என்று, தேர்தல்கள் மேலதிக ஆணையாளர் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

தபால் மூல வாக்களிப்புக்காக விண்ணப்பிப்பதற்கு, அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருந்த கால அவகாசம், கடந்த டிசெம்பர் மாதம் 22ஆம் திகதியுடன் நிறைவுற்றது.

இந்நிலையில், விண்ணப்பங்களைப் பரிசோதிக்கும் நடவடிக்கைகள், தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாக, மேலதிக ஆணையாளர் குறிப்பிட்டார்.

இதேவேளை, எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு அட்டைகள், இம்மாதம் 11ஆம் திகதி கையளிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில், மேலதிக ஆணையாளர் மேலும் கூறியதாவது, “உள்ளூராட்சிமன்றத்



தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு, இந்த மாதம் 25ஆம் 26ஆம் திகதிகளில் இடம்பெறவிருப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

“இந்நிலையில், உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை விநியோகிக்கும் நடவடிக்கை, எதிர்வரும் 18ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. வாக்குகள் எண்ணும் பணி, வாக்களிப்பு நிலையங்களில் இடம்பெறுவதால், இது தொடர்பில் அதிகாரிகளுக்கு பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளன.

“தேர்தல் முறைப்பாடுகளை ஏற்றுக் கொள்வதற்காக, தேர்தல்கள் செயகல அலுவகத்திலும் மாவட்டத் தேர்தல் அலுவலகங்களிலும், பிரிவொன்று அமைக்கப்பட்டுள்ளது” என, அவர் மேலும் கூறினார்.




திரிபுரா மாநிலத்தில் நடைபெறவுள்ள சட்டப் பேரவைத் தேர்தலில், இடதுசாரி முன்னணி மீண்டும் வெற்றிபெறும் என்று, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

2016-2017ஆம் ஆண்டுகாலப்பகுதியில், ரயிலில் பயணச்சீட்டு இல்லாமல் பயணித்தோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதென, நாடாளுமன்றக் குழுவொன்று கவலை வெளியிட்டுள்ளது.





ஆர்.கே நகரில் வென்ற ஒருவர், 3 மாதத்தில் ஆட்சி கவிழும் என்கிறார். அந்த 3 மாதம் வரை அவர் இருப்பாரா என்று தான் தெரியவில்லை. ஆர்.கே நகரில் மீண்டும் இடைத்தேர்தல் தான் வரப்போகிறது.



-சீனிவாசன் (தமிழக வனத்துறை அமைச்சர்)

## சென்னையில் 170 விபத்துகள்

புத்தாண்டுக் கொண்டாட்டத்தின் போது, சென்னையில் மாத்திரம், 170 விபத்துகள் இடம்பெற்றுள்ளன. இதனால், 200க்கும் மேற்பட்டவர்கள் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

புத்தாண்டுக் கொண்டாட்டத்துக்காக, கடற்கரைப் பகுதிகளுக்கு வருகை தந்து, வாணவேடிக்கைகள் முடிந்த பின்னர் அதிகரித்த வாகன நெரிசலின் போதே, இந்த விபத்துகள் இடம்பெற்றுள்ளன. மதுபோதையில் அதிவேகமாக வாகனங்களைச் செலுத்தியமையாலேயே, அதிகளவான விபத்துகள் இடம்பெற்றுள்ளன எனவும், உயிரிழப்புகள் ஏற்படாதவண்ணம் சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

## 'ரஜினியை எதிர்ப்பேன்'

நடிகர் ரஜினிகாந்த் போட்டியிடும் தொகுதியில், அவரை எதிர்த்துத் தானும் போட்டியிடப்போவதாக, திரைப்பட இயக்குநர் கௌதமன் சவால் விடுத்துள்ளார்.

"ரஜினிகாந்த், ஒரு துக்க செய்தியை தமிழ் இனத்துக்கு, புத்தாண்டுப் பரிசாகக் கொடுத்திருக்கிறார். தமிழர்களின் உயிர், உரிமைகள் பறிக்கப்படும் போது, என்றாவது களத்தில் நின்று, அவர் போராடியிருக்கிறாரா?

"மகராஷ்டிராவின் பால் தாக்கரேவை, தன்னுடைய தந்தையாகவும் கடவுளாகவும் பார்க்கிறேன் என்று, ரஜினிகாந்த் ஒரு முறை கூறியுள்ளார். பால்தாக்கரே என்பவர், அந்த மாநிலத்திலிருந்து இஸ்லாமியர்களையும் கிறிஸ்தவர்களையும் ஓட ஓட அடித்து விரட்டியவர். மகாராஷ்டிர மக்களைத் தவிர வேறு யாரும் இந்த மண்ணில் இருக்கக் கூடாது என்று, பகிரங்கமாகப் பிரகடனப்படுத்தி, தமிழர்களையும் அடித்துத் துரத்தினார்.

"இந்நிலையில் ஆன்மீக அரசியலை அவர் பிரகடனப்படுத்தியுள்ளார். பா.ஜ.கவின் பின்புலத்திலேயே, அவர் செயற்படுகின்றார். அவர் எந்தத் தொகுதியில் போட்டியிட்டாலும், அந்தத் தொகுதியில் நான் அவரை எதிர்த்துப் போட்டியிடுவேன்" என்று அவர் கூறியுள்ளார்.

## முடக்கப்பட்ட முரசொலி வழமைக்கு வந்தது

தி.மு.கவின் முரசொலி நாளிதழின் இணையத்தளம், முடக்கப்பட்டு, மீண்டும் செயற்பாட்டுக்கு வந்துள்ளது.

சுமார் 75 ஆண்டுகளாக இயங்கிவரும் தி.மு.கவின் உத்தியோகபூர்வ நாளிதழான முரசொலி நாளிதழின் இணையத்தளம் முடக்கப்பட்டு, அதன் பேஸ்புக் பக்கத்தில், ஹக் செய்தவர்கள், புத்தாண்டு வாழ்த்துகளைப் பதிவிட்டிருந்தனர். எனினும், முரசொலி நிர்வாகத்தின் தொழில்நுட்பப் பிரிவினர், இணையத்தளத்தைச் சரி செய்ய நடவடிக்கை எடுத்த பின்னர், இணையத்தளம் வழமைக்குத் திரும்பியது.

## மாநில முதலமைச்சர்களுக்கு அறிவுறுத்தல்

பாதுகாப்புக் காரணம் கருதி, மாநில முதலமைச்சர்கள், பிற மாநிலங்களுக்குத் திடீர் பயணம் மேற்கொள்ள வேண்டாம் என்று, மத்திய உள்துறை அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

"அனைத்து மாநில முதலமைச்சர்களுக்கும் இசட் அல்லது இசட் பிளஸ் பிரிவு பாதுகாப்பு வழங்கப்பட்டு வருகின்றது. எனினும், மாநிலத் தலைவர் ஒருவர், மற்றொரு மாநிலத்துக்குச் செல்லும் போது, அவருக்கு உரிய பாதுகாப்பு வசதிகளை, மற்றைய மாநிலமே செய்துகொடுக்கவேண்டும். எனினும், அறிவிக்காமல் விஜயங்கள் மேற்கொள்ளப்படும்போது, பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியாமல் போகின்றது" என்று அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டெல்லி

### பாகிஸ்தான் பேரணியில் கலந்துகொண்டதால்

# பலஸ்தீனத் தூதுவர் நாட்டுக்கு மீளஅழைப்பு

2008ஆம் ஆண்டு, மும்பையில் மேற்கொள்ளப்பட்ட தாங்குதலின் முக்கிய சூத்திரதாரி எனக் குற்றஞ்சாட்டப்படும் நபர் பங்கேற்ற பேரணியில் பங்குபற்றிய, பாகிஸ்தானுக்கான பலஸ்தீனத் தூதுவரை, அந்நாடு, பலஸ்தீனத்துக்கு அந்நாடு திரும்ப அழைத்துள்ளது.

இஸ்ரேலின் தலைநகராக, ஜெருசலேமை அங்கிகரிப்பதற்கு, ஐக்கிய அமெரிக்காவால் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட பேரணியில் கலந்துகொண்டமைக்காக, பாகிஸ்தானுக்கான பலஸ்தீனத் தூதுவர் வலிட் அபு அலி, பணி நீக்கம் செய்யப்பட்டார்.

இந்தியாவின், மிகவும் பயங்கரமான தாக்குதலாகக் கருதப்படும் 2008ஆம் ஆண்டு மும்பைத் தாக்குதலின் முக்கிய சூத்திரதாரி பங்கேற்ற பேரணியில், பலஸ்தீனத் தூதுவர் பங்கேற்றமைக்கு, இந்தியா தனது கடும் எதிர்ப்பைத் தெரிவித்திருந்தது.

பலஸ்தீன விவகாரங்களில்,



இந்தியா ஆதரவு தெரிவித்து வந்த நிலையில், தற்போது, இந்தியாவுக்கு எதிராக, பலஸ்தீனத் தூதுவர் நடந்துகொண்டமைக்கு, இந்தியா கண்டனம் தெரிவித்ததையடுத்தே, அவர் பணி நீக்கம் செய்யப்பட்டார்.

பாகிஸ்தானின் பாதுகாப்புத் துறையால் இந்தப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதனை, 2008ஆம் ஆண்டு மும்பை தாக்குதலின் முக்கிய சூத்திரதாரியான, ஜமாத்-உத்-தாவாவின் தலைவர் ஹாஃபிஸ் சயீத் உள்ளிட்ட இஸ்லாமிய குழுக்கள் பங்கேற்றிருந்தன.

பலஸ்தீன வெளிவிவகார அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், இது, திட்டமிடப்படாத தவறு என்றும் ஆனால், நியாயப்படுத்தப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளது. இதனால், பலஸ்தீனத் தூதுவரை, நாட்டுக்கு மீண்டும் அழைத்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

டெல்லி

### பாகிஸ்தான் சிறைச்சாலைகளில்

# '457 இந்தியர்கள் அடைக்கப்பட்டுள்ளனர்'

### 146 மீனவர்களுக்கு 8ஆம் திகதி விடுதலை

இந்திய மீனவர்கள் 399 பேர் உட்பட மொத்தமாக 457 இந்தியர்கள், பாகிஸ்தான் சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டுள்ளனர் என, பாகிஸ்தான் அரசாங்கத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்லாமாபாத்திலுள்ள இந்திய உயர்ஸ்தானியராலயத்தில், பாகிஸ்தான் அரசாங்கத்தால் ஒப்படைக்கப்பட்டுள்ள அறிக்கையிலேயே, மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**அத்தோடு, இந்தியச் சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் பிரஜைகளின் எண்ணிக்கை தொடர்பாக, டெல்லியில் அமைந்துள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானியராலயத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்படும்**

பாகிஸ்தான், இந்தியா ஆகிய நாடுகளின் சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டுள்ளவர்கள் கணக்கெடுக்கப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்படவேண்டும் என்ற ஒப்பந்தம், 2008ஆம் ஆண்டு மே மாதம் 21ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டதிலிருந்து, ஒவ்வொரு வருட இறுதியிலும், இந்த அறிக்கைகள்



சமர்ப்பிக்கப்பட்டு வருகின்றன.

"457 இந்தியப் பிரஜைகள், பாகிஸ்தான் சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டுள்ளமை தொடர்பான அறிக்கை, சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதில், 399 மீனவர்களும் 58 பொதுமக்களும் உள்ளடங்குகின்றனர்" என்று, இது தொடர்பான அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் 8ஆம் திகதி, பாகிஸ்தான் சிறைச்சாலையிலுள்ள 146 மீனவர்களை விடுதலை செய்யவுள்ளதாக, பாகிஸ்தான் அரசாங்கம் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. அத்தோடு, இந்தியச் சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் பிரஜைகளின் எண்ணிக்கை தொடர்பாக, டெல்லியில் அமைந்துள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானியராலயத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்று, இந்திய வெளியுறவுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

மேகாலயா

### சட்டமன்றத் தேர்தல்:

# காங்கிரஸ் சிரேஷ்ட தலைவர் பல்டி

மேகாலயாவின் சட்டமன்றத் தேர்தல் அண்மையில் இடம்பெறவுள்ள நிலையில், மாநில காங்கிரஸ் கட்சியின் சிரேஷ்ட தலைவரும் அமைச்சரவை அமைச்சருமான ஏ.எல். ஹெக், பா.ஜ.கவில் இணைந்துகொள்ளவுள்ளாரென, பா.ஜ.க அதிகாரிகள் கூறியுள்ளனர்.

மேகாலயாவில், பா.ஜ.கவின் நிலையை உறுதிப்படுத்திக்கொள்ளும் பொருட்டே, இந்தக் கட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளதென, தற்போது அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

இந்நிலையில், பா.ஜ.கவில் இணைந்துகொள்ளவுள்ள அமைச்சர் ஹெக் மற்றும் மேலும் மூன்று எம்.எல்.ஏக்கள் தொடர்பான அறிவிப்பு, இன்று (02) நடைபெறவுள்ள கூட்டத்தின் போது அறிவிக்கப்படும் என்று, மேகாலயாவின் பா.ஜ.க தலைவர் ஷிபன் லுங்க்டோ கூறியுள்ளார்.

பா.ஜ.கவில்




**கடந்த வாரம், மேகாலயாவில், காங்கிரஸின் ஐந்து எம்.எல்.ஏக்கள் உள்ளிட்ட எட்டுப் பேர், தங்களது பதவிகளை இராஜினாமா செய்திருந்தனர்**

இணைந்துகொண்டுள்ள அமைச்சர்களுக்கு, பதவிகள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வாரம், மேகாலயாவில், காங்கிரஸின் ஐந்து எம்.எல். ஏக்கள் உள்ளிட்ட எட்டுப் பேர், தங்களது பதவிகளை இராஜினாமா செய்திருந்தனர். அவர்கள், எதிர்வரும் 4ஆம் திகதி, தேசிய மக்கள் கட்சியில் இணைந்துகொள்ளவுள்ளனர்.

கர்நாடகா

### காங்கிரஸ் எம்.எல்.ஏக்களின்

# ஊழல்களை ஆராய்கிறது பா.ஜ.க

கர்நாடகாவில், விரைவில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், அங்கு தற்போது ஆட்சியிலுள்ள காங்கிரஸ் எம்.எல்.ஏக்களின் ஊழல்களையும் நிறைவேற்றாத வாக்குறுதிகளையும் குறித்த தகவல்களைத் திரட்ட, பா.ஜ.க மேலிடம் உத்தரவிட்டுள்ளது. இந்தத் தகவல்களை வைத்துக்கொண்டு, காங்கிரஸுக்கு எதிரான பிரசாரத்தை மேற்கொள்ளவுள்ளவும் அக்கட்சி திட்டமிட்டுள்ளதெனத் தெரிவிக்கப்படுகின்றது.

கர்நாடக சட்டப்பேரவையின் பதவிக்காலம், எதிர்வரும் மே மாதத்துடன் முடிவடையவுள்ளது. காங்கிரஸ் தற்போது ஆட்சியிலுள்ள பெரிய மாநிலம் கர்நாடகா மட்டுமே. எனவே, கார்நாடகாவில், காங்கிரஸை வீழ்த்துவதற்கு, பா.ஜ.க, காய்களை நகர்த்தி வருகிறது. இத்தேர்தலில், பா.ஜ.க சார்பில் முதலமைச்சர் வேட்பாளராக, எடியூரப்பா ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளார்.

இதைத் தொடர்ந்து, பா.ஜ.க, விரிவான பிரசாரத் திட்டத்தைத் தீட்டி வருகிறது. இதுதொடர்பாக,



பா.ஜ.க தலைவர் அமித் ஷா, பெங்களூருவில், கர்நாடகா மாநில பா.ஜ.க நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தியுள்ளார்.

இந்நிலையில், கர்நாடகா மாநிலத்தில், காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற ஊழல்கள் தொடர்பில், தகவல்கள் திரட்டப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விவரங்கள் அனைத்தையும் ஜனவரி 15ஆம் திகதிக்குள் சமர்ப்பிக்கவும் பா.ஜ.க தலைவர்கள் பணித்துள்ளனர்.

பெப்ரவரி 15ஆம் திகதி முதல் 22ஆம் திகதி வரை, பா.ஜ.க இளைஞர் அணியின் சார்பில், பிரமாண்ட பிரசார இயக்கம் நடைபெறுகிறது. அப்போது, இந்த ஊழல் புகார்கள் குறித்து மக்களிடம் பிரசாரம் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், பிரதமர் மோடி உட்பட கட்சியின் மூத்த தலைவர்களின் பிரசாரத் திட்டமும் வகுக்கப்பட்டுள்ளது.

ஜம்மு - காஷ்மீர்

### ஆயுததாரிகள் - இராணுவ வீரர்களுக்கு இடையே மோதல்:

# எண்மர் மரணம்; மூவருக்குக் காயம்

ஜம்மு - காஷ்மீரில் அமைந்துள்ள இராணுவ முகாம் மீது, நேற்று முன்தினம் (31) மாலை, ஆயுததாரிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் காரணமாக, எட்டுப் பேர் உயிரிழந்துள்ளனரென, பொலிஸாரும் பாதுகாப்புப் படையினரும் தெரிவித்தனர்.

ஸ்ரீநகர் பகுதியில் அமைந்துள்ள மத்திய ரிசர்வ் பொலிஸ் பாதுகாப்புப் படையின் முகாம் மீதே, இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன்போது, சுமார் நூற்றுக்கணக்கான வீரர்கள் குறித்த பகுதியைச் சுற்றிவளைத்தபோது, இரு தரப்புகளுக்கும் இடையே பரஸ்பர துப்பாக்கிச் சூடுகள் இடம்பெற்றன.

"இந்தத் தாக்குதலின் போது, மத்திய ரிசர்வ் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த நான்கு வீரர்கள் உயிரிழந்தனர். ஆயுததாரிகள் மூவரை, நாம் சுட்டுக்கொன்றோம். மற்றொருவரின்



சடலம் இன்னும் மீட்கப்படவில்லை" என்று, பொலிஸ் அதிகாரிகள் கூறினர்.

அத்தோடு, மூன்று வீரர்கள் காயமடைந்துள்ளனரெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தாக்குதலின் போது, முகாமுக்குள் எத்தனைபேர் இருந்தனர் என்பது தொடர்பில் தெரியாது என்றும், பாகிஸ்தானின் ஜய்ஷ்-இ-மொஹமட் ஆயுததாரிகள் குழுவின் காஷ்மீர் பிராந்தியத் தலைவரை, இந்திய இராணுவத்தினர் சுட்டுக்கொன்றதன் பின்னரே, இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்பதால், அக்குழுவே இத்தாக்குதலை மேற்கொண்டிருக்கலாம் எனவும் அதிகாரிகள் மேலும் கூறினர்.

2017ஆம் ஆண்டில் மாத்திரம், சந்தேகத்துக்கிடமான 206 ஆயுததாரிகளும் 57 பொதுமக்களும் இந்திய இராணுவப் படையைச் சேர்ந்த 78 வீரர்களும், இதுபோன்ற தாக்குதல் சம்பவங்களால் பலியாகியுள்ளனரெனக் கணக்கிடப்பட்டுள்ளது.

## 'தோல்வியின் அறிகுறியே காஷ்மீர் தாக்குதல்'

ஜம்மு- காஷ்மீர் மாநிலம், புல்வாமா பகுதியிலுள்ள மத்திய ரிசர்வ் பொலிஸ் படை மீது, ஆயுததாரிகள் நடத்திய தாக்குதலைக் கண்டித்துள்ள காங்கிரஸ், பிரதமர் நரேந்திர மோடியின் வெளியுறவுக் கொள்கைக்கு ஏற்பட்ட தோல்வியின் அறிகுறியே இது என்று விமர்சித்துள்ளது.

"ஜம்மு - காஷ்மிரில், திரும்பத் திரும்ப நிகழ்த்தப்படும் பயங்கரவாதத் தாக்குதல் சம்பவங்கள், இந்தியாவைக் கண்டு தேசவிரோத சக்திகளுக்குப் பயமில்லை என்பதைத் தெளிவுபடுத்துகின்றன. இந்தியா, சக்திவாய்ந்த நாடாக உருவாகியுள்ளதென, மோடி தெரிவிக்கிறார். ஆனால், எல்லையில் அத்துமீறி நடத்தப்படும் தாக்குதலில் பலியானோரின் எண்ணிக்கை, தொடர்ந்தும் அதிகரித்தபடி இருக்கிறது" என்று அக்கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

மேற்கு வங்கம்



### முத்தலாக்குக்கு எதிரான வழக்கு:

# பா.ஜ.கவில் இணைந்தார் 'முத்தலாக் பெண்'

முத்தலாக்குக்கு எதிராக, உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து வெற்றிபெற்ற பெண்களில், முக்கியமானவராகக் கருதப்படும் இஷ்ரத் ஜஷான், தன்னை பா.ஜ.கவில் இணைத்துக் கொண்டுள்ளார்.

முத்தலாக்குக்கு எதிராக வழக்குத் தொடர்ந்த ஐவரில் ஒருவரான இஷ்ரத் ஜஹான் ஹவுராவின் கணவர், 2014ஆம் ஆண்டு, டுபாயிலிருந்து, அலைபேசி வாயிலாக, மூன்று முறை தலாக் கூறி, அவரை விவாகரத்துச் செய்திருந்தார்.

இதன் பின்னரே, தலாக் முறைமைக்கு எதிராக, கொல்கத்தாவைச் சேர்ந்த இஷ்ரத் ஜஹான் ஹவுரா உள்ளிட்ட பெண்கள் சிலர் வழக்குத் தாக்கல் செய்தனர்.

இந்நிலையிலேயே இஷ்ரத் ஜஹான், பா.ஜ.க.வில் இணைந்துள்ளார்.

இது குறித்து, மாநில பா.ஜ.க பொதுச் செயலாளர் சயந்தன் பாசு கூறுகையில், "இஷ்ரத் ஜஹான் ஹவுரா, நகரிலுள்ள பா.ஜ.க. அலுவலகத்தில், இணைந்துள்ளார்" எனத் தெரிவித்துள்ளார்.

கொல்கத்தாவில் வசித்துவரும் அவருக்கு, தொடர்ந்து மிரட்டல் வந்ததாகவும், இதன் காரணமாகவே பாதுகாப்புக் கருதி பா.ஜ.கவில் இணைந்துள்ளாரெனவும் கூறப்படுகிறது. மதக் கட்டுப்பாடுகளுக்கும் மதச் சட்டங்களுக்கு எதிராகவும் தீர்ப்புப் பெறக் காரணமாக இருந்தார் என்று, இஷ்ரத்தை சிலர் மிரட்டி வருவதாகவும் கூறப்படுகிறது.



ஐக்கிய அமெரிக்காவில் 2016இல் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான றொபேர்ட் மல்லரின் விசாரணை, தடங்கல்களின்றித் தொடர வேண்டுமென, குடியரசுக் கட்சியின் செனட்டரும் ஜனாதிபதிக்கு நெருக்கமானவருமான லின்ட்ஸி கிரஹாம் தெரிவித்துள்ளார்.

பிரித்தானியாவின் லிவர்பூல் நகரில், 1,600 கார்கள் நிறுத்தப்படக்கூடிய கார் தரிப்பிடம் ஒன்றில் ஏற்பட்ட தீ காரணமாக, அங்கு நிறுத்தப்பட்டிருந்த அனைத்துக் கார்களும் எரிந்து சாம்பராகின. எவருக்கும் காயம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.



“

**போர்கள், பொய்கள், அநீதிகள் ஆகியவற்றால், 2017ஆம் ஆண்டு நிரம்பியிருந்தது. மனித இனம், இவ்வாண்டை வீணாக்கியிருந்ததோடு, அதில் காயமும் பட்டிருந்தது. நாம் அனைவரும், எமது நடவடிக்கைகளுக்கான பொறுப்பை ஏற்க வேண்டும்.**



– பாப்பரசர் பிரான்ஸிஸ்

## விமான விபத்தில் 12 பேர் பலி

கொஸ்டா றிக்காவில், சுற்றுலாப் பயணிகள் அதிகமாகச் செல்லும் கடற்கரைப் பகுதியிலிருந்து புறப்பட்டுச் சென்ற விமானமொன்று விபத்துக்குள்ளானதில், 12 பேர் கொல்லப்பட்டனர் என, அந்நாட்டு அரசாங்கம் தெரிவித்தது. உயிரிழந்தவர்களில் 10 பேர், ஐக்கிய அமெரிக்கப் பிரஜைகள் எனவும், ஏனைய இருவரும், கொஸ்டா றிக்காவைச் சேர்ந்த விமானிகள் எனவும், அரசாங்கத் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

விமானம் புறப்பட்ட சில நிமிடங்களிலேயே இவ்விபத்து ஏற்பட்டதென உறுதிப்படுத்திய அதிகாரிகள், என்ன காரணத்துக்காக விபத்து ஏற்பட்டது எனத் தெரியவில்லை என்று குறிப்பிட்டனர்.

கடுமையான காற்றுக் காரணமாக, விமானத்தின் பயண அட்டவணை, ஆரம்பத்தில் மாற்றப்பட்டாலும், பின்னர் நிலைமை சரியான பின்னர், வேறொரு இடத்திலிருந்து வந்து, பயணிகளை வெற்றிகரமாக ஏற்றியிருந்தனர் என்று கூறப்படுகிறது.

## கடல் விமான விபத்தில் அறுவர் பலி

புத்தாண்டுக்கு முன்னரான இரவில், கடல் விமானமொன்று ஆற்றுக்குள் சென்று விபத்துக்குள்ளானதில், 6 பேர் பலியாகினர். அவுஸ்திரேலியாவின் சிட்னியிலேயே, இவ்விபத்து ஏற்பட்டது.

இதில் பலியாகியவர்களில் ஒருவர், ஐக்கிய இராச்சியத்தைச் சேர்ந்த கொம்பாஸ் குழுமம் எனப்படும் பிரபல நிறுவனத்தில், பிரதம நிறைவேற்று அதிகாரியான றிச்சர்ட் கசின்ஸ் என்று அறிவிக்கப்படுகிறது. ஏனையவர்களில் நால்வர், ஐக்கிய இராச்சியத்தைச் சேர்ந்தவர்களாவர். விமானத்தின் விமானி, அவுஸ்திரேலியாவைச் சேர்ந்தவர்.

என்ன காரணத்துக்காக விபத்து ஏற்பட்டது என, இதுவரை வெளிப்படுத்தப்படவில்லை எனத் தெரிவிக்கும் பொலிஸார், விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளனர்.

## தாக்குதல் திட்டத்தை ஒப்புக் கொண்டார் சந்தேகநபர்

ரஷ்யாவின் சென். பீற்றர்ஸ்பேர்க் நகரில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை மேற்கொண்டார் என்ற சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்ட நபர், அத்தாக்குதலைத் திட்டமிட்டு, அவ்விடத்தில் குண்டை வைத்தவர் தானே என ஏற்றுக் கொண்டுள்ளார் என, ரஷ்ய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

சந்தைப் பகுதியில், கடந்த சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலில், 18 பேர் காயமடைந்திருந்தனர்.

இந்நிலையில், மனநோய்ச் சிகிச்சை நிலையமொன்றில் தான் பதிவுசெய்யப்பட்டிருந்த போது, அங்கிருந்தவர்களால் வெறுக்கப்பட்டதாகவும், அதன் காரணமாகவே இம்முடிவை எடுத்ததாகவும், சந்தேகநபர் தெரிவித்துள்ளார்.

## நீதித்துறை தொடர்பில் மீளாய்வு

பாலியல் குற்றங்களை, ஐக்கிய அமெரிக்காவின் மத்திய நீதித்துறை எவ்வாறு கையாள்கிறது என்பதற்கான மீளாய்வு ஒன்றை ஆரம்பிக்கவுள்ளதாக, அந்நாட்டின் பிரதம நீதியரசர் ஜோன் றொபேர்ட் தெரிவித்துள்ளார். அந்நாட்டின் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியொருவர் மீது, பாலியல் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு, அவர் பதவி விலகிய பின்னணியிலேயே, பிரதம நீதியரசரின் இவ்வறிவிப்பு வெளியாகியுள்ளது.

ஐ.அமெரிக்காவில், பாலியல் குற்றங்கள் தொடர்பான விழிப்புணர்வு, கடந்தாண்டு அதிகமாக ஏற்பட்டிருந்த நிலையில், பாலியல் குற்றங்கள் தொடர்பான சம்பவங்களுக்கு, நாட்டின் நீதித்துறையும் விதிவிலக்கானது அல்ல என, அவர் குறிப்பிட்டார்.

வடகொரியா

புத்தாண்டுச் செய்தியில் கிம் அதிரடி:

# ‘எனது மேசையில் அணுக்குண்டுக்கான பொத்தான்’

அணுக்குண்டைச் செலுத்துவதற்கான பொத்தானொன்று, தனது மேசையில் எப்போதும் காணப்படுகிறது எனத் தெரிவித்துள்ள வடகொரியத் தலைவர் கிம் ஜொங்-உன், முழு உலகத்துக்குமான எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

கடந்தாண்டு முழுவதும், வடகொரியாவின் அணுக்குண்டுச் சோதனைகளும் ஏவுகணைச் சோதனைகளும், முழு உலகிலும் போரை ஏற்படுத்துமா என்ற அச்சத்தை ஏற்படுத்தியிருந்த நிலையில், நேற்று (01) ஒளிபரப்பான வடகொரியத் தலைவரின் புத்தாண்டுக்கான உரை, அவ்வச்சத்தைக் குறைப்பதற்கு எந்த விதத்திலும் உதவியிருக்கவில்லை.

ஏற்கெனவே சர்வதேச ரீதியான பதற்றத்தை அதிகரித்திருக்கும் ஆயுதத் திட்டங்களை மேலும் துரிதப்படுத்தும் விதமாக, அணுவாயுத முனைகளைப் பாரியளவில் உற்பத்தி செய்யுமாறு உத்தரவிடுவதாகவும், கிம் ஜொங்-உன் தெரிவித்தார். அத்தோடு, அணுவாயுத நாடாக வருவதற்கான தமது நாட்டின் இலக்கை, கடந்தாண்டிலேயே அடைந்துவிட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய அமெரிக்காவின் ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் தெரிவான பின்னர், வடகொரியாவுக்கும் ஐ.அமெரிக்காவுக்கும் இடையிலான பதற்ற நிலைமை, மேலும் அதிகமாக அதிகரித்துள்ள நிலையில், வடகொரியத் தலைவரின் இவ்வுரையிலும், ஐ.அமெரிக்காவுக்கான எச்சரிக்கைகள் வழங்கப்பட்டிருந்தன.

“ஐ.அமெரிக்காவிடமிருந்து, என்னவிதமான அணுவாயுத அச்சுறுத்தல்களையும், வடகொரியா எதிர்கொள்ளும். அத்தோடு, நெருப்புடன் விளையாடும் ஐ.அமெரிக்காவின் நடவடிக்கையை இல்லாது செய்வதற்குப் போதுமான அணுவாயுதப் பலம், எம்மிடம் உண்டு.

“அணுக்குண்டுப் பொத்தான், என்னுடைய மேசையில் எப்போதும் இருக்கிறது. இது, அச்சுறுத்தும் ஒன்று அல்லவெனவும், யதார்த்தமே என்பதையும், ஐ.அமெரிக்கா புரிந்துகொள்ள வேண்டும்” என, கிம் ஜொங்-உன் குறிப்பிட்டார்.



வடகொரியத் தலைவரின் உரையில், அணுவாயுதங்கள் தொடர்பாகவும் தமது நாட்டின் வல்லமை தொடர்பாகவும், முக்கியமான கவனம் செலுத்தப்பட்டிருந்த போதிலும், முன்னரெப்போதும் இல்லாத அளவுக்கு, தென்கொரியாவுடன் இணங்கிச் செல்வதற்கான தனது விருப்பத்தையும் எதிர்பார்ப்பையும் வெளிப்படுத்தினார்.

“வடக்கு - தெற்கு (கொரியாக்களின்) உறவென்று வரும் போது, சமாதானச் சூழலொன்றை ஏற்படுத்துவதற்கு, கொரியத் தீபகற்பத்தில் இராணுவரீதியான பதற்றத்தை, நாம் குறைக்க வேண்டும். வடக்கும் தெற்கும், அதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டும்” என்று, அவர் தெரிவித்தார்.

ஐ.அமெரிக்காவின் நடவடிக்கைகள், கொரியத் தீபகற்பத்தின் பாதுகாப்பையும் சமாதானத்தையும் அச்சுறுத்துகின்றன எனக் குறிப்பிட்ட கிம் ஜொங்-உன், அந்த நடவடிக்கைகளை ஊக்குவிப்பதை விடுத்து, வடகொரியாவின் முன்மொழிவுகளை, தென்கொரியா கருத்திற்கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவின் முன்னேற்றத்தை வலியுறுத்துவது போல, இவ்வாண்டு பெப்ரவரியில், தென்கொரியாவில் இடம்பெறவுள்ள குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றுவதற்காக, தனது நாட்டு வீரர்களை அனுப்புவது குறித்து, சாதகமான கருத்தை, கிம் ஜொங்-உன் வெளிப்படுத்தினார். இது தொடர்பாக ஆராய்வதற்கு, இரு நாடுகளின் அதிகாரிகளும் அவசரமாகச் சந்தித்துக் கலந்துரையாட வேண்டுமென அவர் மேலும் குறிப்பிட்டார்.

கொங்கோ

## பாதுகாப்புப் படைகளால் எழுவர் கொலை



மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டம்

கொங்கோ ஜனநாயகக் குடியரசில், ஜனாதிபதிக்கெதிராக ஆர்ப்பாட்டம் மேற்கொண்டுவரும் ஆர்ப்பாட்டக்காரர்களில் ஏழு பேரை, அந்நாட்டுப் பாதுகாப்புப் படையினர் கொன்றுள்ளனர் என, ஐக்கிய நாடுகளின் அமைதிகாக்கும் படையினர் தெரிவித்தனர்.

கொங்கோ ஜனாதிபதி ஜோசப் கபிலா, தனது பதவியிலிருந்து விலகுவதற்கு மறுப்புத் தெரிவித்துவரும் நிலையில், அதற்கெதிரான ஆர்ப்பாட்டங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த பொலிஸ் பேச்சாளர் ஒருவர், தலைநகர் கின்ஷசாவில், பாதுகாப்புப் படைகளுடன் இடம்பெற்ற மோதலில், 3 பேர் கொல்லப்பட்டனர் எனத் தெரிவித்ததோடு, இன்னும் இரு மரணங்கள் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனத் தெரிவித்தார். ஆனால், குறைந்தது 7 பேர் கொல்லப்பட்டனர் என்று கூறப்படும் நிலையில், மிகுதி இருவரைப் பற்றி, எதுவும் தெரிவித்திருக்கவில்லை.

ஜனாதிபதிக்கெதிரான ஆர்ப்பாட்டத்தை, ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும் பிரார்த்தனைகளின் பின்னர் மேற்கொள்ளுமாறு, அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அதன்போதே, ஆர்ப்பாட்டக்காரர்கள் இவ்வாறு கொல்லப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி கபிலாவின் ஆட்சிக் காலம், 2016ஆம் ஆண்டுடன் முடிவடையவிருந்த நிலையில், அதிலிருந்து விலகுவதற்கு அவர் மறுத்து வருகிறார். தொடர்ச்சியான ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்ட நிலையில், 2017ஆம் ஆண்டு முடிவுக்குள், தேர்தலை நடத்துவதாக அவர் உறுதியளித்திருந்தார். அது பின்னர், 2018ஆம் ஆண்டு டிசெம்பராக மாறியுள்ளது. “நாட்டின் வாக்காளர்களின் எண்ணிக்கை தெரியாது” என்பதே, கபிலா தரப்பின் நியாயப்படுத்தலாக இருக்கிறது. ஆனால், அரசமைப்பை மாற்றி, ஆட்சியில் நீடிப்பதற்குக் கபிலா முயல்கிறார் என, சர்வதேச ரீதியாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது.

இத்தாலி

## இத்தாலிக்கான அகதிகள் வருகையில் வீழ்ச்சி



கோப்புப் படம்

கடல் மார்க்கமூடாக, கடந்தாண்டில் (2017) இத்தாலிக்குச் சென்றோரின் எண்ணிக்கை, 2016ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, மூன்றிலொரு பங்கால் குறைவடைந்துள்ளது என, அந்நாட்டு உள்விவகார அமைச்சுத் தெரிவித்தது.

பெரும்பாலான அகதிகளும் குடியேற்றவாசிகளும், லிபியாவிலிருந்து புறப்பட்டே இத்தாலிக்குச் செல்லும் நிலையில், அவர்களைத் தடுப்பதற்காக லிபியா மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக, இவ்வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

2016ஆம் ஆண்டில், கடல் மார்க்கமாக 181,000 பேர், இத்தாலியைச் சென்றடைந்திருந்த நிலையில், 2017ஆம் ஆண்டில், சுமார் 119,000 பேரே, இவ்வாறு கடல் மார்க்கமாகச் சென்றடைந்திருந்தனர் என, உத்தியோகபூர்வத் தரவுகள் தெரிவிக்கின்றன.

குடியேற்றவாசிகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக, லிபியாவுடன் தாம் மேற்கொண்ட ஒப்பந்தமே, இவ்விடயத்தில் திருப்புமுனையாக அமைந்தது என, உள்விவகார அமைச்சர் மார்க்கோ மின்னிட்டி தெரிவித்தார்.

இத்தாலியைப் பொறுத்தவரை, இது வெற்றியாகப் பார்க்கப்பட்டாலும், லிபியாவுடன் இத்தாலியும் ஏனைய ஐரோப்பிய நாடுகளும் இணைந்து செயற்படுகின்றமை குறித்து, சர்வதேச ரீதியாக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

கடல் மார்க்கமாகச் செல்ல முயல்வோர் தடுத்து வைக்கப்படும் லிபியத் தடுப்பு முகாம்களில், சித்திரவதைகளும் வன்புணர்வுகளும் வேலைசெய்ய நிர்ப்பந்திக்கப்படுதலும் தொடர்கின்றன என, மனித உரிமை அமைப்புகள் குற்றஞ்சாட்டுகின்றன.

ஆப்கானிஸ்தான்



மரண வீட்டில் தாக்குதல்:

## கொல்லப்பட்டோரின் எண்ணிக்கை 18ஆக உயர்வு

ஆப்கானிஸ்தானின் கிழக்குப் பகுதியில், நேற்று முன்தினம் இடம்பெற்றுக் கொண்டிருந்த மரண வீட்டில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில், குறைந்தது 18 பேர் கொல்லப்பட்டதோடு, மேலும் 13 பேர் காயமடைந்தனர் என, அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆப்கானிஸ்தானின் பாதுகாப்பு நிலை, கடந்தாண்டில் மேலும் மோசமடைந்து, பொதுமக்களுக்கான பாதுகாப்பின்மை அதிகரித்திருந்த நிலையில், ஆண்டின் இறுதி நாளிலும், பொதுமக்கள் இலக்குவைக்கப்பட்ட சம்பவமாக இது அமைந்தது.

இத்தாக்குதலை யார் நடத்தினர் என்பது, இதுவரை தெளிவாகவில்லை. இது, தற்கொலைக் குண்டுத் தாக்குதலே என, ஆரம்பத்தில் தெரிவிக்கப்பட்ட போதிலும், மோட்டாள் சைக்கிளில் பொருத்தப்பட்டிருந்த குண்டே வெடிக்க வைக்கப்பட்டது என, பின்னர் தெரிவிக்கப்பட்டது.

மாவட்டமொன்றின் முன்னாள் ஆளுநர் ஒருவர், இயற்கையான முறையில் காலமாகியிருந்த நிலையில், அவருக்கான மரண வீட்டில் அஞ்சலி செலுத்துவதற்காகவே, மக்கள் கூடியிருந்தனர்.

இத்தாக்குதலைத் தாம் நடத்தவில்லை என, தலிபான் குழு தெரிவித்தது.

ஈரான்

ஜனாதிபதியின் கருத்துக்கு மத்தியிலும்

## ஈரானில் போராட்டங்கள் தொடர்கின்றன



விமர்சனத்துக்கான வாய்ப்பை வழங்குவதாக, ஜனாதிபதி உறுதியளித்தமைக்கு மத்தியிலும், ஈரானில் இடம்பெற்றுவரும் போராட்டங்கள், நேற்றும் (01) தொடர்ந்தன.

விலைவாசிக்கு எதிராக, கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்த போராட்டங்கள், அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களாக நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் பரவிவரும் நிலையில், இதுவரையிலும் மௌனம் காத்துவந்த ஜனாதிபதி ஹஸன் றௌஹானி, ஞாயிற்றுக்கிழமை இரவு, முதன்முறையாக மக்களுக்கு உரையாற்றினார்.

“தங்களுடைய விமர்சனங்களை வெளிப்படுத்துவதற்கும், போராடுவதற்கும், மக்களுக்கு முழுமையான சுதந்திரம் உள்ளது. ஆனால் விமர்சனமென்பது, வன்முறையையும் அரச சொத்துகளுக்குச் சேதம் விளைவிப்பதையும் விட வேறானது” என்று தெரிவித்தார்.

அரசாங்கத்துக்கு எதிராக மாறிய ஆர்ப்பாட்டங்கள், நாட்டின் உச்சநிலைத் தலைவர் அயோதுல்லா அலி காமேனிக்கும் இஸ்லாமிய ஆட்சிக்கும் எதிரானவையாக மாறியதோடு, “சர்வாதிகாரிக்கு மரணம்” என, போராட்டக்காரர்கள் சத்தமிட்டிருந்தனர். இதனால், பொலிஸாரினதும் இராணுவத்தினரதும் கடுமையான நடவடிக்கைகளுக்கு உள்ளாகியிருந்தனர்.

பயணம் செய்வதற்கான தடை தொடர்ந்தும் நிலவுவதோடு, அலைபேசிகளுக்கான இணைய வசதிகளும், டெலிகிராம், இன்ஸ்டாகிராம் போன்ற பிரபலமான சமூக ஊடகத் தளங்களும், இன்னமும் முடக்கப்பட்டே காணப்படுகின்றன.

எனினும், அதற்கு முரணான நிலைப்பாட்டை வெளிப்படுத்திய ஜனாதிபதி, சட்டரீதியான விமர்சனத்துக்கும் போராட்டத்துக்கும், அரச நிறுவனங்கள், வழியை ஏற்படுத்த வேண்டும் எனக் கோரியதோடு, அதிகப்படியான வெளிப்படைத்தன்மையும் பாகுபாடற்ற ஊடகங்களும் தேவை எனக் குறிப்பிட்டார்.

ஜனாதிபதியின் நிலைப்பாடு, அரசாங்கத்தின் ஏனைய உறுப்பினர்களை விட வேறானதாக இருந்த போதிலும், இவற்றுக்கு மத்தியிலும் ஆர்ப்பாட்டங்கள் தொடர்கின்றன. நேற்று முன்தினம் இரவு ஆரம்பித்த சில போராட்டங்கள், நேற்றுக் காலை வரை தொடர்ந்தன என, ஈரானிய ஊடகங்கள் தெரிவித்தன.

அதேபோன்று, சனிக்கிழமை மாலை ஆரம்பித்து இடம்பெற்ற பல்வேறு போராட்டங்களில், குறைந்தது 200 பேர் கைதுசெய்யப்பட்டனர் என, அதிகாரிகள் உறுதிப்படுத்தினர். தவிர, 4 பேரின் மரணங்கள் தொடர்பாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில், இப்போராட்டங்களைப் பற்றிச் செய்தி வெளியிட்டிருக்காத அரச ஊடகம், நேற்று முன்தினம், முதன்முறையாகச் செய்தி வெளியிட்டது. ஆனால், வங்கிகளையும் வாகனங்களையும் சேதமாக்கும் இளைஞர்களையும், ஈரானிய தேசியக் கொடியை எரிக்கும் இளைஞரொருவரையுமே, அவ்வூடகம் வெளிப்படுத்தியது.



இங்கிலாந்து பிரீமியர் லீக் கழகமான செல்சியின் மத்தியகள வீரரான ஈடின் ஹஸார்ட்டை, ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்ரிட் ஒப்பந்தம் செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இங்கிலாந்து பிரீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் பின்கள வீரர் அஷ்லி யங், முழங்கையால் இடித்தமை காரணமாக மூன்று போட்டிகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளார்.



"இரண்டு மாதங்களுக்கு முன்னரே அவரை (மொயின் அலி) உலகின் தலைசிறந்த சகலதுறை வீரர்களிலொருவர் என நாங்கள் கதைத்துக் கொண்டிருந்தோம். அனைவருமே, நீங்கள் விரும்பியது போன்று சில நேரங்களில் விக்கெட்டுகளைக் கைப்பற்றவோ, ஓட்டங்களை எடுக்கவோ மாட்டீர்கள்.



– ட்ரெவர் பெய்லிஸ் (இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளர்)

## பார்சிலோனாவால் ஒப்பந்தம் செய்யப்பட்டாரா கோச்சினியோ?

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான பார்சிலோனாவின் சீருடைத் தயாரிப்பாளரான நைக்கி, இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான லிவர்பூலின் மத்தியகள வீரரான பிலிப் கோச்சியோவின் பெயர் சீருடையின் பின்புறம் பதித்த பார்சிலோனா சீருடைகள் குறித்து விளம்பரம் செய்துள்ளது.

இதனையடுத்து, லிவர்பூலிருந்து பிரேஸில் தேசிய கால்பந்தாட்ட அணியினதும் மத்தியகள வீரரான பிலிப் கோச்சினியோ, பார்சிலோனாவால் ஒப்பந்தம் செய்யப்பட்டாரா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. ஏனெனில், கடந்த பருவகாலத்தில் பார்சிலோனாவால் ஒப்பந்தம் செய்யப்பட முடியாமல் போன பிலிப் கோச்சினியோ, இம்மாதம் ஒப்பந்தம் செய்யப்படுவார் எனத் தகவல்கள் வெளியாகியிருந்தன.



## காயத்திலிருந்து மீண்டு வருகிறார் நடால்

உலகின் முதல் நிலை டென்னிஸ் வீரரான ஸ்பெய்னின் ரபேல் நடால், தனது முழங்கால் காயத்திலிருந்து மீண்டு, அவுஸ்திரேலியாவின் மெல்பேணில் இம்மாதம் 10ஆம் திகதி ஆரம்பிக்கும் டை பிரேக் டென்னிஸ் போட்டிகளில் பங்குபற்றவுள்ளார்.

குறித்த போட்டிகளில், முன்னாள் முதல்நிலை வீரரான சேர்பியாவின் நொவக் ஜோக்கோவிச், சுவிற்ஸர்லாந்தின் ஸ்டான் வவ்றிங்கா ஆகியோரும் பங்குபற்றவுள்ள நிலையில், இதன் வெற்றியாளருக்கு, 250,000 ஐக்கிய அமெரிக்க டொலர்கள் கிடைக்கவுள்ளன.



## உத்தியோகபூர்வமாக வெளிப்படுத்தப்பட்டார் கொஸ்டா

இங்கிலாந்து பிறீமியர் லீக்கின் நடப்புச் சம்பியன்களான செல்சியின் முன்னாள் முன்கள வீரரான டியகோ கொஸ்டா, ஸ்பானிய லா லிகா கழகமான அத்லெட்டிகோ மட்ரிட்டில் உத்தியோகபூர்வமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளதுடன், நாளையே, அத்லெட்டிகோ மட்ரிட்டுக்காக விளையாடும் வாய்ப்பைக் கொண்டிருக்கிறார்.

ஸ்பெய்ன் தேசிய கால்பந்தாட்ட அணியினதும் முன்கள வீரரான டியகோ கொஸ்டா, அத்லெட்டிகோ மட்ரிட்டால் கைச்சாத்திடப்படுவதற்கு கடந்தாண்டு செப்டெம்பரே இணங்கியபோதும் வீரர்களை ஒப்பந்தம் செய்வதற்கு காணப்பட்ட தடை காரணமாக இதுவரை விளையாட முடியாமல் இருந்தது.




இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# சிற்றி - பலஸ் போட்டி சமநிலை

### சிற்றியின் தொடர் வெற்றிகளுக்கு முடிவு

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டிகளில், மன்செஸ்டர் சிற்றி, கிறிஸ்டல் பலஸ் அணிகளுக்கிடையிலான போட்டி சமநிலையில் முடிவடைந்ததுடன், ஆர்சனல், வெஸ்ட் ப்ரோம் அணிகளுக்கிடையிலான போட்டியும் சமநிலையில் முடிவடைந்தது.

மன்செஸ்டர் சிற்றி, கிறிஸ்டல் பலஸ் அணிகளுக்கிடையிலான போட்டியில், இரண்டு அணிகளும் கோலெதனையும் பெறாத நிலையில், போட்டி சமநிலையில் முடிவடைந்திருந்தது.

இப்போட்டியின் இறுதிக் கணத்தில் கிறிஸ்டல் பலஸின் முன்கள வீரர் வில்பிரைட் ஸாகாவுடன் விதிமுறைக்கு மீறி சிற்றியின் ரஹீம் ஸ்டேர்லிங் நடந்து கொண்டதால், கிறிஸ்டல் பலஸுக்கு பெனால்டி வழங்கப்பட்டது.

எனினும், லூகா மிலிவொஜெவிக் செலுத்திய பெனால்டியை சிற்றியின் கோல் காப்பாளர் எடெர்சன் தடுத்தன் காரணமாகவே போட்டியை சிற்றி சமநிலையில் முடித்து, இப்பருவகால பிறீமியர் லீக்கில் தோற்கடிக்கப்பட முடியாத அணியாகத் தொடருகின்றது.

எவ்வாறெனினும், இப்போட்டியை சமநிலையில் முடித்துக் கொண்டதன் மூலம் இப்பருவகால பிறீமியர் லீக்கில், மன்செஸ்டர் சிற்றி, தொடர்ச்சியாக 18 போட்டிகளில் பெற்று வந்த வெற்றி, முடிவுக்கு வந்திருந்தது.

இதேவேளை, இப்போட்டியின்போது காயமடைந்த மன்செஸ்டர் சிற்றியின் முன்கள வீரர் கப்ரியல் ஜெஸுஸ், ஒரு மாதத்துக்கு மேல் விளையாட மாட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், இப்போட்டியின் இறுதி நிமிடத்தில் உதையொன்றை எதிர்கொண்ட மத்தியகள வீரர் கெவின் டி ப்ரூனே, தூக்குப் படுக்கையில், மைதானத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், ஆர்சனல், வெஸ்ட்ப்ரோம்விச் அல்பியன் அணிகளுக்கிடையிலான போட்டியில், இரண்டு அணிகளும் தலா ஒவ்வொரு கோலைப் பெற்ற நிலையில், போட்டி சமநிலையில் முடிவடைந்திருந்தது.

அந்தவகையில், இப்போட்டிகளின் முடிவில், 59 புள்ளிகளுடன், பிறீமியர் லீக் புள்ளிகள் தரவரிசையில் முதலிடத்தில் மன்செஸ்டர் சிற்றி தொடர்வதுடன், 45 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் செல்சியும், 44 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் மன்செஸ்டர் யுனைட்டெட்டும் உள்ளன.

லிவர்பூல் 41 புள்ளிகளுடன் நான்காமிடத்திலும், ஆர்சனல் 38 புள்ளிகளுடன் ஐந்தாமிடத்திலும், டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர் 37 புள்ளிகளுடன் ஆறாமிடத்திலுமுள்ளன.




டெஸ்ட்களுக்கான துடுப்பாட்ட வீரர்களின் தரவரிசை:

## முன்னிலையை அதிகரித்து கொண்டார் ஸ்டீவ் ஸ்மித்

சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் போட்டிகளுக்கான துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் முதலிடத்திலிருக்கும் அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் தலைவர் ஸ்டீவ் ஸ்மித், தனக்கும் இரண்டாமிடத்திலுள்ள இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் விராத் கோலிக்குமான புள்ளிகள் வித்தியாசத்தை, 54 ஆக அதிகரித்துக் கொண்டார்.

அந்தவகையில், தரவரிசை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் விளையாடிக் கொண்டிருக்கும் வீரர் பெறுகின்ற அதிக புள்ளிகளாக 947 புள்ளிகளைப் பெற்று ஸ்டீவ் ஸ்மித் முதலிடத்திலுள்ளார். தரவரிசை மதிப்பீட்டின்படி டொன் பிரட்மனே 961 புள்ளிகளைப் பெற்று, அதிக புள்ளிகளைப் பெற்றவராகக் காணப்படுகின்றார்.




இதேவேளை, அவுஸ்திரேலியாவுக்கெதிரான நான்காவது ஆஷஸ் டெஸ்டின் முதலாவது இனிங்ஸில் ஆட்டமிழக்காமல் 244 ஓட்டங்களைப் பெற்ற அலிஸ்டயர் குக், ஒன்பது இடங்கள் முன்னேறி, எட்டாமிடத்தைப் பிடித்துள்ளார். இதுதவிர, டெஸ்ட் போட்டிகளுக்கான இங்கிலாந்து அணியின் தலைவர் ஜோ றூட் ஓர் இடம் முன்னேறி, நியூசிலாந்து அணித்தலைவர் கேன் வில்லியம்சனுடன் நான்கமிடத்தைப் பகர்ந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்ட வீரர்களின் வரிசை பின்வருமாறு,

1. ஸ்டீவ் ஸ்மித், 2. விராத் கோலி, 3. செற்றேஸ்வர் புஜாரா, 4. கேன் வில்லியம்சன், 4. ஜோ றூட், 6. டேவிட் வோணர், 7. ஹஷிம் அம்லா, 8. அலிஸ்டயர் குக், 9. அஸார் அலி, 10. தினேஷ் சந்திமால்.

பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில் முதல் 10 இடங்களில், தென்னாபிரிக்காவின் மோர்னி மோர்க்கல், சிம்பாப்வேக்கெதிரான நான்கு நாள் டெஸ்ட் போட்டியின் முதலாவது இனிங்ஸில் 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து, மூன்று இடங்கள் முன்னேறி 10ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். முதல் 10 இடங்களுக்குள் வேறு மாற்றமேதும் நிகழவில்லை.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் வரிசை பின்வருமாறு,

1. ஜேம்ஸ் அன்டர்சன், 2. கஜிஸ்கோ றபடா 3. இரவீந்திர ஜடேஜா, 4. இரவிச்சந்திரன் அஷ்வின், 5. ஜொஷ் ஹேசில்வூட், 6. ரங்கன ஹேரத், 7. நீல் வக்னர், 8. மிற்செல் ஸ்டார்க், 9. நேதன் லையன், 10. மோர்னி மோர்க்கல்.

"தரவரிசை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் விளையாடிக் கொண்டிருக்கும் வீரர் பெறுகின்ற அதிக புள்ளிகளாக 947 புள்ளிகளைப் பெற்று ஸ்டீவ் ஸ்மித் முதலிடத்திலுள்ளார். தரவரிசை மதிப்பீட்டின்படி டொன் பிரட்மனே 961 புள்ளிகளைப் பெற்று, அதிக புள்ளிகளைப் பெற்றவராவார்

## ஆப்கானிஸ்தானின் பயிற்சியாளராக பில் சிமொன்ஸ்

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியின் புதிய தலைமைப் பயிற்சியாளராக, பில் சிமொன்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார். இந்திய அணியின் முன்னாள் வீரரான லால்சன்ட் ராஜ்பூட்டையே பில் சிமொன்ஸ் பிரதியீடு செய்கிறார்.

லால்சன்ட் ராஜ்பூட் நியமிக்கப்பட்டு மூன்று மாதத்திலேயே, அவருடைய ஒப்பந்தத்தை ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபை நிறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் தனது பணியை ஆரம்பிக்கவுள்ள பில் சிமொன்ஸ், ஐக்கிய அரபு அமீரகத்தின் ஷார்ஜாவில் அடுத மாதம் இடம்பெறவுள்ள சிம்பாப்வேக்கெதிரான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளுக்கான தொடருக்காக டுபாயில் தயாராகும் ஆப்கானிஸ்தான் குழாமுடன் இணைந்து



கொள்ளவுள்ளார்.

அடுத்தாண்டு இடம்பெறவுள்ள உலகக் கிண்ணம் வரை பில் சிமொன்ஸின் ஒப்பந்தம் காணப்படுகிறது.

கடந்த சில மாதங்களாக, பயிற்சியாளருக்காக ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபை நேர்காணல்களை நடத்தியிருந்த நிலையில், தெரிவுசெய்யபட்டு நேர்காணப்பட்ட மூவரில் பில் சிமொன்ஸ் ஒருவராவார். இந்நிலையில், அயர்லாந்து மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக அனுபவத்தையும் சிறந்த பெறுபேற்றையும் கொண்டிருந்ததோடு, ஆப்கானிஸ்தானின் ஆலோசனையாளராக கடந்தாண்டு பணியாற்றிய நிலையிலேயே பில் சிமொன்ஸ், பயிற்சியாளராகத் தெரிவாகியிருந்தார்.

சிம்பாப்வேக்கெதிரான தொடரைத் தொடர்ந்து, இவ்வாண்டு மார்ச்சியில் உலகக் கிண்ண தகுதிப் போட்டிகளில் ஆப்கானிஸ்தான் பங்கேற்பதுடன், பின்னர் தமது முதலாவது டெஸ்டில் விளையாடுவதற்காக இந்தியாவுக்குச் செல்லவுள்ளது.

பங்களாதேஷ் அணியின் பயிற்சியாளர் பதவிக்காகவும், கடந்த மாதம் ஆரம்பத்தில் பில் சிமொன்ஸ் நேர்காணப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாண்டின் முதலாவது சர்வதேச கிரிக்கெட் போட்டி:

## மழையால் முடிவு கிடைக்காமல் போனது



இவ்வாண்டின் முதலாவது சர்வதேச கிரிக்கெட் போட்டிக்கு, கடுமையான மழை காரணமாக, முடிவேதும் கிடைக்கப்பெறாத போட்டியாக மாறியது.

நியூசிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டித் தொடரில், மகட்டரேயில் நேற்று இடம்பெற்ற இரண்டாவது போட்டியிலேயே, மழை காரணமாக முடிவு கிடைக்காமல் போனது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தலைவர் கார்லோஸ் பிறத்வெய்ட், நியூசிலாந்து அணியை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தார்.

இந்நிலையில், நாணயச் சுழற்சிக்குப் பின்னர் பெய்த மழை காரணமாக, வழமையான நேரத்தை விட தாமதித்து துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய நியூசிலாந்து, ஒன்பது ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 102 ஓட்டங்களைப் பெற்றபோது, மீண்டும் குறுக்கிட்ட மழை தொடர்ந்ததால், இப்போட்டியில் முடிவில்லாமல் போனது.

இந்த குறுகிய நேரத்துக்குள்ளும் கொலின் மன்றோ, 23 பந்துகளில், 3 ஆறு ஓட்டங்கள் மற்றும் 11 நான்கு ஓட்டங்கள் உள்ளடங்கலாக 66 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.



ரஜினியின் "ஆன்மீக அரசியல்" குறித்த விமர்சனங்களுக்கு பதிலளித்துள்ள ரஜினியின் நீண்டகால நண்பர் தமிழருவி மணியன், மத அரசியல் வேறு, ஆன்மீக அரசியல் என்பது வேறு எனவும் காந்திய வழியில் பயணிக்கவே ரஜினி ஆசைப்படுகிறார் எனவும் தெரிவித்துள்ளார்.

புத்தாண்டு, பொங்கல், தீபாவளிப் பண்டிகைகளின் போது, சென்னையிலுள்ள போயஸ் கார்டன் இல்லத்துக்கு வருகை தரும் ரசிகர்களுக்கு வாழ்த்துக் கூறுவதை வழக்கமாகக் கொண்ட ரஜினி, நேற்றைய தினமும் தனது ரசிகர்களைச் சந்தித்து, புத்தாண்டு வாழ்த்துகளைக் கூறினார்.





# CONDUCTOR TO SUPER STAR

## ரஜினியின் சக்ஸஸ்ஃபுல் சினிமா பயணம்

கண்டக்டராக இருந்து, இயக்குநர் பாலச்சந்தரால் கண்டெடுக்கப்பட்டு தமிழ் சினிமாவில் அறிமுகப்படுத்தப்பட்ட ரஜினிகாந்த், இப்போது தமிழ்த் திரையுலகின் சூப்பர் ஸ்டாராக வளர்ந்து நிற்கிறார்.

இந்த வெற்றி, ஓர் இரவில் கிடைத்ததல்ல. நடிக்கக் கிடைத்த வாய்ப்புகளை எல்லாம், தனது திறமையை வெளிக்காட்டக் கிடைத்த சந்தர்ப்பங்களாகக் கருதி, தன் அடையாளத்தைத் தக்கவைத்துக்கொண்ட ரஜினிகாந்த் வென்ற சினிமா சரித்திரம் இது.

ஒரு புள்ளியில் தொடங்கிய ரஜினிகாந்தின் சினிமாப் பயணம், இப்போது உலகம் முழுவதும் ரசிகர்களைப் பெறும் அளவுக்கு வளர்ந்திருக்கிறது. இத்தனைக்கும் தகுதியான அந்த மனிதர், எளிமையின் இன்னொரு வடிவம்.







### ரஜினி இளம் வயது

மராத்திக் குடும்பத்தில் பிறந்த ரஜினி, பெங்களூரில் பள்ளிப் படிப்புப் படித்தவர். படிப்பைமுடித்ததும், பஸ் கண்டக்டராகவும் சில மேடை நாடகங்களில் நடிகராகவும் வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருந்தவர், இப்போதிருக்கும் உயரத்தை, அப்போது நிச்சயமாக நினைத்துப் பார்த்திருக்க மாட்டார். நடிப்பின் மீது கொண்ட ஆர்வத்தால், சென்னைக்கு வண்டி ஏறிய ரஜினி, தனது நண்பரின் துணையோடு சென்னை திரைப்படக் கல்லூரியில் சேர்ந்தார்.

### பாலச்சந்தர் கண்டெடுத்த முத்து

பாலச்சந்தரின் கண்ணில் பட்டதையடுத்து, அவர் இயக்கிய 'அபூர்வ ராகங்கள்' திரைப்படத்தில் சிறிய கதாபாத்திரத்தில் அறிமுகமானார். 'அபூர்வ ராகங்கள்' திரைப்படத்தில், சிகரெட்டை தூக்கிப் போட்டு வாய்க்குக் கொண்டுவரும் ஸ்டைலை அறிமுகப்படுத்தி, அன்றைய இளைஞர்களின் ஏகபோக வரவேற்பைப் பெற்றார். பின்னர், 1976இல் பாலச்சந்தர் இயக்கிய 'மூன்று முடிச்சு' திரைப்படம், ரஜினியை நல்ல நடிகராக அறியவைத்தது.

### ரஜினி ஸ்டைல்

ரஜினி என்றாலே ஸ்டைல் எனும் நிலை உருவாகும் அளவுக்கு, பல திரைப்படங்களில் தனித்துவமான ஸ்டைல்களைக் காண்பித்து, மக்களைக் கவர்ந்தார். '16 வயதினிலே' திரைப்படத்தில், "பரட்டை" எனும் வில்லன் கதாபாத்திரம் மூலம் ரசிகர்களைக் கவர்ந்தார். அந்தத் திரைப்படத்தில் அமைந்த ரஜினியின் 'இது எப்டி இருக்கு' என்ற வசனம், இத்தனை ஆண்டுகள் கழித்தும், நினைவு கூரப்படுவதே அவரது நடிப்புக்கான வெற்றி என்று கூறலாம். நடிப்பின் மீதான அவரது அபிமானமே, அவரை மாபெரும் நடிகராக வளர்த்தெடுத்துள்ளது.

### நாயகனாக ரஜினி

1977ஆம் ஆண்டில், 'புவனா ஒரு கேள்விக்குறி' திரைப்படத்தின் மூலம், நாயகனாக ரஜினி அறிமுகமானார். அந்தத் திரைப்படத்தின் வெற்றி, அவருக்கு ஏறுமுகத்தைத் தொடக்கி வைத்தது. அதைத் தொடர்ந்து, 'முள்ளும் மலரும்', 'ஆறிலிருந்து அறுபது வரை' ஆகிய திரைப்படங்களில் நடித்து, பெரிய வெற்றியைப் பெற்றார். 'பில்லா', 'போக்கிரி ராஜா', 'முரட்டுக்காளை' ஆகிய திரைப்படங்களில், அக்ஷன் அவதாரம் எடுத்து, செம கலக்கு கலக்கியிருப்பார்.

### சினிமாவின் மைல்கல்

'மீசை இருந்தா சந்திரன்' மீசை இல்லாட்டி இந்திரன்' என வெரைட்டி விருந்து படைத்த 'தில்லுமுல்லு' திரைப்படத்தில், கொமெடி ஹீரோவாக ரசிகர்களை அவர் மகிழ்வித்தார். 'தர்மத்தின் தலைவன்', 'மூன்று முகம்' ஆகிய திரைப்படங்களும், அவரது திரைப் பயணத்தில் குறிப்பிடத்தக்க மிகப்பெரிய வெற்றித் திரைப்படங்களாக அமைந்தன. 1985ஆம் ஆண்டில் தனது நூறாவது திரைப்படமான 'ராகவேந்திரா'வில் நடித்து, புதிய மைல்கல்லைக் கடந்தார்.

### 'வரவேண்டிய நேரத்துல கரெக்டா வருவேன்'

'மாவீரன்', 'தர்மத்தின் தலைவன்', 'மாப்பிள்ளை' உள்ளிட்ட பல திரைப்படங்கள், மிகப்பெரும் வெற்றியைக் கொடுத்து, அவரை உச்ச நட்சத்திரமாக நிலை நாட்டின. தொண்ணூறுகளில் வெளிவந்த 'தர்மதுரை', 'தளபதி', 'மன்னன்', 'அண்ணாமலை'









'பாட்ஷா', 'அருணாசலம்', 'படையப்பா' ஆகிய திரைப்படங்கள் வெறித்தன ஹிட் அடித்து, தமிழ்த் திரையுலகின் சூப்பர் ஸ்டார் எனும் பட்டத்தைப் பெற்றுத்தந்தன.

ரஜினி பெயரை டைட்டில் கார்டில் போட்டால், தியேட்டரே தெறிக்கும் அளவுக்கு விசில் பறந்தது. "எப்ப வருவேன்? எப்படி வருவேன்னு யாருக்கும் தெரியாது, ஆனா வரவேண்டிய நேரத்துல கரெக்டா வருவேன்." என்கிற வசனம், அவரது அரசியல் பிரவேசத்துக்கான அறிகுறியாகவே பார்க்கப்பட்டது.

### உலகம் முழுதும் ரசிகர்கள்

1995ஆம் ஆண்டு வெளிவந்த 'முத்து' திரைப்படம், தமிழில் பெரும் வெற்றி பெற்றதோடு, ஜப்பான் மொழியிலும் மொழிமாற்றம் செய்து வெளியிடப்பட்டது. ஜப்பானிய மொழியில் மொழிமாற்றம் செய்யப்பட்ட முதல் தமிழ்த் திரைப்படம் எனும் சிறப்பு பெற்ற 'முத்து', அங்கும் ஹிட்டாகி, ரஜினிக்கு இருக்கும் ரசிகர்களின் ஆதரவை உரக்கச் சொல்லியது. பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் வெளியான 'பாபா' திரைப்படம், ரசிகர்களை ஏமாற்றியது. ஆனாலும், அதில் அவர் பேசிய 'நான் லேட்டா வந்தாலும் லேட்டஸ்டா வருவேன்' என்கிற வசனம், ரசிகர்களுக்கான அவரது அறிவிப்பாகவே எடுத்துக் கொள்ளப்பட்டது.

### உச்ச நட்சத்திரம்

பி.வாசு இயக்கத்தில் வெளியான 'சந்திரமுகி' திரைப்படம், பல திரையரங்குகளில் வெள்ளி விழா கொண்டாடியது. ஷங்கர் இயக்கத்தில் வெளிவந்த 'சிவாஜி' திரைப்படமும், 'எந்திரன்' திரைப்படமும், உலகம் முழுதும் வெளியாகி வசூல் சாதனை படைத்தன. 'கபாலி' திரைப்படத்தில் மிரட்டலாக நடித்து ரசிகர்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றினார். என்றைக்கும் சூப்பர்ஸ்டாராக விளங்கும் ரஜினி, இப்போது எந்திரன் திரைப்படத்தின் இரண்டாம் பாகமான '2.ஓ' திரைப்படத்திலும் 'காலா' திரைப்படத்திலும் நடித்துவிட்டு, ரிலீஸுக்காக காத்திருக்கிறார்.

### தலைவன்

ஆனால், அவரது அரசியல் என்ட்ரிக்காக அவரது பெரும் ரசிகர் படையே காத்திருக்கிறது. 'வருவது வரட்டும்; நீ வா தலைவா' என, அவரது இலட்சக்கணக்கான ரசிகர்கள், உணர்ச்சி பொங்க கோஷமெழுப்பி வருகிறார்கள். கடந்த ஒரு வாரமாக, தமிழ்நாட்டின் பல பகுதிகளைச் சேர்ந்த ரசிகர்களையும் சந்தித்து வருகிறார் ரஜினி. அவர்கள் அத்தனை பேரின் கோரிக்கையும் 'தலைவன்' எனும் ஒற்றைக் குரலாகத்தான் ஒலிக்கிறது.

### ரஜினியின் அந்த அறிவிப்பு

விருதுகளால் இனி ரஜினிக்குப் பெருமை இல்லை; ரஜினியால் விருதுகள் பெருமைகொள்ளும் காலமும் வந்துவிட்டது. இத்தனை வருடங்களாக மக்கள் மனதில் சூப்பர் ஸ்டாராக வாழ்ந்தவர், மக்களின் தலைவனாக உருவாக வேண்டும் என்ற நம்பிக்கையோடு, ரசிகர் மன்றத்தினர் காத்திருக்கிறார்கள்.. ரஜினிகாந்த் அந்த அறிவிப்பு தான், ரசிகர்களின் நம்பிக்கையில் ஒளியேற்றியிருக்கிறது.

### போருக்கு வா தலைவா!

"விட்டகுறை தொட்டகுறை உனக்காக காத்திருக்கோம்.. ஒரு வார்த்தை நீ சொல்லிப்புட்டா தமிழ்நாடே தூள் பறக்கும்!





ரெண்டில் ஒண்ணு பார்த்திடலாம்... களத்துக்கு வா தலைவா! கொண்டு வந்ததெதுவுமில்ல... கொண்டுபோக எதுவும் இல்ல... தலைவா தலைவா... நீ போருக்கு வா..!" என, தலைவரின் தளபதிகள் முழங்குகிறார்கள். அவர் சொன்ன போர் முரசு, அவர் வார்த்தைகளில் இருந்து வெளிவந்ததையடுத்து, ரசிகர்கள் மகிழ்ச்சி ஆரவாரத்தில் குதித்திருக்கிறார்கள்.

### ஆன்மிக அரசியல்

"பதவி ஆசை இருந்திருந்தா, 1996இலேயே தேடி வந்த நாற்காலியை வேண்டாம் எனச் சொல்லியிருக்க மாட்டேன். 45 வயதிலேயே, எனக்கு பதவி ஆசை இல்லை; 68 வயதில் வருமா? வந்தா, பைத்தியக்காரன் என்றல்லவா சொல்வர்! அரசியல் ரொம்ப கெட்டு விட்டது; ஜனநாயகம் சீர்கெட்டு போய்விட்டது. ஓராண்டில் நடந்த சில அரசியல் நிகழ்வுகள், சம்பவங்கள், தமிழக மக்களை தலைகுனிய வைத்து விட்டன. மற்ற மாநில மக்கள், நம்மை பார்த்து சிரிக்கின்றனர். இந்த நேரத்தில், நான், இந்த முடிவை எடுக்க வில்லை என்றால், அந்தக் குற்ற உணர்ச்சி, என்னை சாகிற வரைக்கும் துன்புறுத்தும். அரசியல் மாற்றத்துக்கான நேரம் வந்துவிட் டது. சிஸ்டத்தை மாற்ற வேண்டும். உண்மையான; வெளிப்படையான; ஜாதி, மதத்துக்கு அப்பாற்பட்ட ஆன்மிக அரசியலை ஏற்படுத்த வேண்டும். அது தான் என் நோக்கம். தமிழக மக்கள் என்னுடன் இருக்கின்றனர். இது, சாதாரண விடயமில்லை என, எனக்கு தெரியும். ஆண்டவன் அருள், மக்களின் நம்பிக்கை, அன்பு, ஒத்துழைப்பு இருந்தால் தான் இதைச் சாதிக்க முடியும். அது எனக்கும் கிடைக்கும் என்ற முழு நம்பிக்கை உள்ளது" எனக் கூறி, 20 ஆண்டுகளாக நீடித்த யூகத்துக்கு, முற்றுப்புள்ளி வைத்துவிட்டார்.

### சினிமா பிரபலங்கள் கருத்து

**அமிதாப்பச்சன்:** எனது நண்பரும் சக நடிகரும், நல்ல மனிதாபிமானமுள்ள மனிதருமான ரஜினிகாந்த்> தனது அரசியல் பிரவேச முடிவை அறிவித்துள்ளார். அவரது வெற்றிக்கு எனது வாழ்த்துகள்.

**கமல்:** சகோதரர் ரஜினியின் சமூக உணர்வுக்கும் அரசியல் வருகைக்கும் வாழ்த்துகள். வருக வருக.

**குஷ்பு:** ஜனநாயகம் மற்றும் வளர்ச்சி மீது நம்பிக்கை கொண்டவர் ரஜினி என்பது அனைவருக்கும் தெரியும். அவரது முயற்சிகளுக்கு எங்களின் வாழ்த்துகள்.

**ஆர்த்தி:** இந்தக் கூவத்தை தூய்மை செய்ய வரும் கங்கைக்கு வாழ்த்துகள்.

**விவேக்:** நடிகர் ரஜினிகாந்த் தனது அரசியல் அறிவிப்பின் மூலம் ஆனந்த அதிர்ச்சி அளித்துவிட்டார். இதிலிருந்து ரஜினி பின் வாங்கக்கூடாது. உணர்ச்சிப் பெருக்கில் ரசிகர்கள் கட்டுப்பாடு மீறல் கூடாது. சட்டம் ஒழுங்கு முக்கியம். வாழ்த்துகள்.

**சமுத்திரக்கனி:** வாங்க... வாங்க...

**கார்த்திக் சுப்புராஜ்:** தலைவா... வா தலைவா.. தனித்து வா தலைவா.. அனைவருக்கும் தேவையான மாற்றமாக இரு.

**கஸ்தூரி:** தலைவா. வா. வா. வா *vaaaaaaaaaaa !!!!!!!!! Hurraaaaay !!!!!*

**லிங்குசாமி:** எது நடந்தாலும் கடவுளும் தமிழக மக்களும் எப்பொழுதும் உங்களுடன் இருப்பார்கள். வாழ்த்துகள் சார்.



உள்ளூர் பால் உற்பத்திகளை ஊக்குவிக்கும் பொருட்டு, இலங்கைக்கு, 13.9 மில்லியன் யூரோக்களை வழங்குவதற்கு, பிரஞ்சு குடியரசு முன்வந்துள்ளது.

தற்போது, அமேசான் வலைதளத்தில், ஆப்பிள் ஐபோன் 8 மாடல் அலைபேசிக்கு, அதிரடி விலைகுறைப்பு அறிவிக்கப்பட்டுள்ளது.





# இலங்கையின் பெருந்தோட்ட வியாபாரத்துக்கு 'டாடா' காட்டிய டாட்டா

இலங்கையில் வட்டவளை பெருந்தோட்ட கம்பனியில் 31.85 சதவீத பங்குகளை தன்வசம் கொண்டிருந்த இந்தியாவின் டாடா குளோபல் பெவரேஜஸ் தனது முழுப்பங்குகளையும் வட்டவளை பெருந்தோட்ட கம்பனியின் பிரிதொரு பங்காளரான சன்ஷைன் ஹோல்டிங்ஸ குழுமத்துக்கு விற்பனை செய்துள்ளதாக அறிவித்துள்ளது.

இதன் மூலமாக இலங்கையின் பெருந்தோட்டத்துறையில் 25 வருட காலத்துக்கு மேலாக டாடா பெவரேஜ் ஹோல்டிங்ஸ் கொண்டிருந்த வியாபார ஈடுபாடு முடிவுக்கு வந்துள்ளதாகவும், டாடா நிறுவனத்தின் சர்வதேச வியாபாரங்களிலிருந்து வெளியேறல் எனும் கொள்கையின் பிரகாரம் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் கொழும்பு பங்குப்பரிவர்த்தனையில் மேற்கொண்டுள்ள நிரல்படுத்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

120 கோடி ரூபாய்களுக்கு இந்தப் பங்கு பரிமாற்றம் நடந்தேறியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் தற்போது வட்டவளை பெருந்தோட்ட கம்பனியின் நிர்வாகிக்கும் 60 சதவீத பங்குகளை சன்ஷைன் ஹோல்டிங்ஸ் தன்வசம் கொண்டுள்ளதுடன், எஞ்சிய பங்குகள் பிரமிட் வில்மர் பிளான்டேஷன் நிறுவனம் வசம் காணப்படுகிறது.

வட்டவளை பெருந்தோட்ட கம்பனியின் மூலமாக உள்நாட்டு சந்தையில் செஸ்டா, வட்டவளை மற்றும் ரன் கஹாட்ட போன்ற வர்த்தக நாமங்களில் தேயிலை விற்பனையாகின்றமை குறிப்பிடத்தக்கது.




2017ஆம் ஆண்டு முழுவதிலும் டாடா பெவரேஜஸ் ஹோல்டிங்ஸ் சர்வதேச ரீதியில் தனது வியாபாரங்களிலிருந்து விடுபட்டதை அவதானிக்க முடிந்தது. குறிப்பாக ரஷ்யா, சீனா போன்ற நாடுகளில் தான் உறுதியாக கொண்டிருந்த பான வகைகள் சார்ந்த வியாபாரங்களிலிருந்து தன்னை விடுவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

2015ஆம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்து நாட்டின் பெருந்தோட்டத்துறை சார்ந்த ஏற்றுமதி சரிவை சந்தித்து வரும் நிலையில், இந்த வியாபார வெளியேற்றம் தொடர்பான தீர்மானத்தை டாடா பெவரேஜஸ் ஹோல்டிங்ஸ் மேற்கொண்டிருந்தது.

2017 ஜனவரி முதல் நவம்பர் வரையான முதல் பதினொரு மாத காலப்பகுதியில் நாட்டின் தேயிலை ஏற்றுமதி 265 மில்லியன் கிலோகிராம்களாக வீழ்ச்சியடைந்திருந்தது. 2000ம் ஆண்டில் பதிவாகியிருந்த 266 மில்லியன் கிலோகிராம்கள் எனும் தொகைக்கு நிகரான குறைந்த ஏற்றுமதி பெறுமதியை பதிவு செய்த ஆண்டாக 2017 பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**120 கோடி ரூபாய்களுக்கு இந்தப் பங்கு பரிமாற்றம் நடந்தேறியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் தற்போது வட்டவளை பெருந்தோட்ட கம்பனியின் நிர்வாகிக்கும் 60 சதவீத பங்குகளை சன்ஷைன் ஹோல்டிங்ஸ் தன்வசம் கொண்டுள்ளதுடன், எஞ்சிய பங்குகள் பிரமிட் வில்மர் பிளான்டேஷன் நிறுவனம் வசம் காணப்படுகிறது**




# ஜனவரி 20 முதல் இலங்கையில் IndiGo

ஜனவரி 20ஆம் திகதி முதல் கொழும்பு பண்டாரநாயக்க விமான நிலையத்திலிருந்து இந்தியாவின் சென்னை மற்றும் பங்களூர் ஆகிய நகரங்களுக்கு தனது விமான சேவையை முன்னெடுக்கவுள்ளதாக IndiGo அறிவித்துள்ளது.

இந்த சேவை அறிமுகத்தினூடாக இந்தியாவின் சென்னை மற்றும் பங்களூர் நகரங்களிலிருந்து இலங்கைக்கு பயணம் செய்யும் பயணிகளுக்கும் இலங்கையிலிருந்து இந்த நகரங்களுக்கு பயணம் செய்யும் பயணிகளுக்கும் சௌகரியமான சகாயமான மற்றும் காலம் தாழ்த்தாத பயண சேவையை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும் என அறிவித்துள்ளது.

இந்த புதிய விமான சேவைகளின் அறிமுகத்தினூடாக இந்தியாவின் வேகமாக வளர்ந்து வரும் விமான சேவை வழங்குநராக IndiGoவை நிலைநிறுத்த உதவியாக அமைந்திருக்கும். நிறுவனத்தின் வசம் A320 ரக விமானங்கள் 149 காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் தினசரி 1000க்கும் அதிகமான விமான சேவைகளை முன்னெடுக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. 49 விமான நிலையங்களுக்கு தனது சேவைகளை முன்னெடுக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தச் சேவை அறிமுகம் தொடர்பில் IndiGo நிறுவனத்தின் தலைவர் அதித்யா கோஷ் கருத்துத்தெரிவிக்கையில், "தெற்காசிய பிராந்தியத்தில் அதிகளவு சுற்றுலாப்பயணிகளை கவர்ந்த நகரங்களில் ஒன்றாக கொழும்பு அமைந்துள்ளது. கொழும்புக்கு எமது சேவைகளை விஸ்தரிப்பதில் நாம் பெருமை கொள்கிறோம். பிரத்தியேக மற்றும் வியாபார நோக்கங்களுக்காக இந்த நகரங்களுக்கு பயணம் செய்யும் பயணிகளுக்கு எமது சௌகரியமான மற்றும் சகாயமான விமான சேவை பெருமளவு அனுகூலங்களை வழங்கும்" என்றார்.

# 270 மில்லியன் அமெரிக்க டொலர் உதவி

ஒன்றிணைக்கப்பட்ட வீதி அபிவிருத்தித்திட்டம் மற்றும் யாழ்ப்பாணம் கிளிநொச்சி நீர் விநியோகத்திட்டம் போன்றவற்றை முன்னெடுப்பதற்காக 270 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு நிதி உதவியாக வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி முன்வந்துள்ளது.

தற்போது முன்னெடுக்கப்படும் ஒருங்கிணைக்கப்பட்ட வீதி அபிவிருத்தி செயற்றிட்டத்துக்கு அவசியமான 150 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கடனாக பெறப்பட்டதுடன், மேலும் கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கும் நீர் விநியோக செயற்றிட்டத்தை பூர்த்தி செய்ய மேலும் 120 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கடனாக பெறப்பட்டுள்ளது.

வீதி முதலீட்டுத்திட்டம் தற்போது ஆறு மாகாணங்களில் முன்னெடுக்கப்படுகின்றன. தெற்கு, மத்திய, சப்ரகமுவ, வட மேல், வட மத்திய மாகாணங்களிலும் மேல் மாகாணத்தின் களுத்துறை மாவட்டத்திலும் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்தத் திட்டத்தினூடாக 3108 கிலோமீற்றர் நீளமான கிராமிய மட்ட வீதிகளும், 248 கிலோமீற்றர் தேசிய வீதிகளும் புனரமைக்கப்பட்டு பராமரிக்கப்படும்.

இந்தத் திட்டத்துக்கான




மொத்த செலவீனம் 906 மில்லியன் அமெரிக்க டொலர்களாக மதிப்பிடப்பட்டுள்ளதுடன், இதில் 106 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கை அரசாங்கம் வழங்கியுள்ள நிலையில், எஞ்சிய 800 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஆசிய அபிவிருத்தி வங்கி ஆறு தவணைகளில் வழங்க முன்வந்துள்ளது. 407 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மூன்று தவணைகளில் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணம் கிளிநொச்சி நீர் விநியோகத்திட்டத்துக்கு 153 மில்லியன் டொலர்கள் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ள நிலையில் அதில் 33 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க இலங்கை அரசாங்கம் முன்வந்துள்ள நிலையில் எஞ்சிய 120 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்க இணங்கியுள்ளது.

# உலகின் சக்தி வாய்ந்த பொருளாதார நாடாக சீனா



உலகின் சக்தி வாய்ந்த பொருளாதார பலம் பொருந்திய நாடாக அமெரிக்காவை பின்தள்ளி சீனா 2032ஆம் ஆண்டளவில் திகழும் என பொருளாதார வல்லுநர்கள் எதிர்வுகூறியுள்ளனர்.

பொருளாதாரங்களுக்கான மையம் மற்றும் வியாபார ஆய்வுகள் ஆகியவற்றைச்சேர்ந்த ஆய்வாளர்களால் இந்த கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்த ஆய்வாளர்களால் 2032ஆம் ஆண்டளவில் உலகின் சிறந்த பொருளாதார சூழல் காணப்படும் நாடுகளின் தரப்படுத்தல் ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது. இதில் சீனாவைத்தொடர்ந்து இரண்டாமிடத்தில் அமெரிக்காவும், இந்தியா, ஜப்பான், ஜேர்மனி மற்றும் பிரேசில் ஆகியன முதல் ஆறு இடங்களில் காணப்படும் எனவும், ஏழாம் இடத்தில் ஐக்கிய இராஜ்ஜியமும், தென் கொரியா எட்டாமிடத்திலும் தரப்படுத்தப்பட்டுள்ளன. இந்த தர வரிசையில் இறுதி இரு இடங்களில் ரஷ்யா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகள் தரப்படுத்தப்பட்டுள்ளன.

## செலிங்கோ லைஃவ் உபமாலிகா ரத்நாயக்கவுக்கு
# ஆண்டின் சிறந்த தகவல் அதிகாரிக்கான விருது

செலிங்கோ லைஃவ் நிறுவனத்தின் பிரதம டிஜிட்டல் அதிகாரி திருமதி. உபமாலிகா ரத்நாயக்க இந்த ஆண்டின் சிறந்த தகவல் அதிகாரிக்கான விருதை வென்றுள்ளார். இலங்கையில் தகவல் தொழில்நுட்பத்தில் பெண்கள் எனும் அமைப்பு முதற்தடவையாக ஒழுங்கு செய்திருந்த தகவல் தொழில்நுட்பத்தில் பெண்கள் (WITA) விருது வழங்கும் நிகழ்விலேயே அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டிருந்தது.

புதிய கண்டு பிடிப்புக்கள், தலைமைத்துவம், கடந்த 18 மாத காலத்தில் தகவல் தொழில்நுட்ப சாதனைகள் என பல அம்சங்கள் தொடர்பாக பிரதம தகவல் அதிகாரிகளாகப்பணியாற்றும் பெண்கள் மத்தியில் நடத்தப்பட்ட விரிவான மதிப்பீடுகளின் பின்பே இந்த விருதுக்குரியவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

திருமதி ரத்நாயக்கவுககு கிடைத்துள்ள இந்தக் கௌரவம் பற்றி கருத்து வெளியிட்ட செலிங்கோ லைஃவ் பிரதம நிறைவேற்று அதிகாரியும் முகாமைத்துவப் பணிப்பாளருமான ஆர்.ரெங்கநாதன் "இன்று எந்த ஒரு வர்த்தகத்தை எடுத்துக் கொண்டாலும் புத்தாக்கமும் தகவல் தொழில்நுட்பத்தின்



பிரயோகமும் அவற்றின் வெற்றிக்கு இன்றியமையாதவை. எமது பிரதம தகவல் அதிகாரி இந்த விருதை வென்றுள்ளமை எமக்கு பெருமை அளிக்கின்றது. எமது குழுவில் அவர் மிகவும் பெறுமதி மிக்க ஒரு உறுப்பினர். அவர் இந்த கீர்த்திமிக்க விருதுக்கு முற்றிலும் தகுதி உடையவர்" என்று கூறினார்.

கடந்த எட்டு வருடங்களாக உபமாலிகா ரத்நாயக்க செலிங்கோ லைஃவ் டிஜிட்டல் செயற்பாடுகளுக்கு தலைமை தாங்குகிறார். கடந்த 18 வருடங்களாக இவர் இந்த நிறுவனத்தில் பணியாற்றுவதுடன், இந்நிறுவனத்தின் முதலாவது பிரதம தகவல் அதிகாரியாகவும் இவர் திகழ்கின்றார்.

**பிரிட்டிஷ் கணினி கழகத்தின் (MBCS) உறுப்பினரான இவர், அவுஸ்திரேலிய கணினி கழகம், மற்றும் தகவல் தொழில்நுட்ப பட்டய தொழிற்சார் நிபுணர்கள் சங்கம் என்பனவற்றினதும் உறுப்பினராக உள்ளார்**

பிரிட்டிஷ் கணினி கழகத்தின் (MBCS) உறுப்பினரான இவர், அவுஸ்திரேலிய கணினி கழகம், மற்றும் தகவல் தொழில்நுட்ப பட்டய தொழிற்சார் நிபுணர்கள் சங்கம் என்பனவற்றினதும் உறுப்பினராக உள்ளார். CISA (ISACA) கொழும்பு பல்கலைக்கழக கணினி பிரிவின் கணினி விஞ்ஞானத்தில் MSc (MCS) போன்ற இதர தகைமைகளையும் அவர் கொண்டுள்ளார். 2013ஆம் ஆண்டு திருமதி ரத்நாயக்க தென்கிழக்கு ஆசிய பிராந்திய கணினி சம்மேளனத்தின் (SEARCC) அந்த ஆண்டின் சிறந்த பெண் தகவல் தொழில்நுட்ப தலைமைத்துவத்துக்கும் தெரிவு செய்யப்பட்டார். இந்த அமர்வானது ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் உள்ள சர்வதேச ரீதியான தகவல் தொழில்நுட்ப விற்பன்னர்களைக் கொண்ட ஒரு அமைப்பாகும்.

# Ford Power Tools களின் ஏக முகவராக Alcobronz

இலங்கையில் "FORD" வலுக்கருவிகள், கராஜ் கருவிகள், கைகருவிகள், வலுச்சாதனங்கள் மற்றும் தூசி உறிஞ்சிகள் போன்றவற்றுக்கான ஏக முகவராக Alcobronz (Pvt) Limited நியமிக்கப்பட்டுள்ளது. இதற்கான உடன்படிக்கை நேரடியாக ஆர்ஜன்டீனா Ford மோட்டார்ஸ் உடன் கைச்சாதிடப்பட்டுள்ளதுடன், இலங்கைச்சந்தையில் விற்பனை செய்யப்படும் இத்தயாரிப்புக்கள் டுபாய் Ford Tools நிறுவனத்திடமிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன.

Alcobronz நிறுவனத்தின் பரந்த விநியோக வலைப்பின்னலினூடாக இந்த Ford தயாரிப்புக்கள் நாடு முழுவதிலுமுள்ள வாடிக்கையாளர்களுக்கு விநியோகம் செய்யப்படும். இறக்குமதி செய்யப்பட்டு விநியோகிக்கப்படும் இந்த பரந்த தயாரிப்புக்களின் தொகுப்பில், Ford பவர் டூல்ஸ், Ford கராஜ் டூல்ஸ், Ford ஹாண்ட் டூல்ஸ், Ford LED லைட்டிங், Ford பவர் டூல்ஸ் உபகரணங்கள் மற்றும் Ford தூசி உறிஞ்சி போன்றன உள்ளடக்குகின்றன.

Alcobronz (Pvt) Ltd நிறுவனத்தின் தலைமை நிர்வாக உத்தியோகத்தர்/இயக்குனர் சந்துல பெரேரா இவ்விநியோகம் குறித்து உரையாற்றுகையில், "Alcobronz நிறுவனம் தனது மர வேலை மற்றும் உலோக வேலை இயந்திர உற்பத்தியாளராக மாத்திரமன்றி விற்பனையின் பின்னரான சேவைகளுக்காகவும் தனக்கானதொரு நாமத்தை உருவாக்கியுள்ளது. உலகளாவிய ரீதியாக அங்கிகரிக்கப்பட்ட வர்த்தக நாமமான Ford Power Tools நிறுவனத்துடன் இணைவதன் மூலம் மர வேலை இயந்திரங்களுக்கான வழங்கீடு மற்றும் விநியோகத்தில் இலங்கை சந்தையின் முன்னோடியாக எங்களது நிலையை உறுதி செய்யப்படுகின்றது" என்று குறிப்பிட்டார்.

# சுவதேஷி சேஃப்ளஸ் சிட்ரோ அறிமுகம்

சுவதேஷி இன்டஸ்ரியல் வேர்க்ஸ் பிஎல்சி, 'சுவதேஷி சேஃவ் ப்ளஸ் சிட்ரோ' மூலிகையால் தயாரிக்கப்பட்ட நுளம்புகள் ஒழிக்கும் தயாரிப்பை அறிமுகம் செய்துள்ளது.

சுவதேஷி நிறுவனத்தின் ஆய்வுகள் மற்றும் அபிவிருத்தி பிரிவினால் பல ஆண்டு காலமாக மூலிகை சேர்மானங்களைக்கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் மூலமாக நுளம்புகளின் தாக்குதல்களுக்கு எதிராக பயன்படுத்தக்கூடிய இந்த தயாரிப்பு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

தற்போது இலங்கையில் டெங்கு நோய் நுளம்புகளால் பரவி வருகிறது. இது இலங்கையர்களுக்கு மாபெரும் பிரச்சனையாக அமைந்துள்ளது.

'சுவதேஷி சேஃவ் ப்ளஸ் சிட்ரோ' மூலிகை நுளம்பு கட்டுப்படுத்தல் தயாரிப்பில், சிட்ரனெல்லா, கராம்பு எண்ணெய், இயுக்கலிப்டஸ் மற்றும் லெமன்கிராஸ் ஆகியன உள்ளடங்கியுள்ளன. இவற்றில் இலங்கையர்கள் பல ஆண்டுகால நம்பிக்கையை கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பழங்காலத்தில் இலங்கையில் நுளம்புகளை விரட்டுவதற்கு




இயற்கை சிட்ரனெல்லா மற்றும் லெமன்கிராஸ் ஆகியவற்றை பயன்படுத்தியிருந்தனர்.

மூலிகை பிரத்தியேக பராமரிப்பு தயாரிப்புகள் உற்பத்தில் இலங்கையில் 75 வருட கால வரலாற்றை சுவதேஷி கொண்டுள்ளது. சுவதேஷி கொஹோம்பா, ராணி, கொஹோம்பா பேபி மற்றும் சேஃவ் ப்ளஸ் ஆகியன இந்நிறுவனத்தின் முதல்தர தயாரிப்புகளாக அமைந்துள்ளன.

நிறுவனத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவிக்கையில், "நாம் எமது தயாரிப்புகளை விஸ்தரித்து வருகிறோம். அதாவது மற்றுமொரு தயாரிப்பை அறிமுகம் செய்யாமல், சூழலுக்கும் சமூகத்துக்கும் பயனுள்ள வகையிலான தயாரிப்புகளை அறிமுகம் செய்கிறோம். மக்களின் வாழ்க்கைக்கு பெறுமதி சேர்க்கும் தயாரிப்புகளை அறிமுகம் செய்ய நாம் எம்மை அர்ப்பணித்துள்ளோம்" என்றார்.

# MBSL குருநாகல் கிளை தரமுயர்வு

சகல வசதிகளையும் படைத்த கிளையாக MBSL நிறுவனத்தின் குருநாகல் கிளை புதிய மெருகேற்றங்களுடன் தற்போது மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது. MBSL நிறுவனத்தில் காணப்படும் சகல நிதி சேவைகளும் ஏனைய சகல வசதிகளும் குருநாகல் மக்களைப்போன்று, வட மேல் மாகாணத்தின் சகல மக்களுக்கும் மிகவும் வினைத்திறன் வாய்ந்த வகையில் பெற்றுக்கொடுப்பதற்கு MBSL நிறுவனம் எதிர்பார்க்கிறது. வடமேல் மாகாணம் இலங்கையில் காணப்படும் மாகாணங்களில், பொருளாதார ரீதியில் மிகவும் சௌபாக்கியமாக மாகாணமாக கருதப்படுகிறது. நெல் மற்றும் தேங்காய் ஆகியன மாகாணத்தின் பிரதான செய்கைகளாக அமைந்துள்ளன. வாழை, வெற்றிலை, மிளகு மற்றும் மரக்கறி போன்றனவும் அங்கு மேலதிக பயிர்களாக பயிரிடப்படுகின்றன. கால்நடைகள் பராமரிப்பும், நீர்நிலைகள் பராமரிப்பு, கூரை ஓடுகள் மற்றும் செங்கல் தொழிற்துறை போன்றன வட மேல் மாகாணத்தின் பிரதான தொழிற்துறைகளாக அமைந்துள்ளன. வெளிநாடுகளில் பணியாற்றும் ஊழியர்களின் பெருமளவானோர், வடமேல்



**வடமேல் மாகாணம் இலங்கையில் காணப்படும் மாகாணங்களில், பொருளாதார ரீதியில் மிகவும் சௌபாக்கியமாக மாகாணமாகும் நெல், தேங்காய் ஆகியன பிரதான செய்கைகளாக அமைந்துள்ளன**

மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்கள் இந்நாட்டுக்கு அனுப்பும் பணத்தின் பெரும் பகுதி, அப்பிரதேசத்தின் பொருளாதாரம் மற்றும் சமூக கட்டியெழுப்பல் நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றன.

அதன் பிரகாரம், கடந்த மூன்று தசாப்த காலப்பகுதியினுள், வட மேல் மாகாணத்தில் பொருளாதார சௌபாக்கியம் மற்றும் சமூக அபிவிருத்தி போன்றன இடம்பெற்றுள்ளன. தற்போதும், புதிய பொருளாதார வலயங்கள் பல வட மேல் மாகாணத்தில் உருவாக்கப்படுகின்றன. வடக்கு மற்றும் மத்திய மாகாணங்களுக்கு நிர்மாணிக்கப்படும் அதிவேக நெடுஞ்சாலைகளில் பெரும்பகுதி, வட மேல் மாகாணத்தினூடாக நிர்மாணிக்கப்படுகின்றன. இதன் காரணமாக, முன்னொருபோதுமில்லாத வகையில் வட மேல் மாகாணத்தில் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி போன்றன வட மேல் மாகாணத்தில் இடம்பெறும். வட மேல் மாகாணத்தின் தலைநகராகவும், பிரதான பொருளாதார நகராகவும் குருநாகல் திகழ்கிறது.


வியன்னா, ஒஸ்திரியா

# புதிய நம்பிக்கையுடன்...

2018ஆம் ஆண்டின் பிறப்பை, உலகெங்கிலும் உள்ள மக்கள், புதிய நம்பிக்கைகளுடன் நேற்று வரவேற்றுக் கொண்டாடினர். அவ்வாறு, உலகின் பல்வேறு பகுதிகளிலும் புத்தாண்டை வரவேற்பதற்கான வாணவேடிக்கைகளையும் ஒன்றுகூடல்களையும், இப்படங்களில் காணலாம்.


ஏதென்ஸ், கிரேக்கம்


பெய்ரூட், லெபனான்



நியூயோர்க், ஐ.அமெரிக்கா


:.பிராங்பேர்ட், ஜேர்மனி


இலண்டன், ஐ.இராச்சியம்


றியோ டி ஜெனீரோ, பிரேஸில்


வல்பரைஸோ, சிலி



பரிஸ், பிரான்ஸ்


ஜ"ப்ஜனா, சுலோவேனியா


ஸ்கொட்லாந்து


பரிஸ், பிரான்ஸ்


பியோங்கியொங், வடகொரியா


ஈபிள் கோபுரம், பிரான்ஸ்


த ஹேக், நெதர்லாந்து


நியூயோர்க், ஐ.அமெரிக்கா


சிட்னி, அவுஸ்திரேலியா

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 2 ஜனவரி 2018, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.